வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE ROAD, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 வைகாசி திங்கள் 26-ம் நாள் (9—6—1963) ஞாயிற்றுக்கிழமை முஹறம் 16 | இதழ் 2

# தியாகச் செம்மல் அமரரானார்



அமரர் திரு. கந்தையா அவர்கள்

## மறைந்த நம் தலைவருக்கு மக்களின் இறுதி அஞ்சலி

மறைந்த தலைவருக்கு இறுதி மரியாதை தெரிவிக்குமுகமாக மக்கள் வெள்ளம் யாழ்ப்பாணத் தெருக்களிலே அலைமோதியது. இலங்கைத் தீவின் பல பாகங்களிலிருந்தும் தலைவருக்கு அஞ்சலி செலுத்த மக்கள் திரண்டு வந்திருந்தனர். நகரமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பூதவுடலைத் தரிசித்துக் கண்ணீர் பெருக்காதாரிலர். ஆண்களும் பெண்களும், குழந்தைகளுமாய் ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செய்தனர்.

இறுதிவரை உறுதியுடன் தமிழுக்காகப் போரிட்டு, பொலிசாரின் தடி அடிக்கு இலக்காகி, அதனால் உடலிலே நோயைத் தாங்கி இறுதியில் தன் வாழ்வை முடித்துக் கொண்ட தீரனைக் காண வந்திருந்தனர் மக்கள். பாடையிலே படுத்து உறங்கும் பெரியாரைப் பார்க்கப் பைந்தமிழர் கூட்டம் கூடிற்று.

யாழ் நகரமே சோபை இழந்தது. சோகக் கடலில் அமிழ்ந்தது. கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டன. அமரர் கந்தையா அவர்கள் இத்தனை தூரம் மக்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமாயிருந்தார்.

## பொலீஸ் தடியடி ஊர்காவற்றுறை பிரதிநிதி உயிரைக் குடித்தது?

### மார்பு வலி

கடந்த ஜனவரி மாதம் 5ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு மந்திரி இலங்கரெத்தின சென்றிருந்தார். அவருக்கெதிராக தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வே. அ. கந்தையா அவர்களின் மார்பில் பொலீசார் குண்டாந்தடி கொண்டு தாக்கினர். யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட திரு. கந்தையா இரண்டு நாட்கள் அங்கே தங்கிச் சிகிச்சை பெற்ருர். அப்போதிருந்தே அவருக்கு மார்பு வலி நோய் ஏற்பட்டது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் மீண்டும் மார்பு வலி அதிகமாகியதும், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காகச் சென்ருர். கடந்த செவ்வாய்க்கிழமை காலை 7 மணிவரை தமது மனைவியாருடனும் உறவினர்களுடனும் உரையாடிக் கொண்டிருந்தவர், சரியாக 7-45க்குத் தன் படுக்கையில் காலமாகிவிட்டார்.

### தலைவர்கள் விரைந்தனர்

செய்தி கிடைத்ததும் தமிழரசுத் தலைவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்துக்கு விரைந்து சென்றனர். தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஆழ்ந்த துயரத்துள் மூழ்கினர்.

செவ்வாய்க்கிழமை காலையிலேயே யாழ்ப்பாணம் நல்லூர் வீதியிலுள்ள திரு. கந்தையாவின் புதல்வி வீட்டுக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது. 5ம் திகதி புதன்கிழமை 10 மணிக்கு தமிழரசுக் கட்சியினர் திரு. கந்தையாவின் பூதவுடலை ஏற்று நகர வீதிகளுக் கூடாக ஊர்வலமாக நகரமண்டபத்துக்கு எடுத்துச் சென்றனர். அங்கே பிற்பகல் 3-30 மணி வரை மக்கள் தரிசனத்துக்காக திரு. கந்தையாவின் சடலம் வைக்கப்பட்டிருந்தது.

### இறுதி மரியாதை செலுத்தினர்

பல பகுதிகளிலிருந்தும் சாரிசாரியாக மக்கள் வெள்ளம் நகர சபையை வந்து மோதிய வண்ணமே இருந்தது. மறைந்துவிட்ட மாபெரும் தலைவருக்குத் தங்கள் இறுதி மரியாதையை அளிக்க மக்கள் அணியணியாக வந்தனர். கண்களில் கண்ணீர் மல்க தலைவருக்கு அஞ்சலி செய்தனர்.

அறுபத்திரண்டு வயதான திரு. வே. அ. கந்தையா அவர்களுக்கு இரு பெண்களும் ஒரு ஆணும் உள்ளனர். யாழ்ப்பாணத்திலுள்ள டாக்டர் வேலுப்பிள்ளை என்பவர் திரு. கந்தையாவின் மூத்த மகளை விவாகம் செய்துள்ளார்.

### விவசாயியின் மகன்

ஒரு விவசாயியின் மகனாகப் பிறந்த திரு. கந்தையா விவசாயத்துறையில் மிகுந்த ஈடுபாடுடையவர். அத்துறையிலீடுபடுபவர்களுக்கும் போதுமான ஊக்கமும் அளித்து வந்துள்ளார்.

கொழும்பு சென்ட் ஜோசப் கல்லூரியில் 9 வருடங்களாகப் பணிபுரிந்தபின்னர் சட்டப் படிப்பை மேற்கொண்டு சிறந்த நியாய துரந்தரராகக் கடமை

(8-ம் பக்கம் பார்க்க)

## திரு. கந்தையா பிரிவு ஈடுசெய்ய முடியாத இழப்பு

## இரங்கற் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை பேச்சு

'கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ் பேசும் இனம் மூன்று முக்கிய தலைவர்களை இழந்துவிட்டது. இழந்துவிட்ட உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் திரு. வி. ஏ. கந்தையா எம்மைப் பிரிந்த செய்தி எம்மால் தாங்க முடியாத பேரிடியாகக் கேட்டது.', யாழ்ப்பாண நகர மண்டபத்தில் பொதுமக்கள் தரிசனத்துக்காக திரு. வி.ஏ. கந்தையா அவர்களின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து நடைபெற்ற இரங்கற் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறினுர்.

தொடர்ந்து பேசுகையில் திரு. செல்வநாயகம், "திரு. கந்தையா கல்வி கற்ற பின்னர், சிறந்த நியாயவாதியாகப் பணிபுரிந்தார். கடந்த ஏழு வருடங்களாக அரசியலில் ஈடுபட்டு ஊர்காவற்றுறையின் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்து தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போரில் அயராது பங்கு கொண்டுழைத்தார். அரசியல் வாழ்க்கையை மேற்கொண்ட காலத்தில் மிகப் பெரிய நெருக்கடிகளைத் தாங்க வேண்டியிருந்தது. பாராளுமன்றத்துள்ளும் பல பொறுப்புவாய்ந்த கடமைகளை மேற்கொண்டு சிறப்புறக் காரியமாற்றி வந்தார். சமீபத்தில் அரசாங்க நிதிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் அனுதாபக் கூட்டம்

ஜூன் 5ம் திகதியை தமிழ் கலை கலாச்சார தினமாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை திருகோணமலை தமிழரசுக் கட்சிக்கிளை செய்திருந்தது. திரு. வே. அ. கந்தையா அவர்களின் மறைவினல் அதே தினத்தை திருமலையில் வழக்கம் போல் துக்கதினமாக அனுட்டிக்க வேண்டியேற்பட்டுவிட்டது.

திருகோணமலை துறைமுகத் தொழிலாளர் கழகத் தலைவர் திரு. க. போ. செல்லத்துரை தலைமையில் அனுதாபக் கூட்டம் திருமலை மைதானத்தில் நடைபெற்றது. திரு. வீரசுப்பிரமணியம், திரு. ஈழத்துநாதன், திரு. க சொக்கலிங்கம், திரு. சோமசுந்தரம் ஆகியோர் பேசினுர்கள்.

கூட்டத்துக்கு முன்னர் நிலாவெளியிலிருந்து மாபெரும் சைக்கிள் ஊர்

(8-ம் பக்கம் பார்க்க)

# முற்போக்கு எழுத்தாளரின் உட்போக்கு

## தமிழ் இனத்தை அழிக்கும் சதிப்போக்கு

### நம்மவர் விழிப்போடு இருக்கவேண்டும்

சிலகாலமாக "முற்போக்கு எழுத்தாளர் சங்கம்" என்ற பெயரோடு ஒரு குழு இயங்கி வருவதை தமிழ் அன்பர்களும் எழுத்தாளர்களும் அறிவார்கள். இவர்கள் தாம் "யதார்த்த" அடிப்படையில் "மண்வாசனை" வீச "தேசிய மக்கள் இலக்கியத்தை" "முற்போக்குத்" தன்மையில் படைத்து வருவதாகக் கூறிக்கொண்டு கூட்டங்கள் கூட்டி விழாக்கள் எடுத்து வருகிறார்கள்.

#### புதுமை இலக்கியம்

மற்றைய தமிழ் எழுத்தாளர்களை விட எந்த விதத்தில் "புதுமை இலக்கியம்" இவர்கள் படைக்கிறார்கள் என்ற கேள்வி சில தமிழ் மக்கள் உள்ளத்தில் எழுந்ததேனும், ஏதோ அவர்களும் தமிழ் மொழிக்குப் புது முறையில் பணியாற்றத் துடிக்கிறார்கள் எனக்கருதி அவர்களோடு ஒத்துழைத்தனர். மற்றும் சிலர் தமிழை வளர்க்கின்ற உரிமை எவருக்கும் உண்டுதானே என்று கருதி ஏதோ அவர்களும் தமிழ் வளர்க்கிறார்கள் என்ற பெருநோக்கோடு வாளாய் இருந்தார்கள்.

#### பொதுவுடைமைக் கொள்கை பரப்பல்

முற்போக்கு எழுத்தாளர் குழுவினரும் இந்தச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்தும் நோக்கோடு ஆண்டு விழாக்கள், பாரதி, நாவலர், கணேசையர், விபுலானந்தர் போன்ற பெரியார் நினைவு விழாக்களை ஏற்படுத்தி மெல்ல மெல்ல-நாசூக்காக-திரை மறைவிலேயே தமது பொதுவுடைமைக் கொள்கைகளை இலக்கியப் போர்வையில்பரப்பமுயன்றார்கள். இவையே இவர்களின் உட்போக்கை உணர்த்த போதிய சான்றாய் அமைகிறது எனினும் இக் காரணம் கொண்டு மட்டும் இவர்களை வெறுத்து ஒதுக்கத் தேவையில்லை. எமது வாழ்வியல் முறைக்கும் எமது ஆன்மீக இயல்பிற்கும் குடியாட்சிப் பண்பிற்கும் இவர்களின் மாக்சீய பொது உடைமைக் கொள்கைகள் மாறுபட்டதாய் விளங்கினும் தம் அறிவிற்கு எட்டிய வரையில் ஏழை மக்களின் நல் வாழ்வு

ஈழவேந்தன்

நோக்கி உலகப் பொதுவுடைமை பேசுகிறார்கள் என்று கருதி அவர்களின் கோட்பாட்டை ஏற்காவிடினும் வெறுத்து ஒதுக்காது பொறுமையோடு இருந்தோம்.

#### சிங்கள ஆதிக்கத்தின் அடிவருடிகள்

ஆனால் காலப் போக்கில் அவர்கள் போக்கு மிகவும் வியப்பூட்டும் முறையில் மாறிக்கொண்டு வந்தது. மேற்சத்திய வல்லரசுகளின் ஏகாதிபத்திய வெறியை எதிர்க்கிறோம், அமெரிக்க ஆதிக்க வெறியை ஒழிக்கிறோம், பொதுவுடைமை எங்கும் பூத்துக் குலுங்கச் செய்கிறோம் என்று கூறியவர்கள், ஈழத்தில் செந்தமிழ் பேசும் இனம் சீரழியும் இழிநிலை பற்றி சிறிதும் சிந்தியாது சிங்கள ஆதிக்கவெறியின் அடிவருடிகளாக மாறி "தேசியம்" பேசினர். "மதமென்பது மக்களை மயக்கும் அபின்" (Religion is the opium of the masses) என்று கூறிய கால்ஸ்மார்க்கின் தத்துவத்தை தலை மேல் வைத்துப் போற்றியவர்கள் சிங்கள ஆதிக்க வெறியின் சின்னமாக விளங்கும் புத்த குருமார்களின் கால்களை வருடி தம் விழாக்களில் முக்கியத்துவம் கொடுத்தனர்.

உலகில் எங்கேயாவது மூலை முடுக்குகளில் தம் பொதுவுடைமைக் கொள்

(13-ம் பக்கம் பார்க்க)




ஈழத்து எழுத்தாளர்களை வழி நடத்தி வருவதாகத் தம்பட்டமடிக்கும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இலக்கிய வளர்ச்சிக்காகவும், எழுத்தாளர்களுக்குக் கவுரவமும் ஊக்கமும் அளிப்பதற்காகவும் மாநாடுகளையும் விழாக்களையும் நடாத்துவதாகக் கூறிக்கொண்டாலும், அதன் அந்தரங்க எண்ணம் வேறு. சுயமாகச் சிந்தித்துச் சொற்பொழிவாற்றுவதற்குத் தகுதியில்லாத அதன் அங்கத்தவர்களுக்கு மேடையேற ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதற்காகவும் வேறு பல துறைகளில் பிரபலமாயிருக்கும் பிரமுகர்களைத் தம வலையில் வீழ்த்துவதற்காகவுமே இப்படியான மாநாடுகளை நடத்துகின்றது.

நீதிபதிகளும், டாக்டர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் வாதிகளும் அவர்களின் விழாக்களுக்கு அழைக்கப்படுவதின் மர்மம் இதுதான். இப்படி அழைக்கப்படும் பிரமுகர்கள் சிலர், அவர்களுடைய வலையில் விழுந்து விடுவது உண்மைதான். ஆனால் சுயமான கொள்கையுடையவர்கள், தங்களுடைய கருத்துக்களை எவ்வித அச்சமுமின்றி வெளிப்படையாகத் தெரிவித்து விடுவார்கள்.

சிலவாரங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் அவர்களுடைய மாநாடு நடந்ததல்லவா? அதைத் திறந்து வைக்க ஒரு வைத்திய கலாநிதியும், தலைமை வகிக்கப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவரும் அழைக்கப்பட்டார்கள். அழைப்பை ஏற்று இருவரும் மாநாட்டிற்குச் சென்றார்கள், வைத்திய கலாநிதி அவர்கள், இனப் பற்றுடையவர். ஆனால் முற்போக்கு எழுத்தாளர்கள், தேசிய ஐக்கியம் என்று சொல்லிக் கொண்டு, சாதி வெறியையும் வகுப்பு வேற்றுமையையும் வளர்ப்பவர்கள். மொழிப் பற்றையும் இனப் பற்றையும் கிண்டல் செய்யும் முற்போக்கு எழுத்தாளர்களைக் கண்டித்து, எழுத்தாளர்களில் முற்போக்கு, பிற்போக்கு என்ற வித்தியாசம் இல்லை, எல்லாரும் தமிழின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்; எத்தனையோ மைல்களுக்கப்பாலுள்ள ஒரு அரசியல் முறையை இங்கு கொண்டுவந்து புகுத்துவதற்காக அதைப் பற்றி பிரசாரம் செய்வது முற்போக்கு எழுத்தாளர் செய்யும் தவறு என்று குறிப்பிட்டார் வைத்திய கலாநிதி.

தன்னுடைய அரசியல், சமுதாயக் கொள்கைகளைப் பேராசிரியரின் வாய் மூலம் வெளிப்படுத்த வேண்டும் என்று சிங்கப்பூரார் எவ்வளவோ முயன்றும், அதற்குக் கட்டுப்பட மறுத்தார் பேராசிரியர். "முற்போக்கும் மண்ணாங்கட்டியும். எனக்கு இந்த முற்போக்கு என்றாலே என்னவென்று விளங்கேல்லை" என்று தொடங்கி, முற்போக்கு எழுத்தாளர்க...

(15-ம் பக்கம் பார்க்க)


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.





## மறையாம் குறளைப் படித்திடுவோம்

—ப. இராசகுரு—



அறம்பொருளின் பென்னும் அதிகாரம் மூன்றும்
முறைமுறையே வைத்த முனிவன்—கறைநீக்கி
ஞாலத்தார்க் கிந்தான் நலம்சேர் திருக்குறளை
சாலவே போற்றிடுவோம் சார்ந்து

அருமறை யென்றே அனைவரும் போற்ற
இருமையும் நற்பே றளிக்கும்—திருக்குறளை
ஞாலத்தார்க் கிந்தருளும் ஞான முறை
வள்ளுவன்தன்
சீலத்தைப் போற்றிடுவோம் சேர்ந்து.

தேன்சேர்த்துப் பால்சேர்த்துப் பாகும் சேர்த்து
தீங்கனியின் சாற்றினையும் சேர்த்த செம்மல்
வான்சேர்க்கும் வழியெங்கே கண்டீர் என்றால்
வாய்மையுடன் குறள்முழுதும் கற்பீர் ஆயின்
ஊன்சேர்ந்த உணவுண்டல் ஒழிப்பீர் அன்றே
உயிரெல்லாம் உமையேத்தும் அழகு காண்பீர்
நான்சேர்ந்து மறையிதனை ஓதும் தோறும்
நண்ணுமின்பம் ஒருநாவால் நவிலப் போமோ.

சங்கம் சார்ந்த நூல்களிலே
சால்பு பெற்ற நூலாமே
தங்கம் போன்ற கருத்துகளும்
திருக்கி வாழும் இந்நூலில்
வங்கம் சூழ்ந்த உலகத்தோர்
வாயில் நாளும் உலவிடுமே
பங்கம் இன்றிப் பயின்றிடுவோம்
பழுதில் இன்பம் தந்திடுமே.

இடமே அகன்ற உலகெங்கும்
ஈசன் வாழ்வான் அதுபோலே
திடமே வாழும் திருக்குறளும்
சிறிதும் சங்கை இதிலேது
நடமே பயிலும் நாயகனை
நாளும் பொழுதும் தொழுதேற்றி
மட்மை நீங்கி வாழ்ந்திடுவோம்
மறையாம் குறளைப் படித்திடுவோம்.




செல்வி ஜெயராணி வேலாயுத பிள்ளை, இபாறளை

கே: தங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?

ப: வாசகர்களைச் சிரிக்கத் தூண்டுவது—சிரித்த பின் சிந்திக்கத் தூண்டுவது.

ஃ

இ. இராசையா, பலாங்கொடை

கே: தமிழரசுக் கட்சியினரின் நேரடி நடவடிக்கை மக்களுக்கு மேலும் கஷ்டத்தைக் கொடுக்குமென சிலர் அபிப்பிராயப்படுவது உண்மையா?

ப: விடுதலைப் போர் என்பது பஞ்சு மெத்தையல்ல. தியாகமின்றி சுதந்திர மனிதர்களாக வாழ முடியாது. அடிமையாயிருப்பதை விட அடிமைத் தளையை அறுத்தெறியும் போராட்டத்திலே கஷ்ட நஷ்டங்களை அனுபவிப்பது மேலல்லவா?

ஃ

ஏ. ஆதம் லெவ்வை, அக்கரைப்பற்று

கே: கடன் கொடுக்கத் தகுதி உள்ளவர் யார்?

ப: கடன் வாங்கினவன் நரகத்துக்குச் சென்றாலும் விடாது அவனைப் பின் தொடர்ந்து செல்லக் கூடியவனே கடன் கொடுக்கத் தகுதியானவன்!

ஃ

எம். எம். மர்ஜின், கிண்ணியா 9

கே: மூதூர் இரண்டாவது எம். பி. மஜீது விடுத்த வட்ட மேசை மகாநாடு அறிக்கை ஒரு தமிழ்த் தினசரியில் மட்டுந்தானே வெளிவந்தது. மற்றப் பத்திரிகைகளில் வெளிவரவில்லையே, இதன் இரகசியம்யாதோ?

ப: தமிழரசுக் கட்சிக்கு எதிராக யாராவது துரும்பை உயர்த்தினாலும் தூணை உயர்த்தினார் என்று பெரிய எழுத்தில் பிரசுரிக்கும் பத்திரிகை அது. அதுதான் இரகசியம்.

ஃ

தமிழரசு அபிமானி, இராமநாதபுரம்,

கே: சேனநாயக்கா அரசாங்கம் இருக்கும் போது ஐம்பதுக்கு ஐம்பது கேட்ட திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தற்பொழுது என்ன கேட்டுக்கொண்டிருக்கிறார்?

ப: 50-க்கு 0.

கே: 5 வருடங்களில் திருமலை ஒரு சிங்கள நாடாய்விடும் என்று கூறுகிறார்களே! அப்படி நடைபெறுமா?

ப: நடைபெறும்— தமிழ் பேசும் மக்கள் உரிமைகளை இழந்து அடிமைகளாக வாழ விரும்பினால்.

கே: தங்களிடம் ஒருவரும் கேட்காத கேள்வி எது?

ப: உங்களின் இந்தக் கேள்வியை வேறுயாரும் என்னிடம் கேட்கவில்லை.

ஃ

அ. சிவப்பிரகாசம், ஏழாலை மேறகு.

கே: அண்மையில் நடைபெற்ற இந்திய லோகசபை உப தேர்தல்களில் ஆளும் கட்சியாகிய காங்கிரசின் தோல்வி எதைக் காட்டுகிறது?

ப: காங்கிரஸின் கோட்டை சரிவதையே எடுத்துக் காட்டுகிறது. பாதுகாப்பு என்ற பெயரால் மக்களைக் கசக்கிப் பிழியும் வளரும் வரிப்பளுவும், தங்கக் கட்டுப்பாடும், மக்கள் விரும்பாத சில மசோதாக்களும், காங்கிரஸின் செல்வாக்கைக் குலைத்து வருகின்றன.

கே: கல்முனை தொகுதியிலிருந்து தமிழரசுக் கட்சியினால் துரத்தி அடிக்கப்பட்டபின் மொழிப்பிரச்சினையில் மௌனம் சாதித்த எம். எஸ். காரியப்பர் தற்பொழுது அப் பிரச்சினையைப் பற்றிப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டதின் நோக்கம் என்ன?

ப: தானும் பிரதமரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள. அந்த

> **திருவாளர்**
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

வாய்ப்பு கிடைத்துவிட்டால் செனட் சபையையும் ஒரு கை பார்க்கலாம் அல்லவா?

கே: டாக்டர் என். எம். தற்பொழுது என்ன செய்கிறார்?

ப: மீண்டும் திரு. பிலிப் குணவர்த்தனாவின் செல்வாக்குள் அடங்கி வருகிறாராம்.

ஃ

சூ. மரியதாசன், உருத்திரபுரம்.

கே: மாவட்ட சபைகள் விரைவில் அமைக்கப்படுமென செனட்டர் நடேசபிள்ளை தகவல் கொடுத்திருக்கிறாரமே!

ப: "உரிமை வழங்கும்படி பிரதமரிடம் சொல்லியிருக்கிறேன்- அவர் செய்வார்" என்ற ரீதியிலே ஏதோ ஆகாயத்திலிருந்து குதித்தவர் போலப் பேசுகிறார் செனட்டர் நடேசர். அப்படியானால் இதுவரை ஏன் சொல்லாமலிருந்தார். செனட்டர் பதவி கிடைக்கட்டும், சொல்லலாம் என்றிருந்தாரோ?

கே: ஆனந்தன் பாக்கு நீரிணையை நீந்தவில்லை யெனச் சிலர் சொல்லுகிறார்களே? உண்மையா?

ப: சிலரல்ல-ஒருவர் சொல்லுகிறார். விற்பனை குறைந்து வரும் ஒரு கொழும்புத் தினசரி ஆனந்தனை ஒரு பிரச்சினையாக்கி அதிக பிரதிகளை விற்பனை செய்ய முயன்று தோல்வியுற்றது. ஆனந்தன் நீந்தினார் என்பதே எமக்குக் கிடைத்த தகவல்கள்! அவர் இளைஞர் தானே! இன்னும் எத்தனை தடவை நீரிணையை நீந்த வேண்டுமானாலும் அவருக்கு வயது இருக்கிறதல்லவா? எனவே அவர் நீந்தினாரா என்பதை ஒரு பிரச்சினையாக்கி, பிறகு அதே பிரச்சினையைப் பற்றி மயிர் பிளந்து வாதிப்பது யாருடைய நன்மைக்காக.

ஃ

வி. ஆர். கிருஷ்ணன், கொழும்பு—6.

கே: "தேசிய சோஷலிஸ்ட் பட்ஜெட்" கொண்டு வருவேன் என்று புதிய நிதி மந்திரி கூறுகிறாரே, அது என்ன?

ப: ஹிட்லரும் தனது பட்ஜெட்டைத் "தேசிய சோஷலிஸ்ட் பட்ஜெட்" என்றுதான் கூறினார். அவரது நாஸிஸத்துக்கு மற்றொரு பெயர் தேசிய சோஷலிஸம். இதுவும் அப்படியொரு பட்ஜெட்டாக இருக்குமோ!

ஃ

எஸ். எல். பாலசுந்தரம், கண்டி.

கே: நிதி மந்திரி பதவிவகிக்காத வேறு சிலர் மந்திரிசபையில் இருக்கும் போது திரு. இலங்கரத்ன தலையில் நிதி மந்திரிப் பதவியை ஏன் கட்டிவிட்டார்கள்?

ப: அவரது தலைக்கனத்தை இறக்கவாம்!

ஃ

சி. கதிரவேலு, ஆலி-எல.

கே: யாழ். பிரதிநிதியின் எதிர்காலம் எப்படியிருக்குமென்று நீங்கள் கூறமுடியுமா?

ப: அவருக்கு ஏதையா எதிர்காலம்?

ஃ

எஸ். ஆர். பொன்முடியன், திருமலை.

கே: நடிகைகளில் வயது குறைந்தவர் யார்?

ப: நடிகைகள் எல்லோருமே வயது குறைந்தவர்கள் தான். அப்படி நான் கூறவில்லை. ஒவ்வொரு நடிகையும் தானே வயது குறைந்தவர் என்று கூறுகிறார்.

ஃ

எம். கருப்பண்ணன், தலவாக்கொல்லை.

கே: இந்தியப் பாதுகாப்பு நிதிக்கு ஒரு பத்திரிகை நிதி திரட்டியதாம். லட்சக் கணக்கில் இருக்குமாம். ஆனால் அந்தப் பணம் இந்தியாவுக்கு அனுப்பப்படவில்லையாம்? அந்த நிதி என்ன ஆயிற்று?

ப: இந்தியாவுக்கு அனுப்பப்படவில்லை என்பது உண்மையாம். ஆனால் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச்சேர்ந்துவிட்டதாம்.

ஃ

ஹென்றி மணி, மஸ்கெலியா.

கே: மலையகத்தில் பகிரங்க பாதைகளின் அருகில் ஐந்து அடி நிலமிருந்தால் குடிசை கட்டி வாழை மரங்களை நட்டுவிடுகின்றனரே சில சிங்களவர்கள், இதைச் சட்டம் தடுக்காதா? இவர்கள் எங்கிருந்து வருபவர்கள்? இச் செய்கையின் நோக்கமென்ன?

ப: தோட்டங்களினூடே சிங்களக் குடியேற்றத் திட்டங்களை நிறுவ வேண்டுமென்ற நூரளை எம். பியின் திட்டத்தில் இதுவும் ஒரு அம்சமாக இருக்கக்கூடும்.

ஃ

எஸ். கே. வி., தெரனியகலை.

கே: தற்போது ஆரம்பமாகியுள்ள தொழிலாளர் கழகத்தின் காரணமாக இருபத்தைத்து வருடமாக சேவை செய்துள்ள தொழிற் சங்கங்களை விட்டுவிட முடியுமா குயுக்தியாரே?

ப: சேவை செய்தால் விட வேண்டாம்! சேவை செய்திருக்கிறதா என்பதுதானே கேள்வி.

கே: இ. தி. மு. க. ஐக்கிய முன்னணியை ஆதரிப்பதன் காரணம் என்ன?

ப: எதையாவது ஆதரிக்க வேண்டும் என்பதற்காக.

ஃ

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி.

கே: ஆடவர் உள்ளம் அபாயச் சுரங்கம், நம்பவே கூடாது என்கிறாள் ஒரு பெண்.

ப: பெண்ணின் உள்ளம் ஆழம் காண முடியாத கடல்—ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள் என்கிறார் ஓர் ஆடவர்.

ஃ

எஸ். ஏ. காதர், பெரிய கிண்ணியா.

கே: பாராளுமன்றக் கூட்டத்தை அரசாங்கம் ஏன் மூன்று மாதத்திற்கு பின் போட்டது?

ப: எதிர்க் கட்சியினரின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாததால்.

ஃ

ஆர். கணபதி, கேகாலை.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சர்வாதிகரமான ஆட்சி முறைதான் கையாண்டு வருகிறது என்பது எனது எண்ணம்?

ப: ஆம், பாராளுமன்றம் மூடப்பட்டிருக்கும் இந்த மூன்று மாதமும் ஏதேச்சாதிகாரம்தான் நடைபெறுகிறது.

ஃ

இ. தயாநிதி, ஆனைக்கோட்டை.

கே: தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு குறைந்துவிட்டது என்று சொல்லுகிறார்களே ஏன்?

ப: அப்படிச் சொல்லியாவது கட்சியின் செல்வாக்கைக் குறைக்க முடியுமா என்று பார்க்க!

ஃ

கா. மஹரூப், பெரியகிண்ணியா.

கே: சில திறப்பு விழாக்களின் போது, முதலாளிமார்கள் தொழிலாளர்களைப் போல நடந்து கொள்வதன் மர்மமென்ன?

ப: பகல் வேடம்—உழைப்பாளியைப் போல நடித்தால் உழைப்பாளியின் உழைப்பைச் சுரண்டுதல் எளிதல்லவா.

# உனைக்காண்பதெப்போ?

—தமிழ்ப் பித்தன்—

நகைச்சுவை செறிந்த உன்றன்
    நாச்சுவை கேட்பதெப்போ?
பகைத்தவர் தாமே போற்றும்
    பண்பினைக் காண்பதெப்போ?
திகைத்ததே தமிழர் உள்ளம்
    திடுக்கிடும் மறைவு கேட்டு
பதைத்திடும் உள்ளம் தேற்ற
    பாரிலே இனி யாருண்டு?

தெள்ளிய அறிவு பெற்றோய்
    செந்தமிழ் அறிவு மிக்கோய்
கள்ளமில் உள்ளம் பெற்றோய்
    கடலென அன்பு மிக்கோய்
செல் வழி அறிந்திடாமல்
    திகைத் திட்ட மக்களுக்கோர்
நல்வழி காட்டி நின்றாய்
    நம்மையே விட்டுப் போனாய்.

கண்களில் உதிரம் சிந்த
    கதறிடும் மக்கள் துன்பம்
விண் முகடுடைத்த போதும்
    விதியினை மாற்றப் போமோ?
எண்ணிடும் எண்ணம் தன்னில்
    எழுத்தினில் பேச்சில் மூச்சில்
கன்னலில் கனிச் சாறென்ன
    கலந்த உன்நினைவு போமோ!

முந்தையர் முறையில் நின்றே
    முயற்சி செய் கொள்கைவீரா
கந்தைய னென்ற பேரோய்
    கடலென்ன அன்புச் செல்வா
சிந்தையில் செயலில் எங்கள்
    சிறப்பினைத் தேடும் கோவே!
எந்தையர் தவத்தால் வந்தோய்
    இன்றெமைப் பிரியலாமோ?

உன் நினைவகற்றப் போமோ?
    உணர்ச்சியை அடக்கப் போமோ?
கன்னல்போல் செவி இனிக்கும்
    கட்டுரை கேட்கப் போமோ?
மின்னல்போல் மறைந்தால் நாங்கள்
    மீண்டுனைக் காண்ப தெப்போ?
தன்னிக ரற்றோய் உன்னால்
    தமிழன்னை தனிய ளானாள்!

**வேல் தைலம்**
**மிகச் சிறந்த சஞ்சீவி**

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
**34, செட்டியார் தெரு,**
**கொழும்பு-11.**



# மக்களின் பாப்பரசர்

திங்கட்கிழமை ஜூன் 3ம் நாள். மாலை 7-49. வயிற்றில் ஏற்பட்ட ஒரு கட்டியால் ஒரு வருட காலமாக நோயுற்றிருந்த பாப்பரசர் 23-ம் அருளப்பரின் உயிர் அவரது பூதவுடலை விட்டுப் பிரிந்தது. அதே நேரம் அகில உலகமும் கவலையில் ஆழ்ந்தது.

1881ம் ஆண்டு நவம்பர் 25ம் திகதி பிறந்த பாப்பரசரின் பெயர் அஞ்சலோ கிஸெப் ரொன்காலியாகும். 'மக்களின் பாப்பரசர்' என்று அன்புடன் அழைக்கப்பட்ட இவர் பத்துப் பிள்ளைகளுக்கு மூத்தவராக ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். இவர் வறுமை, சிக்கனம், கடும் உழைப்பு பொருந்திய குடும்ப வாழ்க்கையிலேயே தமது சிறு பிராயத்தைக் கழித்தார்.

தமது வறுமையையிட்டு பாப்பரசர் பின் வருமாறு ஒரு இடத்தில் குறிப்பிட்டார்: 'நாங்கள் மிகவும் ஏழைக் குடும்பத்தினராகத் தானிருந்தோம். ஆனால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சிகரமாக வாழ்ந்தோம். எங்களுக்கு எவ்வித குறையும் இருந்ததாக நாம் வருந்தியதில்லை. உண்மையிலேயே அப்படி ஒரு குறையும் எமக்கு இருந்ததுமில்லை. எமது ஏழ்மை கௌரவமான, சந்தோஷமான ஏழ்மையாகும்.'

இத்தகைய உணர்வு படைத்த மனிதர் பாப்பரசர் ஆசனத்தை அலங்கரிக்க வந்தமை அகிலத்துக்கு ஆறுதலளிக்கும் சம்பவமாக மாறியதில் ஆச்சரியமில்லை. சாதாரண மக்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ளச் சற்றும் தயங்காத இப் பாப்பரசர், உலகின் கண் வாழும் கத்தோலிக்கரை மட்டுமன்றி, மற்றும் கிறிஸ்தவர்களையும், பிற மதத்தவரையும் கவர்ந்ததிலும் ஆச்சரியமில்லை.

ரோமாபுரியிலுள்ள வத்திக்கன் நகர்தான் பாப்பரசர்களின் இருப்பிடம்; கத்தோலிக்க மதத்தின் கோட்டை. பழைய பாப்பரசர்கள் அங்கிருந்து வெளியே வருவது மிகக் குறைவு. தங்களைச் சுற்றி அவர்கள் திரை போட்டு, பொது மக்களிடமிருந்து மறைந்துநின்றனர். ஆனால், காலஞ்சென்ற 23ம் அருளப்பர் இந்தக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்தார். அவர் அடிக்கடி ரோமாபுரி நகரில் காட்சி தந்தார். அவருக்கு முன்னிருந்த பாப்பரசர் தமது 19 வருட பதவிக் காலத்திலும் வெளியே வந்துநடமாடியதிலும் பார்க்க அதிக தடவை தாம் பதவியேற்ற முதல் மூன்று மாத காலத்திலேயே இவர் நடமாடியிருக்கிறார். 'என்னிடம் ஈரலோ, நரம்புக் கோளாறோ கிடையாது. ஆகவே, மக்களைச் சந்திப்பதில் நான் ஆனந்தம் அடைகிறேன்.' இவை காலஞ்சென்ற பாப்பரசரின் வார்த்தைகள்.

வேண்டாத கட்டுப்பாடுகளையும், சட்டங்களையும் நீக்கவோ மாற்றியமைக்கவோ தயங்காத இவர், தமது பதவிக்காலத்தில் கிறிஸ்தவ உலகத்தில் ஒற்றுமையை உண்டாக்கவும், உலக வல்லரசுகளுக்கு மத்தியில் சமாதானத்தை வளர்க்கவும் அரும்பாடு பட்டார். சமூகப் பிரச்சினைகளையிட்டும், உலக சமாதானத்தையிட்டும் அவர் வெளியிட்ட இரு நூல்கள் பல மதத்தினரதும் பல நாட்டு அரசியல்வாதிகளினதும் கவனத்தைக் கவர்ந்தன. அந்த நூல்கள் பாப்பரசரின் பரந்த மனப்பான்மையையும், உலக சமாதானத்தின் மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டையும் அகிலத்துக்கு எடுத்துரைத்தன.

'மதத்தின்எதிரிகள்' என்று கணிக்கப்படும் கொம்யூனிஸ்டுகளைக் கூட மனிதராகப் பாவித்து, அவர்களுடைய ஆதரவையும் சம்பாதித்துக் கொண்ட பெருந்தகை இந்த 23ம் அருளப்பர். கத்தோலிக்க மதத்தை அரசியற் காரணங்களுக்காகப் பயன்படுத்துவதை அவர் வெறுத்தார் என்பது, அவரது வாசகங்களையும், இடையிடையே அவர் வெளியிட்ட அறிக்கைகளையும் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு விளங்கும். ரஷ்யப் பிரதமர் குருசேவினது மருகரும், 'இஸ்வெஸ்தியா' பத்திரிகையின் ஆசிரியருமான அலெக்ஸி அட்சுபி என்பவருக்குப் பிரத்தியேக தரிசனம் அளித்ததன்மூலம், ஓர் சோவியத் அரசியல்வாதிக்குத் தரிசனம் அளித்த முதல் பாப்பரசரானார் இவர்.

தமது 81வது வயதில் காலமான பாப்பரசர் 23ம் அருளப்பர் பதவி வகித்த காலம் ஆக நான்கு வருடம் ஏழு மாதம் ஆறு நாள்தான். ஆனல், இந்தக் குறுகிய காலத்தில் அவர் தமது பதவிக்கு ஒரு புது மெருகையும் மகிமையையும் ஏற்படுத்தியதோடல்லாமல், உலக மக்கள் அனைவரினதும் அன்பையும் சம்பாதித்துக் கொண்டார்.

அவர் ஆத்மா சாந்தியடைவதாக.

---

உங்கள் பிரச்சினைகள் எதுவாய் இருப்பினும் சரி, எங்களுக்கு, உடன் எழுதுங்கள். அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளும் விபரங்கள் அடங்கிய விபரப் பட்டியல் ஒன்று இனமாக அனுப்பி வைக்கப்படும்.

விபரங்களுக்கு:

பீ. எம். திசாநாயக்க கம்பனி,

---

## ஆத்மா சாந்தியடையட்டும்

திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் தமிழ் பேசும் மக்களுக்குத் தொண்டு செய்யத் தலைப்பட்டு 1956ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருடைய சேவைத்திறன் நாடறிந்ததே! திடீரென அவர் மறைந்த சேதிகேட்டுத் திணுக்குற்றோம். இவ்வாறு அ. இ. உரிமை குறைந்த தலைவர் அபிவிருத்தி இயக்கத் தலைவர் திரு. ஜே. எஸ். சுந்தரம் சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் கூறுவதாவது:

தீண்டாமையை ஒழிக்க அயராது பாடுபட்டவர் திரு. கந்தையா. 1959ம் ஆண்டு பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட சமூகக் குறைபாடு சட்டத்தை இயற்ற திரு. என். ஆர். இராசவரோதயத்துக்கு உறுதுணை புரிந்துள்ளார். தமிழரசுக் கட்சியால் நடத்தப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வாரத்தில் மும்முரமாக ஈடுபட்டுழைத்துள்ளார்.

அகில இலங்கை உரிமை குறைந்த தமிழர் கல்விச் சகாயநிதி ஒன்றினை சட்ட மூலம் உருவாக்கவும், அதற்கான மசோதா ஒன்றினை தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்துடன் இணைந்து உருவாக்கவும் முனைந்திருந்த வேளையில் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். திரு. கந்தையாவின் மறைவு குறிப்பாக உரிமை குறைந்த தமிழர்களுக்குப் பெரும் இழப்பாகும். உரிமை குறைந்த தமிழ் மக்கள் சார்பில் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

# துயர் துடைத்துச் செயல் புரிவோம்

—அறப்போர் அணித் தலைவர்

## திகைப்புற்றோம்

வேலணை வாலிப முன்னேற்றச் சங்க கொழும்புக் கிளைச்செயலாளர் கீழ்கண்ட அனுதாபச் செய்தியை எமக்கு அனுப்பியுள்ளார்:

வேலணைவாழ் மக்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் இலக்காகி தன் அறிவுத்திறனாலும் செயல் வீரத்தாலும் மக்களை தன்வசப்படுத்தி வாலிபர்களை நாட்டுக்கு நலம்புரியும் நோக்குடன் சமூகப் பணிக்கு உகந்தவர்களாக்கிய பேரறிஞர், வேலணைத் திருநாடு பெற்றெடுத்த தவப் புதல்வன், தன் நலம் கருதாது பொதுநலப் பணியில் ஈடுபட்டு "தமிழ், தமிழர்" என்ற மூல மந்திரத்தையே தாரக மந்திரமாகக் கொண்டு, தன் உடல் பொருளாவி அனைத்தையும் தன் லட்சியத்துக்காக அர்ப்பணித்த மாபெரும் தியாகி, அன்பின் இருப்பிடம், பொறுமையின் பொக்கிஷம், தியாகத்தின் திருஉரு மறைந்தார் என்ற செய்தி கேட்டு வாலிபர் சமுதாயமே திகைப்புற்றது.

திரு. கந்தையா அவர்கள் சிறுகாலம் சட்டக் கல்லூரியில் படிப்பதற்காக தன் தாயகத்தைவிட்டுச் சென்றாலும் அவரின் நாட்டுப்பற்றும் சமூகப் பணியும் சமயப் பணியும் அவரை விட்டு விலகவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் தானே முன்னின்று வேலணையில்நடாத்திய "திருமுறைவிழாவே" அவரின் திறமையை வெள்ளிடை மலை போல விளக்கியது. அவரைப் பிரிந்து வாழும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

"கந்தையர் பிரிந்தார் என்ற கலக்கிடும் செய்தி கேட்டுத் துணுக்குற்றோம். போர்முனைக்குப் புறப்பட்ட வீரர்களின் முன்சென்ற வீரத் தளபதி திடீரெனச் சாய்ந்தான் என்ற சேதி கேட்டதும், சேனையில் ஏற்படும் பதட்டம் போன்று, விடுதலை அறப்போரில் முன்னணி சென்ற வீரன் முடங்கிய செய்தி எம்மை முடக்கியே விட்டதையோ! தெய்வத்தின் சோதனையோ? எம்மினத்தின் சாபக்கேடோ? இப்படி நாம் தலைவர்களை இழப்பதற்குக் காரணம் தான் யாதோ?

"திரு. வன்னியசிங்கம் மறைந்து துயரம் மாறுமுன்வரே திரு. ஏகாம்பரம் மறைந்தார். அத்துயரம் துடைக்குமுன்னம் துணைவா உனை இழந்தோம். இன்னும் எத்தனைபேர் இழப்பினும் தமிழினம் மானம் இழந்து வாழாது.

"துயரம் துடைத்து, துன்பம் அகற்றி விடுதலைப் போரைத் தொடர்ந்து நடத்துவோம். அமரர் உருவில் அவர்கள் மூவரும் அறவழி காட்டுவர்"

இவ்வாறு அற.ப்போர் அணித் தலைவர் திரு. ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம், திரு. வி. ஏ. கந்தையா மறைவு குறித்து சுதந்திரன் நிருபருக்குக் கூறுகையில் குறிப்பிட்டார்.

## புதிய பாப்பரசர்

பாப்பரசர் 23-ம் அருளப்பர் காலம் சென்றதையொட்டி, புதிய பாப்பரசரின் நியமனம் நடைபெறவிருக்கிறது. இந்நியமனம் இம் மாதம் 19-ம் திகதி நடைபெறுமெனத் தெரிகிறது.

—

### 'அரசாங்கத்தின் கடைசி மூச்சு'

'சிறிமாவோவின் அரசாங்கம் ஊழலும், லஞ்சமும் நிறைந்ததாகும். அது இப்போது தனது கடைசி மூச்சை விட்டவண்ணமிருக்கிறது. வெகு விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறும்!' இவ்வாறு அக்குராணவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மாஜி உதவி நிதி மந்திரி திரு. அசோகா கருணரத்ன கூறினர்.

# திரு. கந்தையாவின் பிரிவு

## தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சவால்

'பாராளுமன்றத்திலும், கட்சி நடவடிக்கைகளிலும் நம்மோடு பக்கபலமாக நின்று பெருந்தகைமையுடன் செயல் புரிந்த செம்மல், அறிவும் ஆற்றலும் மிக்க மேதை மறைந்தது தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சவால்போல் அமைந்திருக்கிறது. இப் பிரிவுச் செய்தியைத் தாங்கமுடியாது தவிக்கிறேன்.'

திரு. வி. ஏ. கந்தையா அவர்களின் பிரிவுச் சேதி கேட்டதும் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. இ. மு. இராசமாணிக்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, 'தமிழ் பேசும் இனம் இன்று இக்கட்டான நிலையில் தத்தளிக்கின்றது. பாராளுமன்ற விவாதங்களின்போது துணிகரமாகக் கருத்துக்களை ஆராய்ந்து பேசி, எதிரிகளையும் கவரும் எம்மரும் தோழர் திடீரென மறைந்தது தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் பேசும் இனத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பெரும் நட்டமாகும் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து துன்பத்தையே அனுபவிக்க வேண்டுமென்ற நியதிபோலும். அவருடைய எண்ணங்களும் நோக்கமும் ஈடேற நாம் மென்மேலும் தொடர்ந்து பணியாற்றுவோமாக.

அவரைப் பிரிந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தமிழ் பேசும் மக்கள் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## பெரு நட்டமாகும்

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபைச் செயலாளர், திரு. வே. அ. கந்தையாவின் மறைவை யொட்டிப் பின்வரும் செய்தியை எமக்கு அனுப்பியுள்ளார்:

'தமிழ் பேசும் மக்களின் தன்னிகரில்லாத் தளபதி, தியாகத்தின் செம்மல் அமரர் கந்தையா அவர்களின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு, குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் ஒரு பகுதி

(8-ம் பக்கம் பார்க்க)

## வாட்டியதோ தியாகத்தின் வடு

—சர்வானந்தன்—

வளர்ந்துவிட்ட முதுமையிலும் வாட்டமின்றி
வாலிபத்தின் முறுக்கினொடு வாழ்ந்துநின்று
தளர்ந்துவிட்ட தமிழ்மொழியின் உரிமைக்காக
தானமளித்தாய் உயிரைத் தந்தேவிட்டாய்
உளந்துடித்து உன்மறைவால் ஓலமிட்டு
ஊண்விரும்போம் உயிர்விரும்போம்
என்று நின்றோம்
இழந்துவிட்டோம் இன்னொரு நற்றுணையை;ஐயா
ஏன்மறைந்தாய் எங்குற்றாய் எங்கள்ஜோதி.

பாண்டியனும் சோழனொடு சேரன்காத்த
பண்புடைய தமிழதனை ஈழம்தன்னில்
மாண்புடனே வீற்றிருக்க வழிசெய்தற்கு
மனவுறுதி கொண்டேநீ வாழ்ந்தாய்ஐயா
பூண்டபெரும் சபதமொடு புனிதனாகப்
போய்மறைந்தாய் போற்றுகிறோம் உன்தன்நாமம்
நீண்டபெருந் துயரமது நிறையப்பெற்றோம்
நீக்கமறத் தமிழரது நினைவில்நிற்பாய்.

மண்ணினிலே தமிழ்காக்க மக்கள்செய்யும்
மாபெரிய தியாகமதைச் சொல்லவென்று
வன்னியரும் ஏகானும் வாவென்றாரோ
வாட்டியதோ தியாகமதன் வடுக்கள்ஐயா
கண்ணிறைந்த துயரமொடு தந்தைசெல்வா
கையிழந்தேன் என்றிங்கு கதறிநிற்க
என்னினைந்து நீசென்றாய் எங்கள்ஐயா
என்றுமழியாப் புகழை எய்திவிட்டாய்.

# உழுதுண்டு வாழும் பெருமக்களின் உயர்ச்சி போற்றும் உயரேடு

## தரணி எங்கும் தமிழ் மணம் கமழச் செய்த திருக்குறள்

—தமிழோவியன்—

தமிழ்க் குலத்தின் தணியாச் சிறப்பைத் தரணியறியச் செய்த வள்ளுவப் பெருந்தகையரின் உயர்நலச் சிறப்பை உலகே அறியும். நாமும் இத்தினங்களில் நெஞ்சம் மகிழ்ந்து, விழா எடுத்துப் பாராட்டி வருகின்றோம். ஆனால் வள்ளுவனார் வழிகளில் மக்கள் எப்படி வகுக்கப்பட்டுள்ளனர்? எவ்வாறு எடைபோடப்பட்டுள்ளனர்? எத்தகையச் சிறப்பை யாருக் குரித்தாக்கப்பட்டுள்ளது?—என்பன போன்ற அரிய உண்மைகளை வள்ளுவரைப் போற்றுவோர்களும் மற்றோர்களும் அவசியம் தெரிந்து கொள்ளல் மிக முக்கியம். அதிலும் உழைப்பாளர்களாகிய உழுவோரினம் எந் நிலையில் குறளில் குறிக்கப்பட்டுள்ளது என்பதை உணரல் அதி அவசியம். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' அல்லவா?

### உழுவோரும் உழைப்பாளரே

இங்கு ஓர் ஐயம் எழுதல் கூடும். "உழுதுண்டு வாழும் உழவர் பெருங் கூட்டம், உழைப்பாளர் இனமா?" என்பதே அது. இதற்குப் பதில் கூறி, இடத்தை விரித்தலை விட, நம் பழந்தமிழ் நூல்களிற் காணப் பெறும் கருத்துக்களை ஊன்றி ஒரு முறை நோக்கின் புலனாகும். எல்லாத் தொழில் புரிவோர்களும், பொதுமையாக நோக்கில், தொழிலாளர்களே! உழுதுண்டு பயிர் வளர்த்து உலகைக் காக்கும் உழவர்களும் உழைப்பாளரே. இம் மக்களுக்கும் வள்ளுவருக்கும் இடையிலுள்ள இணைப்பென்ன?

### உழுவார் உலகத்தார்க்கு ஆணி

நிலத்தை உழுது பயரிட்டு, நெல்மணி கண்டு, தானுமுண்டு, ஏனையோரையும் பசியற்று வாழும் வண்ணம், வாழும் உழவர்கள் இருக்கிறார்களே; அவர்கள் தான், மக்களுக்கே-ஏன் உலகினருக்கே அச்சாணி!

"உழுவார் உலகத்தார்க்கு
ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம்
பொறுத்து'
—(1032)

என்ற குறளில் நம் பாட்டாளி மக்களின் உயர்வை நன்கு உரைத்துள்ளார். "அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் நகலாது" என்னும் முது மொழியும் ஈண்டு நினைவு கூரத்தக்கது. சுற்றிச் சுற்றி வரும் இந்த உலகு, பல தொழில்களைப் புரியலாம். பதவிகளையும் நடத்தலாம். ஆனால் அது ஏர் பிடித்து உணவளிக்கும் உழைப்பாளரை எதிர் நோக்கி—அவர்களின் பின்னே உள்ளது. இதுவே நாம் கண் கூடாகக் காணும் பேருண்மை. அதனால் தான்:

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"
—(1033)

—என்கின்றார் வள்ளுவர். இவரின் நல் மொழிகளினால் நம் தொழிலாளரின் பெருமையே உயர்ந்து விட்டது. சமுதாயத்தில் காண முனையும் சமத்துவ நோக்கம் குறளின் கருத்தில் முழங்கி ஒலிக்கின்றது.

### பாட்டாளியின் பெருமை

உழைப்பாளரின் கரம் இயங்காவிட்டால், கரும்பும் பிறவும் வளரா. அவர்களின் கால் நிலத்தில் படாவிட்டால், இம் மாநிலம், 'பொன் கொழிக்கும் பூமி' யாக மாறாது. பணம் பெட்டி நிறையப் பதுங்கி இருந்தாலும், உண்ண உணவுப் பொருட்கள் கிட்டாவிட்டால் பசியும் பட்டினியும் தாண்டவமாடும். உயிர்கள் வாடி வதங்கிப் பிணங்களாக வீழும். இந்நிலையை இதயத்தில் நினைந்து நினைந்து சீர்தூக்கி— உழைப்பாளர்களுக்குப் பெருமை செய்து பேசி நிற்பது குறளாகும். இல்லையாகில் 'உழவு' என்ற அதிகாரமே-தலைப்பே இடம் பெற வேண்டிய அவசியமே இல்லை.

> இவ்வாரம் முதல் தொடங்கி ஈழமெங்கும் வள்ளுவர் விழாக் கொண்டாடப்படுகிறது. திருக்குறளில் தொழிலாளரினத்திற்கு எத்துணைச் சிறப்பு ஈயப்பட்டுள்ளது என்பதை இக் கட்டுரை எடுத்துக் காட்டுகிறது. மலையகத் தொழிலாளருக்கும் வள்ளுவரில் நாட்டம் உண்டல்லவா?

படை பலத்தோடு பலவும் புடை சூழ, நாட்டை ஆளும் அரசனை அடக்கும் ஆற்றல் விவசாயிகளிடமுண்டு. அதுமட்டும் அல்ல, மன்னர்களையே தங்களின் எண்ணத்தின்படி, தங்கள் குடையின் கீழ்க் கொண்டு வரும் வழியும் அவர்களிடமுண்டு.

சொல்வளம் இருந்தும், நெல்வளம் இல்லாத மன்னவனின் எண்ணம் ஈடேறாது. பயனும் விளைக்காது. ஆனால் அம்மன்னவனை நெல்வளம் நிறைந்த உழவர் பெருமக்கள் தம் வயப் படுத்தத் தாராளமாக இயலும். "பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை"யல்லவா? தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்ந்து வாழ்க்கை நடத்துவது தானே நாடு? இதனையே

"பலகுடை நீழலும்
தங்குடைக் கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்"

என்று குறளேடும் கூறுகின்றது. சமதருமக் கோட்பாடு (அதாவது சோஷலிசம்) இங்கே சங்கமாக எங்கும் முழங்குகின்றது.

### தொழிலாளரின் தூய உள்ளம்

உழைப்பாளர்களை வருத்தியும், ஏழைகளை ஏமாற்றியும், கொள்ளையடித்தும் பணத்தைக் குவிப்பவர்களை நாம் இன்றும் நேருக்கு நேர் பார்க்கின்றோம். எத்தனையோ சீமான்கள் பூமான்களைப்போல் தன்னல நோக்கத்தோடு வாழ்ந்து, மற்றவர்களை அடிமை கொள்வதையும் காண்கின்றோம். இப்படி எல்லாம் செய்வது எதற்காக? பணத்தைப் பெருக்கிக் கொள்ளத் தான்.

அப்பணக்காரர்களிடம், சாகும் நிலையிலும் அழுது கெஞ்சிப் பிச்சை கேட்பினும் ஒரு சதமும் கொடுக்க மாட்டார்கள். ஏழைகளுக்குத் தானம், தருமம் செய்ய மாட்டார்கள். இரக்கமற்ற இதயத்தோடு தங்களையே வளர்த்து மற்றவர்களைத் தாழ்த்திட வழி செய்வார். ஆனால்?—

தொழிலாளர்கள் தாங்களே உடலை வருத்தி, உயிர் மெலிய உழைத்து வாழ்பவர்கள். எவரிடமும் சென்று அஞ்சிக் கெஞ்சி இரந்து வாழ மாட்டார்கள். 'தன் கையே தனக் குதவி' என்று முன்னேறிப் பாடுபடும் தொழிலாளர்கள், இரக்கம்மிகுந்த நெஞ்சினர், கருணையும் அறப்பாங்கும் குடிகொண்ட போக்கினர், தங்களைப் போலவே மற்றவர்களின் நலத்திலும் நாட்டங்கொண்டவர்கள். அதனால்—

'இல்லை' என்று கேட்கும் ஏழைகளைக் கண்டதும் உடனே தங்களிடம் இருப்பதை ஈவார்கள். ஏழைகளின் துயர் துடைப்பார்கள்.

"இரவார் இரப்பார்க்
கொன்று ஈவர் கரவாது
கைது செய்தூண் மாலை
யவர்"
—(1035)

என்னும் திருக்குறள் தெள்ளத் தெளிவாகத் தொழிலாளர்களின் தூய உள்ளத்தையும் நேர்மையான அறவாழ்வையும் அழகுற உணர்த்துகின்றது.

### வள்ளுவரின் வழி

எனவே, தெய்வப் புலவர் திருவள்ளுவர் யாத்த குறளிலே—நாட்டின் உயிர்நாடியாம் உழைப்பாளர்களை நல்ல முறையிலே போற்றியுள்ளார். அவர்களின் அரிய பெருமையை உலகறியப் பாடியுள்ளார். நாம் திரும்பிய பக்கமெல்லாம் நம்மை எதிர்நோக்கிச் சிரித்து நிற்கும் வள்ளுவர் வழி; வையம் செழித்திடத் தொழிலாளர் வாழ்வை வளர்க்கும் வழியே!

மண்ணை உழுது வளம் பெருக்கி; வையம் செழிக்கும் நிலை வகுக்கும் தொழிலாளர்களைக் கண்ணை மூடிக் கொண்டு இழிவாய் நினைக்கும்—ஏளனமாய் நடத்தும் படித்தவர்களை, பதவியிலுள்ளவர்களை, வள்ளுவர் வழியை உற்று நோக்க வேண்டுகிறோம். அதே வேளையில் பயிர்த் தொழில்கள் செய்வோர்களைத் தங்கள் உயர்வு எண்ணி நெஞ்சம் மிக மகிழத் தூண்டுகிறோம். வாழ்க வள்ளுவர் வழி! வளர்க தொழிலாளர் இனம்!




## ஏட்டை மென்ற எறும்பும் ஞானி

அங்கையன்

அமுதமென்று தமிழைச் சொல்லி அணிகள் செய்த தமிழனே
அரையுகத்தில் உன்மொழியின் சுவையுங்கெட்டுப் போனதேன்
கமுகையொத்த வுயர்நிகர்த்த கவியுலக வானிலே
கழுதைசொன்ன கதையதான காரணமுங் கேளடா!
தமிழனென்று உன்னைச் சொல்லித் தரணியாண்ட தீரனே
தரையிலின்று பிடியுமின்றித் தவித்துப் போயினை
தமிழையன்று இகழ்ந்தானென்று தலையிற்கல்லைச் சுமப்பித்தாய்
தமிழையின்று அழிக்கநிற்கும் தகைமையற்றோர் செய்கையென்

ஒன்றுசாதி ஒருவன்தேவன் என்றுசொன்ன வுன்னினம்
ஒருமையற்ற வெறுமையான ஊழலோடு மாளுதே
கன்றுதன்னைக் கொன்றதாலே கவன்றுபின்னே தன்மகன்
கன்றுபோல வாழ்வுமுற்றக் கடிதுசெய்த தர்மமே
இன்றுஉன்னை என்னசொல்லி எங்குவிட்டுச் சென்றது?
இதனைநீயும் ஒருகணந்தான் எண்ணிவிட்டால் தீருமே.
நன்றுசெய்த வுன்கரங்கள் நாசஞ்செய்யத் துணியுமோ?
நானுமில்லை நீயுமில்லை நம்மினத்தை மீட்கவே!

தான்பிறந்த மண்ணைக்காக்க வான்புகுந்த மறவனே
தான்பிறந்த தமிழ்நாட்டைத் தாரைவார்த்த தாரடா?
நான்பிறந்த காரணந்தான் நாடுஇன்றிப் போனதோ?
நாணவில்லைச் சொல்லுகின்றேன் நல்லவாழ்வின் முடிவினை
கான்அழித்து நீர்பரப்பி ஊன்உருக்கி ஏரினைக்
காலமெலாங் கைபிடித்து வாழிலினி வாழலாம்
ஏன்உனக்கு இத்துணிவு என்றழிந்து போனது?
ஏத்திஏந்தி வாழவெண்ணி ஏமாந்தே போனாயோ?

எந்தமண்ணுஞ் சொந்தமண்ணென் றெண்ணிநீயும் இருந்ததால்
எங்குமுன்றன் நிலையழிந்து ஏகனுகிவிட்டனை
அந்தமில்லை யுந்தனுக்கு என்றுமில்லை என்றதால்
அந்தமொன்று இன்றுவந்து அறைக்கதவைத் தட்டுதே!
கந்தையோடும் கரத்தையாலுங் காலம்விட்ட கருமிகள்
கடிதில்வந்து உனையும்வென்று கடவுளாக மாறினர்
சிந்தையற்றுச் செயலுமற்றுச் சொல்லுமற்றுச் சோம்பலாய்ச்
சிறுகச்சிறுகத் தமிழினம் சிரழிந்து போகும்பார்!

காதலாலே உலகம் வாழும் என்றுசொன்னாய் அன்றுநீ
கபோதியாகி விட்டனை காதலொன்று மில்லையே
சாதலன்றி வாழ்வுனக்குச் சகந்தன்னில் இருக்குமா?
சஞ்சலங்கள் அற்றதனிச் சுதந்திரமுங் கிடைக்குமா?
ஏதுநீயும் கனவுகண்டே காலந்தள்ளப் பார்க்கிறாய்
இவ்வுலகில் உன்றனுமம் ஒழிந்துபோகு நாளிதே!
போதைகொண்ட வண்டதாகிப் பிதற்றுகின்றாய் பேதங்கள்
போதுமினி வாழவேனும் புதுவழியைப் பாரடா!

கோட்டையா யிருந்தேனென்று குட்டிச்சுவர் சொல்லுமாம்
ஏட்டைமென்ற எறும்புஞ்ஞானி என்று சொன்னால் நம்புவாய்
நாட்டைப்பேண மொழியைக்காக்க நடுங்கிநிற்கு முன்னைநான்
நடுத்தெருவுக் கிழுத்தசெய்தி நம்முடனே மறையவே
வீட்டுக்கொன்று வீதிக்கொன்று வீரர்களைச் சேர்த்திடு
வீணர்கைக்கு விலங்குமிட்டு வீரனாயே வாழலாம்!
ஏட்டிற்சொன்ன என்றன்வார்த்தை இத்துடனே மறந்தாயேல்
என்றுமில்லை விடிவுனக்கு என்றேனிது கேளடா!

விகர்பில்ஸ்



இளமையிலேயே நரம்புத் தளர்ச்சியினாலும் மற்றும் ஆண்மையின்மை ஏற்படுவதால் வெட்கப்படும் வாழ்க்கையில் வெறுப்புற்றும் வழியும் வாலிபர்களுக்கும் வயதானவர்களுக்கும் இழந்த வாலிபத்தன்மை திரும்பவும் பெற இம்மருந்தை ஒரு மாதம் சாப்பிட்டால் போதுமானது. மூத்திரக்கோளாறுகள் ஸ்கலிதம், மூலம், பவுத்திரம், பசியின்மை மாதவிடாய்க் கோளாறுகள் விந்தவாயு, காமிலே பாண்டு, மூச்சு முட்டு, மலச்சிக்கல் முதலிய வியாதிகளைக் குணப்படுத்தி நிரந்தரமான ஆரோக்கியத்தை அளிக்கும் திறமையும் இம்மருந்துக்கிருக்கிறது.

விலை 30 மாத்திரைகள் ரூ. 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. வி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.

### மொழிப் பிரச்சினை தீர

# சமஷ்டி முறையே சிறந்தது

## வார்சோ மாநாட்டில் அமரர் கந்தையா

“பல இன மக்கள் வாழும் பிரதேசங்களில் மொழிச் சிக்கலைத் தீர்த்து வைக்க ஏதுவான அரசியல் முறை சமஷ்டி ஆட்சி முறையே. இலங்கையிலும் அவ்வாறு ஆட்சிமுறை அமைக்கப் படுமானல், சிறுபான்மை இனத்தவர் சேமமுடன் வாழ வழி பிறக்கும். மனித உரிமைகள் மறுக்கப்பட்டதால்தான் நாடற்றவர் என்போர் தோன்ற இடமுண்டு. நாடற்றவர் பிரச்சினைக்கும் முடிவு கட்ட வேண்டும்.”

போலந்து தேசத்தின் தலைநகரான வார்சோவில் 2-9-59-ல் நடைபெற்ற 48-வது சர்வதேசப் பாராளுமன்றக் குழு மாநாட்டின் போது அமரர் திரு. வே. அ. கந்தையா கலந்து கொண்டுஇலங்கைத் தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் எண்ணற்ற தொல்லைகளை இவ்வாறு எடுத்துரைத்தார்.

திரு. கந்தையா தொடர்ந்து பேசுகையில் “எல்லா நாடுகளிலும், அவற்றிலும் விசேடமாக சமீபகாலத்தில் சுயாட்சி பெற்ற நாடுகளில்-அவை ஏழை நாடுகளாக விருந்தாலும் சரி, பணக்கார நாடுகளாகவிருந்தாலும் சரி, சிறிய நாடுகளாகவிருந்தாலும் சரி, பெரிய நாடுகளாக விருந்தாலும் சரி மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் மதத்தால், மொழியால், இனத்தால் வேறுபட்ட எல்லாமக்களுக்கும் வழங்க வேண்டும். சர்வதேசப் பார்லிமெண்டரி யூனியன் அதற்கு வழி செய்ய வேண்டும்.

### பாதுகாப்பு இல்லை

“இலங்கைப் பாராளுமன்றம் தமிழைத் தள்ளிவிட்டு சிங்களத்தை இலங்கையின் ஆட்சி மொழியாக்கியது. இது வகுப்பு உணர்ச்சியைத் தூண்டி விட்டது. விளைவு என்ன? வகுப்புக் கலவரமே தோன்றியது. பெரிய குழப்பங்கள் நடந்தன. சிறுபான்மை மக்களின் மொழி உரிமையை மறுத்த பாராளுமன்றம், தனிமனிதனுக்குக் கொடுக்க வேண்டிய பாதுகாப்பையும் கொடுக்கத் தவறிவிட்டது. சமஷ்டி அரசமைப்பு இருந்தால் இப்படி நடந்திருக்குமா? அரசியல் சட்டத்தில் மனித உரிமைகளுக்கும், சுதந்திரத்துக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்குமாயின், இந் நிலை வந்திருக்குமா?

### நாடற்றவர் பிரச்சினை

“பல மொழிகள் பேசும் மக்கள் வாழும் நாடுகளில் அந்தந்த மொழி பேசும் மக்களின் உரிமைகளையும், சுயமரியாதையையும் பாதுகாக்க சமஷ்டி அரசமைப்பே சிறந்தது என்று கண்டு, அப்படியே அந்த அரசமைப்பை நடைமுறையில் கொண்டிருக்கிறார்கள்.

“நாடற்றவர் பிரச்சினையும் மல்கிப் பெருகிவருகிறது.

எந்த ஒரு மனிதனும் எந்த ஒரு நாட்டையாவது சார்ந்தவனுகவே இருக்கவேண்டும். ஆகவே, சில மக்கள் நாடற்றவர்கள் என்று வர்ணிக்கப்படுகிறார்கள் என்றால், அவர்களுக்கு மனித உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன என்றுதான் பொருள்படும். இது ஒழிய வேண்டும். நாடற்றவர் பிரச்சினைக்கு எல்லா நாடுகளுமே முடிவுகட்டி விட வேண்டும்’

### ருஷ்யத் தமிழர்

வார்சோவில் மகாநாடு முடிவடைந்ததும் ருஷ்யத் தலை நகரான மாஸ்கோவிற்கும் திரு. கந்தையா சென்றிருந்தார். அங்கிருந்து லெனின் கிராட் நகரம் சென்று ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தபோது ருஷ்யாவில் தமிழ்த் தொண்டாற்றும் ஒரு ருஷ்யரைக் கண்டார். திரு. ரூடின் என்னும் பெயருடைய அந்த ருஷ்யர் தமது தமிழ் மொழிப் பற்றினை எடுத்துக்காட்டத் தமது பெயரைச் செம்பியன் என்று மாற்றியுள்ளாராம். அவருடன் தமிழில் உரையாடிய விபரம் 11-10-59ல் வெளியான சுதந்திரனில் வெளியிடப்பட்டிருந்தது.

### தமிழில் அறிக்கை

அரசாங்கக் கணக்குக் குழுத் தலைவராக விருந்த திரு. வே. அ. கந்தையா அவர்கள் 1959—60-ம் ஆண்டுக் குரிய அரசாங்கக் கணக்குக் குழு அறிக்கையை தமிழிலேயே தயாரித்து சமர்ப்பித்தார். கடந்த ஏப்ரல் மாதம் 26-ம் திகதிதான் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

## ஆயுள் வேதப் பரீட்சை முடிவுகள்

வட இலங்கை சுதேச வைத்திய சபையார் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுள் வேதக் கல்லூரியில் சென்ற மார்ச் மாதம் நடாத்திய வருடாந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்களைத் தராதர ஒழுங்கின்படி வெளியிட்டிருக்கிறார்கள். விபரம் பின் வருமாறு:

**நான்காம் வருடம்**

| | |
|---|---|
| எம். பிலேந்திரன் | 2-ம் பிரிவு. |
| எம். இராமச்சந்திரன் | 3-ம் பிரிவு. |
| எஸ். சந்தியாப்பிள்ளை | ” |
| ஐ. பாலசுப்பிரமணியம் | ” |
| ஜே. சேனாதிராஜா | ” |
| எம். குருசிவனார் | ” |

**விசேடவகுப்பு (முதலாம் வருடம்)**

| | |
|---|---|
| ஏ. கணேசாள் | 2-ம் பிரிவு. |
| எஸ். எக்ஸ். வேதநாயகம் | 3-ம் பிரிவு. |
| ஜி. எட்வேட் | ” |
| ரி. கே. சிவஞானம் | ” |


**மூன்றும் வருடம்**

| | |
|---|---|
| எஸ். மகாலிங்கம் | 2-ம் பிரிவு. |
| எஸ். திருநாவுக்கரசு | 3-ம் பிரிவு. |
| எஸ். விநாயக மூர்த்தி | ” |
| ஜி. இராதாகிருஸ்ணன் | ” |
| கே. விசுவலிங்கம் | ” |
| எஸ். சிவசம்பு | ” |
| எஸ். சந்திரகாந்தி | ” |
| கே. தங்கராசா | ” |

**இரண்டாம் வருடம்**

| | |
|---|---|
| ஏ. கலைமகள் | 2-ம் வருடம் |
| என். சற்குண சரோஜினி | ” |
| பி. அருளப்பு | 2-ம் பிரிவு. |
| ஏ. இராசதுரை | 3-ம் பிரிவு. |
| இ சிறீஜெயதேவி | ” |
| ஆர். கனகலிங்கம் | ” |
| எஸ். கே. குணரத்தினம் | ” |
| எஸ். தியாகராசா | ” |
| எஸ். ஞான கணேசன் | ” |
| ஜே. முத்துக்குமாரசுவாமி | ” |

(13-ம் பக்கம் பார்க்க)



போலந்து நாட்டின் தலை நகரான வார்சோவில் நடைபெற்ற சர்வதேசப் பாராளுமன்ற மாநாட்டில் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் படும் இன்னல் பற்றி அமரர் வே. அ. கந்தையா உரை நிகழ்த்துகிறார்.

### நீளமான தமிழ்ப் பேச்சு

இரப்பர் கட்டுப் பாட்டுச் சட்டப் பிரமாணத்தையிட்டு நடைபெற்ற விவாதத்தின் போது மிக நீடித்த தமிழ்ப் பேச்சைப் பாராளுமன்றத்தில்திரு.வே. அ. கந்தையா நிகழ்த்தியிருக்கிறார். 1962-ம் வருடம் ஜூலை மாதம் 20-ம் திகதி தொடர்ந்து நான்கு மணி நேரம் பேசியும் முடிவடையாமல் ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும், 1963-ம் வருடம் ஏப்ரல் 26-ம் திகதி (9 மாதங்களின் பின்) தொடர்ந்து பேசப்பட்டது. இதுவே சபையில் இதுவரை பேசப்பட்ட மிக நீளமான தமிழ்ப் பேச்சாகும். இதே பேச்சுத்தான் திரு. கந்தையாவின் கடைசிப் பாராளுமன்றப் பேச்சுமாகும்.


## உங்கள் வியாதி எதுவானாலும் தீர்த்துத் தருகிறோம்



நரம்பு பெலவீனம், பெலக்குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் பண்புறைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும் சூதகக் கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## தமிழில் சபை நடத்தினார்

இலங்கைப் பாராளுமன்றம அனேகமாக ஆங்கிலத்திலேதான் செயலாற்றுகிறது எனலாம். சந்தர்ப்பத்துக்கேற்ப சிங்களத்திலும் இப்பொழுது சபை நடைபெறுவதுண்டு. ஒரே ஒரு தடவை சபை தமிழில் நடைபெற்றது. அத்தகைய பெருமையையும், சரித்திர முக்கியத்துவத்தையும் ஏற்படுத்தியவர் திரு. வி. ஏ. கந்தையா அவர்களே!

கடந்த ஒரு வருடமாக திரு. வி. ஏ. கந்தையா அரசாங்கக் கணக்குக் குழுத் தலைவராக இருந்து வந்தார். 7-9-62 இலங்கை வரவு செலவுத் திட்டம் குழு நிலையில் ஆராயப்பட்டபோது, தலைமை தாங்கும் பொறுப்பு திரு. வி. ஏ. கந்தையாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்பொழுது டாக்டர் இ. மு. வி. நாகநாதன் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். மந்திரி ஒருவரின் குறுக்கீடுக்குக் கூட செவி மடுக்காது டாக்டர் தொடர்ந்து பேசுகையில், தலைமைதாங்கிய திரு. கந்தையா இடைமறித்து “கௌரவ மந்திரி அவர்கள் ஒன்று சொன்னால் அதை நீங்கள் அங்கீகரிக்க வேண்டும்” என்றார்.

டாக்டர் நாகநாதன் உடனடியாக “ஆம் ஐயா” என்று கூறினார்.

### சந்திக்கு வந்தவை

“தனிப் பெருந் தலைவருக்குத் தலையிடி” என்ற தலைப்பில் அம்மான் தரவிருந்த சுவையான செய்திகள் இம்முறை இடமின்மையால் வெளிவரவில்லை. அடுத்த வாரம் வெளிவரும்.

தொடர்ந்து சந்தியில் இடம் பெறவிருப்பவை

- கல்லூரி கொள்ளைக்கு வந்தது விசாரணை
- காப்புறுதி அலுவல்களின் கசப்புத்தன்மை

## ‘மாபெரும் இழப்பு’

—கொழும்புக் கிளைச் செயலாளர்

“பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் தமிழ் இனத்தின் மொழி உரிமைக்கு அல்லும் பகலும் முழங்கிய குரல் இவ்வளவு சடுதியில் ஓய்ந்துவிட்டது, ஈழம் வாழ் தமிழ் பேசும் இனத்துக்கு மாபெரும் இழப்பாகும். திரு. கந்தையா அவர்கள் சிறந்த அரசியல்வாதி மட்டுமல்ல, நல்ல தமிழ் அறிஞருமாவர். பாராளுமன்றத்தில் மணிக் கணக்காகச் செந்தமிழில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் அன்னாரது தமிழ்ப் புலமைக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.” மறைந்த திரு. கந்தையா பற்றி தமிழரசுக்கட்சி, கொழும்புக் கிளைச் செயலாளர் திரு. க. பத்மநாதன் சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் அவர் கூறுவதாவது: ‘அன்று அவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவராக தமிழுக்கு ஆற்றிய தொண்டை கொழும்பு வாழ் தமிழ் பேசும் மக்கள் என்றுமே மறக்க முடியாது.

# நாட்டின் அடிமைத்தளையை அறுத்தெறிய துடித்தெழுந்தனர் தொழிலாளர்கள்

## அரங்கம் 9

உலக மகாயுத்தம் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. பிரான்சில் ஆங்கிலப் படைகள் தோல்வியடைந்து வந்தன. இங்கிலாந்தின் சார்பாக அமெரிக்கா ஆட்பலத்தைக் கொடுத்து உதவியது. இருந்தும் அவ்வுதவி போதவில்லை. அதனல் படைக்காக நெருக்கும் சட்டத்தை அயர்நாட்டில் அமுல் செய்ய ஆட்சியினர் முற்பட்டனர்.

மிட்ட அவ்வளவு பெரும் கூலிப் பிரதிநிதிகளே! அமெரிக்காவை ஏமாற்றுவதற்காகக் கூட்டப்பட்டதுதான் மகாநாடு என்பது நாடறிந்த இரகசியம். அமெரிக்காவும் உலக மகாயுத்தத்தில் ஈடுபட்டுவிட்டது. ஆகவே இனிமேல் ஏன் மகாநாடு? ஏன் அறிக்கை? அதனல் 8—4—1918ல் தம்மிடம் கிடைத்த அறிக்கையைப்

டத்தை அடுத்திருக்கும் ஒரு சிறு தீவு என்று புலப்பட்டது. தனிமையாகத் தீவில் நின்ற அவரைப் பொலீஸார் கைதுசெய்து விசாரித்தனர். அதற்கு அவர், தான் சமுத்திர மத்தியில் சேதமடைந்த அமெரிக்கக் கப்பல் ஒன்றிலிருந்து தப்பி வந்த ஒருவர்

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

எனக் கூறினர். ஆனல் எந்த அமெரிக்கக் கப்பலும் சேதமடைந்தது கிடையாது என்று பொலீஸாருக்குத் தெரியும். அதனல் டௌளிங் இராணுவ நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் யாதும் கூற மறுத்து விட்டார். நீதிமன்றத்தார் அவருக்குச் சிறியகால மறியல் அளித்தனர். டௌளிங்கின் கதையை சின் பீன் தலைவர்கள் சில காலத்திற்குப்பின் தான் அறிந்தனர்.

பாராளுமன்றத்தில் ஆட்பலச் சட்டம் கொண்டுவரப்

கூட்டம் ஒன்று நடைபெற்றது. சின் பீன், அயர் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் தொழிலாளர் பிரதிநிதிகளும் அதில் கலந்துகொண்டனர்.

சின் பீனின் தலைவர் ஏமன் டி வேலரா, சூழ், தீர்மானம் ஆகிய இரண்டைத் தயாரித்தார்.

"பலவந்த இராணுவ சேவையை அயர்நாட்டில் அமு

நடாத்தும் ஆக்கிரகமாதலின் அதை அதிக பயன் தரக் கூடிய வழிகளில் எதிர்க்கும்படி அயர் நாட்டின் புதல்வர்களை அறைகூறி அழைக்கின்றோம்" என்பதுதான் தீர்மானம்.

சூழும் தீர்மானமும் கூட்டத்தில் ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. உள்நாட்டு ஆட்சியைக் கேட்ட அயர் கட்சியும் அயர் இனத்திற்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று கேட்பதில் சின் பீனோடு ஒத்துழைக்கத் தொடங்கியது சின் பீனின்

## விடுதலை வீரர்கள் சிறைப்படுத்தப்பட்டனர்

இம்முயற்சி அமெரிக்காவிலிருந்த அயர் மக்களை ஆத்திரத்துக்குள்ளாக்கியது. இங்கிலாந்து அச்சட்டத்தை அயர் நாட்டில் அமுல் செய்வதை அமெரிக்கக் குடியதிபதி வில்சன் தடுக்க வேண்டும் என்று கோரினர். அதன் நிமித்தம் சட்டத்தை அமுல் நடாத்துவது புத்தியானதல்ல என்று வில்சன் இங்கிலாந்துக்கு எடுத்துரைத்தார்.

பலவந்த இராணுவ சேவை எதிர்ப்பதற்காக சின் பீன் வாதிகள் நாடெங்கும் பிரசாரம் செய்தனர். அதன் காரணமாக 3—4—1918ல் மைக்கேல் கொலின்ஸ் அவருடைய அலுவலகத்திற்கு வெளியே வைத்துத் துப்பறியும் பொலீஸாரால கைது செய்யப்பட்டார். அவரைக் கைதுசெய்த பொலீஸாரைப் பொது மக்கள் தாக்க ஆரம்பித்தனர். இரு பகுதியினருக்கும் பலத்த கைகலப்பு ஏற்பட்டது. இறுதியில் ஒருவிதமாகக் கொலின்ஸ் பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். மக்களைத் தூண்டிவிடும் விதத்தில் பேசியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுப் பிணை கொடுக்கும்படி கேட்கப்பட்டார். அதற்கு அவர் மறுக்கவே அவருக்குக் குறுகிய காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இன்னுமொரு இடைத் தேர்தல் வட அயர்நாட்டில் நடைபெறவிருந்தது. கிழக்குத் திரோன் தொகுதியில் 4—4—1918ல் நடைபெற்ற அத்தேர்தலில் அயர் கட்சியினர் மூன்றாவது முறையாக சின் பீன் வேட்பாளரைத் தோற்கடித்தனர். ஆனல் இத்தோல்விகள் சின் பீனின் செல்வாக்கைக் குறைக்கவில்லை: அயர் கட்சியின் வெற்றிகளுக்கு அவர்களுடைய வேட்பாளர்களின் தனிப்பட்ட செல்வாக்கும் அவர்கள் தேர்தல் காலங்களில் பாவித்த பலாத்காரமும் காடைத்தனமும் புரட்டஸ்தாந்து வெறியர்களின்

பிரதமர் லொயிட் ஜோஜ் வாசித்துக்கூடப் பார்க்கவில்லை!

அமெரிக்காவை யுத்தத்திற்குள் இழுத்துவிட்டார் லொயிட் ஜோஜ். இது அவருக்கு ஒரு வெற்றி. இனிமேல் அமெரிக்கா யுத்தத்திலிருந்து பின்வாங்கப் போவதில்லை. ஆகவே பயமில்லாமல் அயர் நாட்டவரை இராணுவத்திற்குள் போடலாம் என்று அவர் முடிவு

## ஆட்சியாளர் திட்டத்திற்கு நாடெங்கும் எதிர்ப்பு

லுக்குக் கொண்டு வருவதற்குப் பிரித்தானிய அரசாங்கத்திற்கு உரிமை இல்லை என்று மறுத்தும் படைக்காக நெருக்கும் சட்டத்தை நாங்கள் மிகவும் பயன் தரக் கூடிய வழிகளில் எதிர்ப்போம் என்றும் மனத்திடத்துடன் சபதம் பூணுகின்றோம்" என்பதுதான் அந்தச் சூழ். "அயர்நாடு ஒரு தனி இனம் என்ற அடிப்படை உண்மையைப் பக்கபலமாகக் கொண்டும் நாடுகளை ஆளும் அரசுகள் ஆளும்

வெற்றியைத்தான் காட்டியது. கட்டாய இராணுவ சேவையை அயர்நாடு முழுவதும் ஒருமுகமாக எதிர்க்கிறது என்பதை நிரூபிக்கும் வண்ணம் 19—4—1918ல் ஒபாலி பாராளுமன்றத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் அயர் கட்சி தமது வேட்பாளரை மீளப் பெற்றது. சின் பீன் வேட்பாளரான டாக்டர் பட்றிக் மக்காட்டன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். அமெரிக்காவுக்கு சின் பீனின் தூதுவராகச் சென்றிருப்பவர் டாக்டர் மக்காட்டன்.

## உதிரிகள் கூட்டிய வட்டமேசை மாநாட்டின் உருக்குலைந்த முடிவுகள்

செய்தார். அயர் நாட்டு ஆடவர்களைப் பட்டாளத்திற்கு அழைத்துப் பலியாக்குவதற்காக ஆட்பலச் சட்டம் என்னும் புதிய சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார்.

இந்நேரத்தில் ஜேர்மனியும் யுத்தத்தில் வெற்றியடைவதற்காகப் பெரும் பிரயத்தனம் எடுத்தது. ஈஸ்ரர் வாரப் புரட்சிக்காக

பட்டதும் அயர் கட்சியின் புதிய தலைவர் டிலன் தனது கட்சி உறுப்பினர்களுடன் வெளிநடப்புச் செய்தார். வாக்களிப்பு நேரத்தில் அயர் கட்சியினர் எதிர்த்து வாக்களித்தனர். எனினும் 16—4—1918ல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்றிரவே இச்சட்டத்திற்கு எதிர்ப்புக் காட்டும் முகமாக அயர் தொண்டர் படையி

உரிமையை ஆளப்படும் மக்களின் சம்மதத்திலிருந்தே பெறுகின்றன என்ற நெறியைப் பக்கபலமாகக் கொண்டும், நாங்கள், பிரித்தானிய அரசாங்கமோ அன்றி வேறெந்த அன்னிய அதிகாரமோ, அயர் மக்கள் ஐயந்திரிபற எடுத்துக் காட்டிய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அயர்நாட்டில் கட்டாய இராணுவ சேவையைஅமுலுக்குக்கொண்டு வர உரிமையற்றது என்று

## அரங்கம் 10

படைக்காக நெருக்கும் சட்டத்திற்கும் ஆட்பலச் சட்டத்திற்கும் ஆட்சேபம் தெரிவிப்பதற்காகத் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் 15,000 பேர் டப்ளினில் கூடினர். 23—4—1918ல் செவ்வாய்க்கிழமை கடையடைப்பு (ஹர்த்தால்) ஒன்றை நடாத்துவதென முடிவு செய்தனர். இம்முடிவை வரவேற்ற பெண் தொழிலாளிகள் ஆயிரக்கணக்கில் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டு டப்ளின் நகர வீதிகளில் வலம் வந்தனர்.

செவ்வாய்க்கிழமைப் பொழுது விடிந்தது. கடைகள் ஒன்றும் திறக்கப்படவில்லை. தொழிற்சாலைகள் தேங்கின. அரசாங்க அலுவலகங்களில் வேலையொன்றும் நடைபெறவில்லை. புகைவண்டிகளும் திராம் வண்டிகளும் ஓடவில்லை. உணவுக்காகப் பெரும் ஓட்டல்களுக்குச் சென்றவர்களுக்குப் பரிமாறுவதற்கு பரிசாரகர்கள் இருக்கவில்லை. சின் பீன் வாதிகளும் தொண்டர் படையினரும் தொழிற் சங்கத் தலைவர்களும் அயர் கட்சித் தலைவர்களும் நாடெங்கும் சென்று மக்களுக்கு உற்சாகமும் நம்பிக்கையும் அளித்தனர். தற்போதைய தலைமுறை மன உறுதியும் தியாக மனப்பான்மையும் பகைவரின் தாக்குதலை எதிர்க்கும் சக்தியும் கட்டுப்




ஆயுதம் பெற ஜேர்மனிக்கு வந்த சேர் றொஜர் கேஸ்மன்ற்றின் அயர் பிரிகேட்டைச் சேர்ந்த யோசேப் டௌளிங் என்பவரை சின் பீன் தலைவர்களிடம் தூது அனுப்ப முடிவு செய்தது. யுத்த காலத்தில் சின் பீன் வாதிகள் ஆங்கில அரசுக்குத் தொடர்ச்சியான தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் ஜேர்மன் அரசாங்கத்

னர் கோக் மாவட்டத்திலுள்ள பொலீஸ் படை வீடொன்றைத் தாக்கிப் படைக்கலங்களைக் கொள்ளையடிக்க முயன்றனர். பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதன் காரணமாக இரு தொண்டர்கள் மாண்டனர்.

பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்த டிலனும் அவரது சகாக்களும் நேரே அயர்நாட்டிற்கு வந்தனர். புதிய சட்டத்தை சின் பீன் வாதிகளுடனும் மற்றத் தேசியவாதிகளுடனும் சேர்ந்து எதிர்க்கத் திட்டமிட்டனர். 18—4—1918ல் டப்ளின் மாநகரக் கூட்டவை முதல்வர் தலைமையில் கண்டனக்

மறுக்கின்றோம். பிரித்தானிய மக்கள் சபையில் படைக்காக நெருக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது, அயர்நாட்டின் மீது யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டதை ஒக்கும் என்று கூறுகின்றோம்.

"இந்த யுத்தச் சவாலை நாம் ஏற்காவிட்டால் எமது உரிமைகளை இழந்து அடிமைகளாகி விடுவோம். உலக மகா யுத்தத்தை அடுத்து வரவிருக்கும் சமாதானப் பேரவை கூடுவதற்கு

## பொலீசார் துப்பாக்கிப் பிரயோகம் மாண்டனர் தொண்டர்கள்

போக்கும்தான் காரணம் எனலாம். அதனல் சின் பீனின் தோல்வி அயர் கட்சியினருக்கோ ஆட்சியினருக்கோ மகிழ்ச்சி ஊட்டவில்லை.

இடைத் தேர்தல் முடிந்ததும் முடியாததுமாக வட்டமேசை மகாநாட்டின் அறிக்கை வெளியிடப்பட்டது. 51 கூட்டங்கள் நடைபெற்றபின் வெளியான அறிக்கையில் அவ்வளவு பிரமாதமாக ஒன்றும் இருக்கவில்லை. பங்குபற்றியவர்கள் தொகையில் அரை வாசிக்கும் குறைந்த அளவு தொகையினரே—47 பேரே அறிக்கையில் கையொப்பமிட்டிருந்தனர். கையொப்ப

தின் விருப்பம். ஜேர்மன் அதிகாரிகள் டௌளிங்கை 12—4—1918ல் ஒரு நீர்மூழ்கியில் அயர்நாட்டிற்கு அண்மையில் கொண்டுவந்தனர். அங்கிருந்து அவர் கூம்பு தோணியொன்றில் அயர் நாட்டை நோக்கிச் சென்றார். கரை தென்பட்டது. கூம்பு தோணியைக் கடலில் விட்டு உள்நாட்டுக்குள் சென்றார். அப்பொழுதுதான் அவர் இறங்கியிருக்கும் இடம் கோல்வே மாவட்

### அடுத்த வாரம்

- ★ பொலீஸார் சுடப்பட்டனர்
- ★ சின் பீனுக்குத் தடை
- ★ இங்கிலாந்திலிருந்து ஆயுத இறக்குமதி
- ★ இரகசியப் பத்திரிகை

## ஆளவந்தார் முடிவை எதிர்த்து விடுதலை வீரர்கள் சவால்

அவசியமான நிபந்தனை—சிறு இனங்களின் சுயநிர்ணய உரிமை—இங்கிலாந்தின் பிரதம மந்திரி பறைசாற்றும் அதே சுயநிர்ணய உரிமைதான். அதே பிரதம மந்திரி இன்று பலாத்காரம் மூலமும் படைப்பலம் மூலமும் அயர்நாட்டில் அமுலாக்க இருக்கும் சட்டம் அதே சுயநிர்ணய உரிமை பொடிபொடியாகப் போவதற்கு உதவியாயிருக்கின்றது. அந்தச் சட்டத்தை அமுலாக்க முயற்சிப்பது ஆத்திரமூட்டாத மக்களுக்கு எதிராக

பாடும் நிறைந்த தலைமுறை என்ற உண்மையை அன்றைய கடையடைப்பு நிரூபித்தது.

அயர் இனம் முழுவதும் தம்மை எதிர்த்து எழுவதைக் கண்ட பிரதமர் லொயிட் ஜோஜ், கொலையென்றால் சிறிதும் தயங்காத பீல்ட் மாஷல் லோட் பிரெஞ்சை, மாட்சிமை தங்கிய மன்னரின் லோட் லெப்டினன்ட் ஜெனரலாகவும் ஜெனரல் கவணராகவும் நியமித்தார். பலவந்தமாக அயர் நாட்டவரைப் படைக்கு இழுக்கத் தம்மால்

(13-ம் பக்கம் பார்க்க)

## ஆட்சியாளருக்குத் தலையிடி கொடுக்க அயலார் முயற்சி

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஜூன் மாதம் 9-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## மற்றொரு தலைவரையும் பறிகொடுத்தோம்!

நெஞ்சைப் பிளந்து நினைவை மறக்கச் செய்து தமிழ் பேசும் மக்களைத் துன்பக் கடலில் ஆழ்த்திய துக்க நிகழ்ச்சியொன்று இவ்வாரம் நிகழ்ந்து விட்டது. தமிழ் மொழிக்காக, தமிழ் பேசும் சமுதாயத்திற்காக, தமிழ் நிலத்துக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த பெரியார் திரு. வே. அ. சந்தையா அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டார்.

தமிழினத்தின் வாழ்வுக்காக வாழ்ந்த தன்னலமற்ற பெருந்தகை—தமிழே மூச்சு, தமிழ்த்தொண்டே சிந்தனை என்றிருந்த தியாகச் செம்மல் திடீரெனச் சிந்திப்பதை நிறுத்திக்கொண்டார்.

ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களின் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்திலே கடந்த எட்டு ஆண்டுகளாகச் சுடாவிட்டுப் பிரகாசித்த நந்தா விளக்கு அணைந்து விட்டது. இலக்கிய மணம் கமழும் அவரது இனிய தமிழ்ப் பேச்சு இனி மக்கள் மன்றத்திலே ஒலிக்காது.

அவரது மறைவு தமிழ் பேசும் இனத்துக்கு ஈடு செய்ய இயலாத பேரிழப்பு. ஆற்றொணாத்துயரக் கடலில் மூழ்கிக் கிடக்கும் தமிழ் பேசும் மக்கள் இன்னும் அந்த அதிர்ச்சியினின்று விடுபடவில்லை! தங்களின் தலைவரை, பிரதிநிதியை, அன்பரை இழந்து தவிக்கும் தீவுப் பகுதி மக்களுக்கு எங்ஙனம் ஆறுதல் கூறுவதென்றே எமக்குத் தெரியவில்லை.

கோப்பாய் கோமான் வன்னியசிங்கமும், ஏகாம்பரமும், பிரிந்து சென்றபின், திரு. கந்தையா அவர்களும் நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். அமரத்துவம் பெற்ற இந்த மும்மூர்த்திகளும் தமிழ் பேசும் மக்களை உன்னத நிலைக்குக் கொண்டு வர அயராது உழைத்த உத்தமர்கள்.

அமரர் கந்தையா அவர்கள் பிரபல நியாயதுரந்தராக இருந்தவர். அவருக்குச் சுயநல நோக்கம் இருந்திருப்பின் சட்டத் தொழிலில் பெரும் பொருளீட்டியிருக்கலாம். அதற்குப் பதிலாகத் தமிழ் பேசும் சமுதாயத்தின் ஈடேற்றத்துக்காகத் தியாக நெருப்பாற்றிலே எதிர் நீச்சு நீந்தினார்.

தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்துக் கட்சி நடத்திய போராட்டங்களிலே முன்னணியில் நின்றார். 1958-ம் ஆண்டிலும், 1961-ம் ஆண்டிலும் தடுப்புக் காவலிலே பல மாதங்களைக் கழித்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்புதான் அஞ்சா நெஞ்சம் கொண்ட இத்தியாகமூர்த்தியைச் சிறிமா அரசாங்கத்தின் பொலீஸார் நையப்புடைத்தனர். அதனால் மார்புவலி ஏற்பட்டு மூச்சுவிட முடியாத நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மிருகத்தனமான அந்தப் பொலீஸ் தடியடியின் பலனாகவே இவ்வளவு விரைவில் நமது ஒப்பற்ற தியாகசீலரைப் பறிகொடுத்து விட்டோம். அவரது உயிர்த்தியாகம் வீண்போகாது.

தமிழ் பேசும் மக்களின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் ஆளாயிருந்த தலைவரை, சிறந்த தமிழ் அறிஞரை, பண்பாளரை அடக்குமுறைக்குப் பலிகொடுத்து விட்டோம். இனியாவது—களப்பலி கொடுத்த பிறகாவது—தமிழ்ப் பிரதிநிதிகள் மீது பொலீஸ் நடத்திய தாக்குதலைச் சிறிமா அரசாங்கம விசாரணை செய்யுமா?

தமிழ்த் தொண்டிலும், சைவத் தொண்டிலும் முன்னணி தாங்கிய பெருந்தகை அமரர் கந்தையா. தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அவர் ஆற்றிய தமிழ்ப் பணி அளப்பரிது. திருமுறைவிழா, சிலப்பதிகாரவிழா, முத்தமிழ் விழா, இசைவிழா என்றெல்லாம் விழா வெடுத்து தமிழை வளர்த்தவர்.

இந்த நெருக்கடியான வேளையிலே—தமிழ் பேசும் மக்கள் உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் நேரத்திலே சிறந்த அரசியல் அறிவும், பேராற்றலும், சேவை ஆர்வமும், தியாக மனப்பான்மையும்கொண்ட சத்தியவீரன் திரு. கந்தையா அவர்களின் மறைவு தமிழ் பேசும் சமுதாயத்துக்குப் பெரும் இழப்பாகும்.

தமிழரசுக் கட்சி ஒரு ஆற்றல் மிக்க தலைவரை இழந்துவிட்டது. தமிழ் பேசும் மக்களோ ஒரு சிறந்த வழிகாட்டியை இழந்துவிட்டனர். அவர் நம்மைவிட்டு பிரிந்து வானுலகெய்தினாலும் அவர் எந்த இலட்சியத்துக்காகத் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துப் பாடுபட்டாரோ, அந்த இலட்சியத்தையடைய அவரது அடிச்சுவட்டைப் பின் பற்றித் தொடர்ந்து பாடுபடுவதே நமது கடன். இக் கடனை நிறைவேற்றுவதில் அமரத்துவம் பெற்ற திரு. கந்தையா அவர்கள் கலங்கரை விளக்கமாக நின்று எமக்கு வழிகாட்டுவார் என்பது திண்ணம். பூத உடல் நீத்து புகழுடம்பெய்திய பெருமகனாரின் திருநாமம் குன்றில் மேலிட்ட தீபமென என்றென்றும் ஒளிவீசி இலட்சியப் பாதையிலே தொடர்ந்து முன்னேற எமக்கு ஊக்கத்தையும் உத்வேகத்தையும் அளிக்குமாக!

# இலங்கைத் தொழிலாளர் கழகம் முதலாவது வேலை நிறுத்தம்

## பெருகிவரும் ஆதரவின் அறிகுறி

நுவலவாக்கெலை மாவட்டத் தோட்டத்திலுள்ள பெரிய மட்டுக்கெலத் தோட்டத்தில் உள்ள 4 தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கப்படாததை ஆட்சேபித்து அத்தோட்டத்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இவ்வேலை நிறுத்தத்திற்கு இலங்கைத் தொழிலாளர் கழகம் தலைமை தாங்கியது.

தலவாக்கெலை மாவட்டத்திலுள்ள பெரிய மட்டுக்கெலத் தோட்டத்தில் பணிபுரியும் 440 தொழிலாளர்களில் 414 பேர் இலங்கைத் தொழிலாளர் கழக உறுப்பினர்கள். தோட்டத்தில் அதிகாரம் பெற்ற கழகமாக இயங்குவதற்கான வாக்கெடுப்பு அண்மையில் நடைபெறவிருந்தது. வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்னரே இலங்கைத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த 4 தொழிலாளர்களைத் திடீரென வேலைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கழக உறுப்பினர்கள் 'மின்னல் வெட்டு' வேலை நிறுத்தம் ஒன்றினைக் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்தனர்.

இத்தோட்டத்தில் வழக்கமாக வேலை நிறுத்தங்கள் நடைபெற்றால், அதை முறியடிக்க சின்ன மட்டுக்கெலத் தோட்டத்திலிருந்து தொழிலாளர்கள் வேலைக்கு அழைக்கப்படுவதுண்டு. சின்ன மட்டுக்கெலத் தொழிலாளர்களும் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்துவிட்டமையினால், வேலை நிறுத்தத்தை முறியடிக்க முடியவில்லை.

வேலை நிறுத்தச் செய்தி எட்டியதும் கழகத் தலைவரும், தமிழரசுக்கட்சிச் செயலாளருமான டாக்டர் இ. மு. வி. நாகநாதனும், கழகத்தின் இணைப் பொருளாளரில் ஒருவரான திரு. சிவானந்த சுந்தரமும் தலத்துக்கு விரைந்து சென்றனர். தலைவர்களைக் கண்ட வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் வாழ்த்தொலிகளை வானுயர எழுப்பினர். தொழிலாளர்களின் குறைகளைக் கேள்வியுற்ற தலைவர்கள், தோட்டத் துரையுடனும், தொழிலிலாகா அதிகாரிகளுடனும் கலந்து பேசியபின், தொழிலாளர்களின் குறைகளைப் போக்க இம்மாதம் 7ம் திகதி ஹட்டன் தொழில் அதிபரின் காரியாலயத்தில் விசாரணை நடைபெறும் என்றும், அதுவரை அமைதியாகத் தொழிலுக்குச் செல்லுமாறும் கேட்டுக் கொண்டார்கள்.

திரண்டிருந்த தொழிலாளர்களை ஒன்றுசேர்த்து ஒரு பொதுக் கூட்டமும் தோட்டத்தில் நடத்தப்பட்டது. டாக்டர் நாகநாதன், திரு. சிவானந்த சுந்தரம், துணைச் செயலாளர் திரு. எல்லாளன், மாவட்டப் பிரதிநிதி திரு. செ. கலியப்பெருமாள் முதலியோர் பேசினார்கள். தொழிலாளர்கள் அமைதியாக வேலைக்குத் திரும்பினர்.

ஏழாம் திகதி ஹட்டன் தொழில் அதிபர் காரியாலயத்தில் நடைபெறும் விசாரணையின்போது இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் சார்பாக திரு. எம். திருச்செல்வம் சியூ. சி. கலந்து கொள்வார் எனத் தெரிகிறது.

இலங்கைத் தொழிலாளர் கழகம் தோன்றி மிகவும் சொற்ப காலத்துக்குள்ளேயே உரிமைப் போராட்டத்தில் ஈடுபட முனைந்து விட்டது கழகத்தின் பால் தொழிலாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையையே காட்டுகிறது. மலையகமெங்கும் தொழிலாளர் கழகத்துக்குச்செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே வருகிறது. பல தோட்டங்களில் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டும், அலுவலகங்கள் திறக்கப்பட்டும் வருகின்றன.

## பெரு நட்டமாகும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களான ஒடுக்கப்பட்ட, உரிமை குறைந்த மக்களுக்கு, பேரிடியாகும். அவர்களின் நல்வாழ்வுக்காக உறுதியுடன் போராடிய திரு. கந்தையா அவர்கள், அமரர் வன்னியசிங்கத்துடன் சேர்ந்து, 1957ம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு வாரத்தை முன்னின்று நடத்தினர். உரிமை குறைந்தவர்களுக்காக வாதிட்ட அப்பெரியார், தீண்டாமை ஒழிப்பின் முன்னணியில் நின்ற ஒருவராவர். அவரது அகால மறைவு, தமிழ்பேசும் இனத்துக்கும், உரிமை மறுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட இனத்துக்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டமாகும்.

அன்னாருக்கு அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்'.

## திரு. கந்தையா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டு பலரும் பாராட்டத்தக்க வகையில் பணி புரிந்தார்.

"திரு.கந்தையாவின் பிரிவு அவருடைய குடும்பத்தாருக்கு மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்கள் சமுதாயத்துக்கே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்," என்று கூறி முடித்தார்.

# இனத்தை இனம் காட்டிக் கொடுக்கும் பச்சைத் துரோகம்

## காங்கிரஸ் கூலிகளின் கைங்கரியம்

இரத்தினபுரி நகரத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகப் பணிமனை ஒன்றினைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரும்போது, இம்முயற்சியை முறியடிப்பதற்கான முயற்சிகளைச் சிலா செய்து வந்தார்கள் என்ற செய்தி கிடைத்துள்ளது. வகுப்புத் துவேஷத்தைத் தூண்டும் வகையில் சிங்கள மக்களிடம் தமிழர்கள் சிலரே சென்று பொய்ப் பிரசாரம் செய்தனராம். இப்பகுதியில் இதுவரை செல்வாக்குடனிருந்த அஸீஸ் காங்கிரஸ் விழ்ச்சி அடையாமலிருக்கவே இததகைய தந்திரோபாயங்கள் செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது.

கடந்த 2.6.63ல் இரத்தினபுரி நகரத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பணிமனை முறைப்படி திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அதற்கு முட்டுக்கட்டை போடும் வகையில் சிலர் முயற்சிகள் எடுத்துத் தோல்வி கண்டனர் என்று தெரிகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தில் அஸீஸ் காங்கிரசுக்கு இதுவரை நல்ல ஆதரவு இருந்துவந்தது. இ. தொ. க. ஆரம்பமானதும் காங்கிரசின் நிலையில் ஆட்டங்கண்டு விட்டது. இழந்து வரும் பலத்தை மீண்டும் பெறவும், தொழிலாளர் கழகத்தின் வளர்ச்சியைத் தடுப்பதற்கும் தந்திரோபாயங்களைக் கையாள ஆரம்பித்தனர். தோட்டப் புறங்களில் கழகத்தைப்பற்றிய பொய்ப் பிரசாரங்களைப் பரப்பினர். ஊர்ப்புறங்களில்— சிங்களவர் மத்தியில் துவேஷத்தை மூட்டினர். இதன்பயனாக இரத்தினபுரி அலுவலகத் திறப்பு விழா அன்று ஓர் கிளர்ச்சியை ஏற்படுத்தப் பல ஆயத்தங்களும் செய்திருந்தனர். திறப்பு விழா வன்று கூடியிருந்த மக்களைக் கண்டு கதைத்துவிட்டு 'குழப்பம் செய்ய வந்தவர்கள்' அமைதியாகத் திரும்பிப் போயினர். தமிழ்த் தொழிலாளர் நலன் கருதி ஏற்படுத்தப்படும் ஒரு கழகத்திற்கு விரோதமாக நாங்கள், ஒரு சில தமிழர்களாலேயே தூண்டப்பட்டோமே! என்று ஆச்சரியம் மேலிட்டுத் திரும்பிவிட்டனர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவரும் தொழிலாளர் கழகத்தின் வளர்ச்சி மலையகத்தில் உள்ள ஏனைய தொழிற் சங்கங்களுக்குப் பெரும் தலையிடியாக விருக்கிறது என்று வர்ணிக்கப்படுகிறது.

## தியாகச்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துவந்தார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் பல வருடங்கள் பணி புரிந்திருக்கிறார்.

1956ம் வருடம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டினார். கடைசியாக தமிழரசுக்கட்சி மேற்கொண்ட எல்லாம் தமிழ் இயக்கத்திலும் தீவிரமாகப் பங்கு பற்றியிருக்கிறார்.

## திருமலையில்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வலம் புறப்பட்டு, திருமலை நகர வீதிகளுக்கூடாகச் சென்று மைதானத்தை அடைந்தது.

நகரெங்கணுமுள்ள கடைகள் யாவும்அடைக்கப்பட்டு, கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

முழு விபரமும் அடுத்த வாரம் இடம் பெறும்.

# அமரர் கந்தையாவின் இறுதி யாத்திரை

## பிரேத ஊர்வலத்தில் மக்கள் வெள்ளம்

## வழி நெடுக கண்ணீர் சொரிந்த பரிதாபக் காட்சி

மறைந்த தலைவர் திரு. கந்தையா அவர்களுக்கு மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்திய பின், அவரது இறுதி யாததிரை ஆரம்பமாயிற்று. மயானத்தை அடைந்ததும், பிரேதப் பெட்டியைத் தமிழரசுத் தந்தை உட்பட கட்சித் தலைவர்கள் தாங்கிச் சென்று சிதையில் வைத்தனர்.

பிற்பகல் 3.30 மணிக்கு, திரு. கந்தையாவின் சடலம் வேலணைக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காக அலங்கரிக்கப்பட்ட வண்டிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தமிழரசுச் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை, செனட்டர் மு. மாணிக்கம் ஆகியோர் அதேவேளையில்தான் அங்குவந்து சேர்ந்தனர்.

சோகமே உருவெடுத்த யாழ் நகர வீதிகளைக் கடந்து திரு. கந்தையாவின் பூதவுடல் வேலணைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வேலணைச் சந்தியிலிருந்து வேலணைக் கிராமச் சங்கக் கட்டிடம் வரை ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு, அங்கே தொகுதி மக்களின் இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டது. அங்கும் ஒரு இரங்கற் கூட்டம் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. பாரிஸ் பெரேரா பேசுகையில், திரு. கந்தையாவின் சேவையைப் பாராட்டி இறுதி மரியாதையை நேரடியாக வந்து அளிக்க வசதியற்ற எம். பிக்கள் சார்பாகவும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகவும் அஞ்சலி செலுத்தினர். மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை பேசுகையில், "திரு. வன்னியசிங்கத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் புள்ளிவிபரத்தோடு பேசி ஆதாரங்களைக் காட்டக்கூடியவராக விருந்த ஒருவரை இழந்துவிட்டோம். மட்டக்களப்பு மக்களிடம் அதிக வாஞ்சை காட்டியவர் திரு. வி. ஏ. கந்தையா. கட்சிக் கூட்டங்களில் என்னோடு கடுமையாகத் தர்க்கிக்கும் இவர் எனது அரசியல் தந்தையாகவும் இருந்தார்," என்று கூறினர். தொடர்ந்து வேலணை கிராமச் சங்கத் தலைவர் திரு. சதாசிவம், திரு. கே. பி. ஹரன், ஊர்காவற்றுறை பட்டின சபைத் தலைவர் திரு. சபாரெத்தினம், உபதலைவர் திரு. இமானுவேல் ஆகியோரும் பேசினார்கள்.

இரங்கற் கூட்டம் முடிவடைந்து, மக்களின் இறுதி அஞ்சலியும் முடிவடைந்த பின்னர் மீண்டும் இறுதி யாத்திரை ஆரம்பமானது. வழிநெடுகிலும் உள்ள மக்கள் கண்ணீரைச் சொரிய திரு. கந்தையாவின் சடலம் சாட்டி மயானத்தை அடைந்தது.

பிரேதப் பேழையை திருவாளர்கள் சா. ஜே. வே. செல்வநாயகம், சி. மூ. இராசமாணிக்கம், என். ஆர். இராசவரோதயம், செ. இராசதுரை, திரு. வி. ஏ. அழகக்கோன், திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. வீ. தர்மலிங்கம், திரு. சதாசிவம் ஆகியோர் தாங்கிச் சென்று சிதையில் வைத்தனர்.

வேலணை கிராமச் சங்கக் காரியாலயத்திலிருந்து சாட்டி மயானம் வரை தமிழரசு மாதர் முன்னணித் தலைவி திருமதி பூபதி அருணாசலம், செயலாளர் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் மாதர் முன்னணி உறுப்பினர்கள் ஊர்வலமாகச் சென்றனர். வேலணை மாவித்தியாலய மாணவ மாணவிகளும் தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

## உற்ற துணைவனையும் சிறந்த வழிகாட்டியையும் இழந்தோம்

—மன்னார் எம். பி.

'திரு. கந்தையாவின் இழப்பினால் நான் ஓர் உற்ற துணைவனையும் சிறந்த வழிகாட்டியையும் இழந்தேன். அதேபோல் தமிழ் பேசும் இனத்தின் வழிகாட்டியையும் உற்ற தோழனையும் இனம் இழந்து தவிக்கிறது' இவ்வாறு மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோன் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"தமிழ்பேசும் இனத்துக்கு விழுந்த மூன்றாவது பேரிடி திரு வி. ஏ. கந்தையாவின் மறைவாகும். கடந்த ஜனவரி 5ம் திகதி காங்கேசன்துறை வீதியில் நடைபெற்ற கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் என்னருகிலேயே திரு. கந்தையா நின்றார். அவரை மிருகத்தனமாகப் பொலிசார் தாக்கினர். அவருடைய நிழலில் ஒதுங்கக்கூட அருகதையற்ற பொலிசார், அவரை அடித்துத் துன்புறுத்தினர். அன்றிலிருந்தே அவருக்கு மார்புவலி ஏற்பட்டது. அவ்வலியே அவரைப் பலிகொண்டுவிட்டது. நெருக்கடியான கட்டங்களில் தலைவர்களை இழப்பது தமிழ்பேசுமினத்தின் தலைவிதிபோலும்.

இதேபோன்றுதான் காலிமுகக் கடற்கரையில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது, திரு. கு. வன்னியசிங்கம் பொலிசாராலும், குண்டர்களாலும் தாக்கப்பட்டு, தொடர்ந்து வியாதிகளுக்குள்ளாகி இறுதியில் உயிரைப் பறிகொடுத்தார்.

1926ம் ஆண்டு இந்தியாவின் சைமன் கமிஷன் இந்தியாவுச்கு வந்ததை ஆட்சேபித்து நடைபெற்ற போராட்டத்தில் திரு. லாலாலஜபதிராய் இதே போன்று பொலீசாரின் தாக்குதலுக்கு இலக்காகி நோயுற்று மாண்டார். இதே நிலை தான் இன்று இலங்கையில் உருவாகியுள்ளது".

இவ்வாறு வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசினார்.

### மூன்றாவது பேரிடி

அடுத்துப் பேசிய மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோன், 'திரு. கந்தையாவின் இழப்பினால் நான் ஒரு உற்ற துணைவனையும், சிறந்த வழிகாட்டியையும் இழந்தேன். அதேபோல் தமிழ் பேசும் இனத்தின் வழிகாட்டியையும், உற்ற தோழனையும் இனம் இழந்து தவிக்கிறது' என்று கூறினார்.

யாழ்ப்பாண மாநகர சபைத் தலைவர் திரு. டி. எஸ். துரைராஜா, ஆசிரியர் திரு. கு. வி. செல்லத்துரை, முதலியோர் தொடர்ந்து பேசினர்.

## பொலீஸ் துன்புறுத்தலே அகால மறைவுக்குக் காரணம்

—உடுப்பிட்டி எம். பி.

உடுப்பிட்டி பா. உ. திரு. மு. சிவசிதம்பரம் 'தமது இனத்தின் விடுதலைக்காக தமது உயிரையே அர்ப்பணித்தார் திரு. கந்தையா இனிமேல் வரப்போகும் போராட்டங்களில் இன்னும் எத்தனை உயிர்களை இழக்கப் போகிறோமோ? திரு. கந்தையா அவர்களுடன் இரண்டு மாதங்களுக்கு முன்னர் விமானத்தில் பிரயாணம் செய்யும்போது கடந்த ஜனவரி 5ந் திகதி பொலிசாரிடம் அடிபட்டதையிட்டுக் கூறுகையில் "பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் அடி வாங்கியதால் பெருமைப் படமுடியாது, ஆனல் சாதாரண ஒரு பொலிஸ்காரனால் தமிழ் பேசும் இனத்தின் தலைவர்கள் என்ற மதிப்பைப் பெற்றவர்கள் இவ்வளவு கீழ்த்தரமான நிலையில் மதிப்பிடப்படுகிறோமே! எமக்கே இப்படியான மதிப்பு இருந்தால், இவர்கள் எம்மக்களை எவ்வளவு தூரம் கணிப்பார்கள்? விரைவில் இதற்கு ஒரு முடிவு ஏற்படாமல் போகாது, அநீதி நீடிக்காது" என்று சொன்னார். பொலிசாரின் துன்புறுத்தலே அவருடைய அகால மரணத்துக்குக் காரணம் என்று குறிப்பிட்டால் அது பொய்யாகாது," என்று கூறினார்.

திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. என். ஆர். இராஜவரோதயம் பேசுகையில் "திரு. கந்தையாவின் திடீர் மறைவு தமிழ் பேசும் இனத்துக்கு மிகவும் பாரதூரமான இழப்பாகும். கிழக்கு மாகாண மக்கள் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்', என்று சொன்னார்.





சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.



'சுதந்திரன்'

புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'



விசேட வைபவங்களிற்கென வருவிக்கப்பட்டது!!

லதா மல்!!!

வேஷ்டி, தேசிய உடை, முதலியவற்றிற்கு நிகரற்றது,

52" அகலம்
1 யார் ரூபா 3-25
4 யார் ரூபா 13-00

எலேட்சுப்பர்லோன் வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.

வி. பி. பி. ஏற்றுக்கொள்ளப்படும்

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,

சில்லறை விற்பனைப் பகுதி: 110&114, மெயின் வீதி,

கொழும்பு.

தொடர் கதை




# கதிர் பதின்மூன்று ஆடுகாலும் தாரகும்

பங்குனி, சித்திரை மாதங்கள், யாழ்ப்பாணத்தில் பலருக்கு 'மிக முக்கியமான காலங்கள். கொழும்புப் பட்டினத்திலிருந்து உத்தியோகத்தர்கள் பெருவாரியாக இறக்குமதியாவதும் இம்மாதங்களில்தான். கல்லூரி மாணவர்கள் தொடக்கம், சளைத்துக் களைத்து வேலை செய்பவர்கள் வரை மிக உற்சாகமாக இருப்பதும் இம்மாதங்களிலேயே.

யாழ்ப்பாணத்தின் கற்பக தருக்கள் வஞ்சகமின்றி, முட்டிகள் நிரம்பித் தளும்பப் பனம்பாலைப் பாய்ச்சுவதால் கள்ளுக் கொட்டில்களிலெல்லாம், 'பனப்பட்டன்' நிரம்பி வழியும். உற்பத்தி கூடினால் விலை குறையும் என்பது பொருளாதாரத் தத்துவம். அதற்கிணங்க அறுபது, எழுபது சதம் விற்ற பனம்பால், படிப்படியாகக் குறைந்து, நாற்பதாகி, முப்பதாகி, இருபதாகி, பத்தாகிவிடும், சில வேளைகளில்.

பிறகென்ன கேட்கவா வேண்டும்? 'தண்ணீர்ப் பந்தல்'களெல்லாம் மனிதத் தலைகளாக நிரம்பி வழியும்.

இம்மாதங்களில் கந்தையர் வெகு தாராளமானவர்; வயிற்றுக்கு வஞ்சகம் செய்யாமல், குந்தியிருந்து கொண்டு, பிளாவைக் கைகளில் எடுத்தார் என்றால், வயிறு பலூனாக ஊதும்; வாய்ஊதி ஊதி உறிஞ்சும்.

குடியில் எவ்வளவு விண்ணரோ, அது போலத் தொழிலிலும் வலுவிண்ணர். ஒரு கலியாணத்தைப் பேசினார் என்றால், அதை ஒப்பேற்றாமல் விடமாட்டார்.

புகையிலைத் தரகு, மாட்டுத் தரகு என்று பல தரகுகள் செய்யும் மனிசன்; காசும் பிழையில்லாமல் கைகளில் புரளும்.

நல்ல உச்சிவேளை. நிழல் கால்களுக்குள் அடைக்கலந் தேடிக் கொள்கிறது. தார் வீதி கால் வைக்க முடியாமல் தகித்துக் கொண்டிருக்கிறது.

கந்தையர் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருக்கிறார். கண்கள் சிவந்து தவிக்க வயிறு பலூனாக உப்பித் தளும்புகிறது. வாயிலிருந்து ஏதேதோ உருத்தெரியாத வார்த்தைகள் சிதைகின்றன.

'தாசி...!' இவ்வொரு வார்த்தையை அவர் வாய் தெளிவாக அடிக்கடி கூறிக் கொள்கிறது.

'தாசி......தூ......மானங் கெட்ட தோறை!'

கந்தையர் தள்ளாடித் தள்ளாடி விழுந்து விடுபவர் போலக் கால்களைப் பின்னலாகப் பதிக்கிறார். கால்கள் இடற, ஒருவிதமாகச் சமாளித்துக்கொண்டு நடக்கிறார் வெறியோடு வெறியாகச் சற்று முன் கள்ளுக் கொட்டிலில் நடந்த சம்பவம் நிழலாடி, வெறியை மூட்டுகிறது.

ஐந்து பிளாக்கள் வயிற்றுக்குள் சென்று விட்டன; ஆறுவதை வாயருகில் கொண்டு போகும்போது பக்கத்தில் குந்தியிருந்த ஆடுகால் மணியம் கதைக்கத் தொடங்குகிறான்:

'என்ன கந்தையாண்ணை! எப்படியிருக்குது...?'

கந்தையர் பிளாவைத் திருகணியில் வைத்துவிட்டுக் கண்களைச் சுழற்றி ஆடுகால் மணியத்தைப் பார்க்கிறார்:

'எதைக் கேக்கிறாய்?...'

'உதைத்தான்...!' —ஆடுகாலின் விரலொன்று கந்தையருக்கு முன் பிளாவில் நிரம்பித் தளும்பிய கள்ளைச் சுட்டிக்காட்டுகிறது.

'கொஞ்சம் புளிப்புக் காணுது!...றெயிலடிக் கிணற்றுத் தண்ணிபோலை கிடக்கு!' வார்த்தைகள் சிதறலாக வருகின்றன; கை ஒன்று சுண்டல் கடலையைத் தாளித்த மிளகாயோடு அள்ளி வாய்க்குள் திணிக்கிறது: சில கடலைகள் கன்னத்தில் உருண்டு பிளாவிற்குள் விழுந்து தெறிக்கின்றன.

'ஆற்ரு இது...? கள்ளுக்கை கல்லைப் போட்டது...?'

—கந்தையர் கூறுகிறார்.

'ஒருத்தருமில்லைக் கந்தையாண்ணை! நீதான் கல்லைப் போட்டனி! அதெல்லாம் சரி...உன்ரை மோளைத் தேடிப் பார்க்கல்லையே?... எங்கையோ நீர்வேலிக்கை கொண்டுபோய் வைச்சிருக்கிருளுமே?...'

ஆடுகால் மணியத்தின் வார்த்தைகள் குளவிகளாகச் செவித் துளையைக் குடைய...

கந்தையர் அடிபட்ட புலியாக மணியத்தைப் பார்க்கிறார், கிறுங்கிய விழிகள் கொவ்வைப் பழங்களாகி:..

'நீயாற்ரு அதைக் கேட்க...?'

ஆடுகால் சிரித்துக் கொள்கிறது:

'இஞ்சை பார், கந்தையாண்ணை! கோவியாதை கண்டியோ...? உன்ரை பக்கத்து வீட்டுக்காறன் நான்! உனக்கு ஒண்டென்றால் அது எனக்குந்தானே? ஏதோ போனது போகட்டும்! இனி

செங்கை ஆழியான்

இருக்கிறதுகளையாவது கவனமாகப் பாக்க வேண்டாமே?...'

புதிய அத்தியாயத்திற்கு ஆடுகால் அடிகோலுவதை மயக்க நிலையிலும், கந்தையரால் உணர முடிகிறது. அடி வயிற்றில் கிளம்பிய ஏவறை வாயு வாயினூடாகப் புறப்படுகிறது. நன்றாகத் திரும்பி ஆடுகாலைப் பார்க்கிறார்;

'நீ என்ன சொல்லுறாய், இப்ப?...'

ஆடுகால் மணியம் பிளாவில் உதடுகளைப் பதித்து ஒரு உறுஞ்சு உறிஞ்சிவிட்டு, வாயைப் புறங்கையால் துடைத்துக் கொள்கிறான்:

'ஒண்டுமில்லை, அண்ணை! இஞ்சை இதை நான் சொல்லுறனெண்டு கோவியாதை! உன்ரைரெண்டாவதுமோள் இருக்கிறாளெல்லே...? அவளுக்கும் உவன் நடராசன்ரை தம்பிக்கும் ஏதோ தொடர்பாம்...!'

கந்தையரின் உடலில் மெதுவாக நடுக்கம் ஏற்படுகிறது. ஆத்திரத்தாலா? ஆடுகால் தொடர்கிறது:

'இதை நான் முதலிலை நம்பேல்லை, கண்டியோ? ஆனா, நேற்றைறக்கு ராத்திரி உன்ரை அடிவளவிலை நிக்குது பார், ஒரு வேம்பு...! அதனடியிலே உன்ரை மோளும் அவனும் நிண்டு ஏதோ கதைச்சதை என்ரை அவள் கண்டாளாம்...!'

குந்தியிருந்த ஆடுகால், டாறிப்போய் நிலத்திலே புரள்கிறது; கந்தையர் ஆவேசத்தோடு எழுந்து நிற்கிறார். தூஷணை வார்த்தைகள் மழையாகப் பொழிய, காலினால் பிளாவையும், கள்ளையும் உதைக்கிறார். ஆடுகால் மணியத்தின் முகத்தில் பிளா விழுந்து சிதறுகிறது.

உச்சிப் பொழுது; வெப்பம் உடலை வாட்டுகிறது.

ஆரியகுளச் சந்தியிலுள்ள மலையாளத்தானின் தேநீர்க் கடை ரேடியோ அலறுகிறது.

வாகை மரம் காற்றில் அலைப்புற...

கந்தையரின் உடலும் உள்ளமும் தள்ளாட அவர் நடந்து வந்து கொண்டிருக்கிறார்:

'தாசி!... நீயும் அப்படியாடி!...இண்டைக்கு ரெண்டக்தா ஒரு முடிவு எடுத்திடுறன்...!'

* * *

நல்ல முழு நிலாக் காலம் என்ற போதிலும், வேப்ப மரத்தைச் சுற்றி மெல்லிய இருட்டுப் போர்வை கவிந்திருக்கிறது. கந்தையரின் வீடும், நடராசாவின வீடும் நிலவில் குளித்துக்கொண்டு அமைதியுள் உறங்கிக் கிடக்கின்றன. வேப்ப மர அடி மரத்தோடு அவனும், அவளும் நெருங்கி நிற்கின்றார்கள்.

'புவனம்...!' என்றழைக்கிறான், அவன்.

'...ம்!' என்கிறாள், அவள்.

சில விநாடிகள் மௌனத்தினுள் ஆழ்கின்றன.

'ராஜ்...! நம் விஷயம் உங்கண்ணருக்குத் தெரியவந்தது. அவர் உங்களை அடித்து விட்டார் என்று கேட்க மிகவும் துக்கமாய் இருக்கு! உங்கடை கன்னமெல்லாம் சிவந்திருக்குமே" நல்லா வலித்ததா, ராஜ்...?' அவளுடைய கரமொன்று அவன் கன்னத்தைத் தடவுகிறது.

அவன் அவளுடைய கரங்களைப் பற்றுகிறான்; அவை என்றும்போல குளிரில் நடுங்கும் புறுவாக விருக்கின்றன'

'வலிக்கவில்லை, குஞ்சு! உன்னையடைய எத்தனையும் படலாம்! அண்ணன் இவ்வளவோடை விட்டுட்டார்!... ஆச்சிக்குத் தெரிந்தா என்ன நடக்குமோ?... துடித்துப் போவா...?'

புவனம் பேசாமல் நிற்கிறாள்; அவளுடைய கண்கள் வானத்திலே எதையோ தேட முயல்கின்றன; பால் நிலவும், மலர்த் தாரகைகளும் எதையெதையோ கூறாமல் கூறுகின்றன.

'ராஜ்...!' என்றழைக்கிறாள்: 'நேற்றைக்கு ஆரோ உங்கடை வீட்டிற்குக் காரிலை வந்தினம் போலிருக்கு...?'

'ஓம், புவனம்! அண்ணியின் அம்மாவும், தங்கச்சியும் வந்தவை!...'

'அண்ணியின்ரை தங்கச்சியா?...'

'ஓ... நான் முன்பு கூறினேனே சரசு என்று, அவள்!'

'போட்டினமா?...'

'இல்லை... நாளைக்குத்தான் போகினம்!...'

—இருந்தாற்போல் அவனுக்கு ஒருவித குறும்பு எண்ணம் எழுகிறது:

'புவனம்...சரசு இருக்கிறாளே? அவள் நல்ல அழகி... உன்னைப்போல ஒல்லியல்ல... தளுதளென்று இருப்பாள்!..'

ஒரு பெண்ணுடன் எதையும் பேசலாம்; ஆனால், இன்னொரு பெண்ணின் அழகை வர்ணித்தால் போதும், வேறு வினையே வேண்டாம், என்பதை அவனறிவான். அதை அன்று நேரில் கண்டான்.

புவனத்தின் கண்கள் திடீரெனக் கலங்குகின்றன; ரோசத்தினால் முகம் சிவந்து விடுகிறது; அவனுடைய கைகளுக்குள் சிறைப்பட்டிருந்த கரங்களைப் படீரென உதறி எடுக்கிறாள். வார்த்தைகள் பொறாமையால் தடுமாறி ஒலிச்சிரல்களாக...

'அப்ப அவளையே கட்டிக் கொள்ளுங்கோ...' என்று விம்மியபடி கூறிவிட்டு ஓட முயன்றவளை வாரியள்ளித் தடுத்தான், அவன்.

'அடி புவனம்! என் புவனம்...! உன் அழகின் முன் உலகத்தின் அழகெல்லாம் எனக்குத் தூசியடி...!'

ஆடுகால் மணியத்தின் வீடு, கந்தையரின் பின் வேலியோடு இருக்கிறது; ஆடுகாலின் கிணற்றடியில் யாரோ தண்ணீர் அள்ளும் ஓசை கேட்கிறது.

'ராஜ்!... நீங்க சரியான ஆள்'...நான் வாறன்...! ஆராவது பாத்திடுவினம்!...'

அவள் வேப்பமர இருளைக் கடந்து, ஒளிநிலத்தில் கால்களைப் பதித்து, வீட்டிற்குள் புகுந்து மறைகிறாள்.

* * *

அண்ணன், சரசு இருவரோடும் அளவளாவிக்கொண்டிருக்கும் ராஜகோபாலிற்கு நேற்றிரவு நடந்தவை நினைவில் கிளை பரப்புகின்றன. அவன் முன்னால் அமர்ந்திருக்கும் சரசு அழகிதான்.

பாலனவை மயக்கிய அழகல்லவா?

அந்த அழகைப் புவனத்திடம் கூறப்போய் அவள் ஒரு கணம் பட்ட பாட்டை நினைத்துப் பார்க்கிறான், அவன்.

மத்தியான வேளை. அடுக்களைக்குள் அண்ணியும், ஆச்சியும் சமையலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அண்ணியின் தாயும் அடுக்களைக்குள்ளேயே இருக்கிறாள். சனிக்கிழமை ஆதலால், அண்ணனுக்குச் சுருட்டு வேலை இல்லை.

'அத்தான்...!' என்றழைக்கிறாள் சரசு. ராஜகோபாலை அல்ல; நடராசாவைத்தான்.

'போராட்டம், போராட்டம் என்று உங்கடை கட்சி நெடுகப் போராடுகிறதே?... வெற்றி கிடைக்குமா?...'

நடராசா சரசுவைப் பார்க்கிறான்:

'தர்மத்துக்குட்பட்ட நியாயமான போராட்டங்கள் எப்போதும் தோல்வி காண்பது கிடையாது!...முதலில் தோல்வி காண்பது போல இருந்தாலும், முடிவிலை நிச்சயமாக வெற்றியைத்தான் அடையும்! எங்கடை கட்சி இல்லாமல் இருந்திருந்தால், ஈழத்திலை தமிழர் என்று ஓர் இனம் இருப்பதே உலகத்திற்குத் தெரியாமல் போயிருக்கும்!..'

'அது சரி, அத்தான்! சிங்களம் படிக்கிறதைப் பற்றி என்ன சொல்லுறியள்...?'

'சிங்களத்தைப் படிச்சாப் போலை எதுவும் எதிர்பார்ப்பது போல கிடைத்துவிடப் போவதில்லை! படிக்காமலிருப்பதுதான் தமிழினத்தின் விமோசனத்திற்கு நல்ல வழி...'

'சிலர் படிக்கினமே?...

'எங்கையும் ஒரு நல்ல காரியத்தைச் செய்யத் தொடங்கின, அதைக் கெடுத்து வைக்க ஒரு சிலர் இருக்கத்தான் செய்வினம்! எதிர்ப்பு இருக்கத்தான் வேணும்...! அப்போ தான் எங்கடை போராட்டங்களுக்கும் உறுதி வரும்...!'

சரசுவை ஆச்சரியத்தோடு பார்க்கிறான், ராஜகோபால். 'வேலிக்குளடங்கிய பெண் என்று எண்ணியிருந்த சரசுவிற்கு இதெல்லாம் தெரிகிறதே?'

'உங்களுக்கு எப்ப சோதனை?...' என்று ராஜகோபாலைப் பார்த்துக் கேட்கிறாள், சரசு. கேட்டவளைக் கேட்கப்பட்டவன் பார்க்கிறான்.

ஒரு கணந்தான்; அவள் விழிகள் தாழ்கின்றன.

'இன்னும் சில மாதங்களில்!...'

'பாஸ் பண்ணுவியளா...?'

'ஆருக்குத் தெரியும்!...நீர் இப்ப எச். எஸ். சி. பெஸ்ற் இயரா?...'

(13-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# எல்லோருக்கும் ஏற்ற வழி காட்டும் நூல்

## வள்ளுவர் அருளிய குறள்

## நம் வாழ்வு குறளோடு இணைய வேண்டும்

—கா. பொ. இரத்தினம், தலைவர், தமிழ் மறைக் கழகம்—

**வா**ழ்வின் பலதுறைகளிலும் திருக்குறள் வழிகாட்டத் தக்கது. வழுக்கும் நிலத்தில் நடப்பவருக்கு ஊன்றுகோல் உதவி செய்யும். இது போல வாழ்விலே வழுக்கி விழாமல் தொடர்ந்து நடப்பதற்குத் திருக்குறள் உதவி செய்கிறது. எனவே நமது வாழ்வு குறளோடு இணைந்து இருக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ் மறைக் கழகத்தின் பதின்மூன்றாவது ஆண்டு மாநாட்டை முன்னிட்டு பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் கூறியுள்ளார்.

மேலும் அந்த அறிக்கை கூறுவதாவது:

திருக்குறள் தோன்றிய காலந்தொட்டுப் புலவர் பெருமக்கள் திருக்குறளைத் தமிழ்மறை என்று போற்றி அதன் சிறப்பியல்புகளைப் பலவாறு புகழ்ந்தார்கள். "தமிழிலே சிறந்த மறை இல்லாத பெருங்குறையைத் திருக்குறள் நீக்கி விட்டது; உலகத்து மறைகளில் எல்லாம் இது சிறந்தது; இதனைப் படித்தபின் படிக்க வேறொரு நூலுமுண்டோ? இஃது எல்லாச் சமயத்தவரும் எல்லா நாட்டவரும் நல்லதெனப் போற்றும் நூல்; இந்த முப்பாலின் மிக்க நூல வேறில்லை; இதில் இல்லாத பொருளில்லை, வட மொழி வேதங்களின் ஆற்றல் அழிந்துவிடுமென்று ஏட்டின் புறத்தெழுதார்; திருக்குறளை எழுதினாலும் அதன் ஆற்றல் அழியாது; வடமொழி வேதங்களை அந்தணரே ஓதலாம்; தமிழ் மறையைப் பலரும் ஓதலாம்; ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறும் நூல்களைப் போலன்றி உலகம் முழுவதுக்கும் ஒரு நீதி கூறும் பெருமையுடையது இத்தமிழ் மறை"—இவ்வாறு பற்பல வகையாகத் திருக்குறளின் தனிச்சிறப்புக்கள் புலவர்களால் எடுத்துக்காட்டப் பட்டுள.

### தமிழ் மறை இயக்கம்

எனினும், பொதுமக்கள் திருக்குறளைத் தமிழ் மறை எனக்கொண்டு நன்கு போற்றவில்லை. தமிழ் மறை எனும் வழக்குப் புலவர் நாவுடன் நின்றதேயன்றிப் பொது மக்கள் வாயிலே பயிலவில்லை இந்தப் பெருங்குறையை நீக்கித் திருக்குறளே தமிழ் மறை என்ற கருத்தை மக்கள் உள்ளத்தில் நன்கு பதிப்பதற்காகவே எமது கழகத்துக்குத் தமிழ் மறைக் கழகம் என்று பெயரிட்டோம், எமது இத்தமிழ் மறை இயக்கம் தமிழ் மக்கள் மறந்து ஒதுக்கினவற்றை நினைவூட்டி மீண்டும் மலரச் செய்யும் இயக்கமாகும். தமிழ் இனத்தின் பெருஞ் சாபக்கேடு தாய் மொழியாம் தமிழ் மொழிக்கு வாழ்வின் துறையனைத்திலும் முதன்மை கொடாமையே ஆகும். தனித் தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம், எல்லாந் தமிழ் இயக்கம் இவற்றை எல்லாந் தழுவி இவற்றுக்கு மூலமாக ஒளிர்வது இத்தமிழ் மறை இயக்கம்.

சென்ற பன்னிரண்டாண்டுகளாக எமது தமிழ்மறைக் கழகஞ் செய்த பணியினால் இன்று தமிழ் மறை எனுஞ் சொல் தமிழ் மக்கள் நாவில் நன்கு பயிலத் தொடங்கி உளது. திருக்குறளின் சிறப்பை மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள்.

### திருக்குறளோடு வாழ்வு இணைய வேண்டும்

திருக்குறளோடு நம் வாழ்வைப் பல துறைகளிலே பிணைத்தற்கு இத்தகைய செயல்கள் இன்றியமையாதன. வாழ்வின் பல துறைகளிலும் திருக்குறள் வழி காட்டத் தக்கது.

வழுக்கும் நிலத்தில் நடப்பவருக்கு ஊன்றுகோல் உதவி செய்யும், இதுபோல வாழ்விலே வழுக்கி விழாமல் தொடர்ந்து நடப்பதற்குத் திருக்குறள் உதவி செய்கிறது.

"இழுக்கலுடையுழி ஊற்றுக்<br>கோலற்றே<br>ஒழுக்கமுடையார் வாய்ச்<br>சொல்."

என்று இந்த உண்மையினைத் திருவள்ளுவரே சிறப்பாக எடுத்து விளக்கியுளர்.

### திருக்குறளிலுஞ் சிறந்த சாமியார் இல்லை

வாழ்விலே வரும் துன்பங்களை நீக்கி வெற்றி காணுவதற்கு ஒரு சாமியார் அருள் செய்கிறார் என்றால் அவரைத் தேடி ஓடாத மக்களை இவ்வுலகில் காண்பது அரிது. ஆனால், உலகில் நடப்பது என்ன? சாமியார்கள் உலகை ஏமாற்றுகிறார்கள். சாமியார்களின் சாயம் வெளிறினவுடன் மக்கள் அவர்களைக் குட்டிக் கலைக்கிறார்கள். துன்பம் துடைத்து, வெற்றி பெற்று, இன்பத்தை ஈட்டுதற்குத் தக்க வழியைத் திருக்குறள் காட்டுகிறது. திருக்குறளை விடச் சிறந்த சாமியார் இவ்வுலகில் இல்லை என்பதை மக்கள் உணரல் வேண்டும்.

### எவர்களுக்கும் திருக்குறள் வழிகாட்டுகிறது

நாட்டை ஆளுந் தலைவர்களாயிருப்பினும், அமைச்சர்களாயிருப்பினும், கொலை, களவு முதலிய பெரும் பாவங்களைச் செய்பவர்களாயிருப்பினும், வறியவர்களாயிருப்பினும், பெண்களாயிருப்பினும் எவர்களுக்கும் எந்நிலையிலும் திருக்குறள் வழிகாட்டுகிறது. இந்த உண்மையை மக்கள் அறிந்து திருக்குறளிடஞ் செல்ல வேண்டும். மக்கட் குலத்தின் எந்தப் பிரச்சினையையும் தீர்க்கத் திருக்குறள் வழி காட்டுகிறது. சுருங்கக் கூறின் வையகத்தில் வானக வாழ்வைக் காண வழி வகுக்கிறது எனலாம். திருக்குறளில் ஈடுபட்டதால் வாரம் பட்டுப் பேசுகிறோம் என்று எண்ண வேண்டாம். 'சந்தேகங்கொள்ளும் ஒவ்வொருவரையும் திருக்குறளிடஞ் சென்று பார்த்துத் தீர்ப்புக் கூறுங்கள் என்று கேட்கிறோம்.

### உள்ளக்கண்ணாடி

இன்று தனி மனிதனுடையவாழ்வையும் சமுதாய வாழ்வையும் பாழாக்கும் கொடுமைகள் எல்லாவற்றையும் திருக்குறள் எடுத்துக் காட்டிக் கடிந்துளது. தனி மனிதன் தன்னையுந் திருத்திச் சமுதாயத்தையும் திருத்தி உலகைத் திருத்த அது வழி கூறுகிறது.

ஒவ்வொருவரிடத்துமுள்ள மனிதப்பண்பை அது எடை பாட்டுக் காட்டுகிறது. ஒவ்வொருவருடைய உள்ளத்திலுமுள்ள அழுக்குக்களை அது கண்ணாடி போல நன்கு காட்டுகிறது. ஒவ்வொருவருடைய சொல்லிலும் செயலிலும் உள்ள குறைகளைக் காட்டி உயருதற்கு வழியையும் உரைக்கிறது. அதனில் ஈடுபடத் தன்னம்பிக்கையையும் தளரா முயற்சியையும் உண்டாக்குகிறது. எண்ணியதை எண்ணியபடி பெறலாம் என்று முழங்குகிறது. இத்தகைய பெருநூலை, அறிவுக் களஞ்சியத்தை, ஆற்றல் தரும் அரும்மருந்தை, ஏற்றம் நல்கும் சிந்தாமணியை, இன்பம் ஊட்டும் இன்ப சுரபியைப் படியுங்கள்; போற்றுங்கள்; பயன்படுத்துங்கள்; என்பதே உலகத்துக்கு எமது கழகம் விடுக்கும் வேண்டுகோளாகும்.

### ஒரு குறளே போதும்

மக்கள் உள்ளத்தில் மறைந்து உறைந்து கிடக்கும் ஆற்றலைக் கிளர்ந்தெழச் செய்து எல்லா மக்களுக்குந் தன்னம்பிக்கையையும் பேரூக்கத்தையும் திருக்குறளைப் போலக் கொடுக்கத் தக்க வேறு நூல் இவ்வுலகில் இல்லை எனலாம். மக்கள் உள்ளத்திலே உணர்ச்சியை எழுப்ப, ஊக்கத்தை வளர்க்க ஒரு சொல்லே போதுமானது. வேடனாகிய குகனை இராமர் முதலிற் கண்டபொழுது "தோழன்" என்று அழைத்தார். இந்தத் 'தோழன்' என்ற சொல் குகனை ஆண்டுவிட்டது. பரதன் நாற்படையுஞ் சூழ இராமனைக் காட்டிற் கண்டு வணங்கி அயோத்திக்கு அழைத்துச் செல்லுதற்காகக் கங்கைக் கரைக்கு வந்தான். அவன் வந்தமையைக் கண்ட குகன் அவனுடைய நோக்கத்தை அறியாதவனாய் இராமனுக்கு இடுக்கண் விளைக்க வந்துளன் என்றெண்ணிப் பெருஞ் சீற்றங் கொண்டு பேசுகிறான்:

"ஆழ நெடுந்திரை ஆறு<br>கடந்துஇவர் போவாரோ<br>வேழ நெடும்படை கண்டு<br>விலங்கிடும் வில்லாளோ<br>தோழமை என்றவர் சொல்லிய<br>சொல்லொரு சொல்லன்றோ<br>ஏழமை வேடன் இறந்திலன்<br>என்றெனை ஏசாரோ".

இங்கே "தோழமை" என்ற ஒரு சொல் அவனை ஆட்கொண்டமையை நாம்நன்கு காண்கிறோம்.

மணிவாசகருடைய திருவாசகத்திலீடுபட்டுருகிய இராமலிங்க வள்ளலார்

"வருமொழிசெய் மாணிக்க<br>வாசகநின் வாசகத்தில்<br>ஒருமொழியே என்னையுமென்<br>னுடையனையும் ஒன்றுவித்துத்<br>தருமொழியாம் என்னிலினிச்<br>சாதகமேன் சஞ்சலமேன்<br>குருமொழியை விரும்பியயல்<br>கூடுவதேன் கூறுதியே"

என்று பாடி 'ஒரு மொழியின்' பெருமையினைப் புலப்படுத்துகிறார்.

இவ்வாறே திருக்குறளிலுள்ள குறள்களில் ஒன்றே மக்களை உய்விக்கப் போதுமானது. நம் மக்களுடைய உள்ளத்தில் ஒரு குறள் முறையாகப் பதியுமானால் நம்மினம் விரைவில் உயர்வடையும். நம் உயர்வைக் கண்டு உலகமும் 'உயர்வு பெற முயலும்.

## மூதூர் செய்தி:

### மூதூர் பட்டினசபையாகும்

இது காலவரையும் கிராம சபையாக இயங்கிவந்த மூதூர், பட்டின சபையாக உயர்த்தப் படவிருக்கிறது. இப்பட்டின சபையில் 14 அங்கத்தவர்கள் இருப்பார்கள். இரண்டு தமிழ் உறுப்பினர்களும் இடம் பெறுவதற்கேற்றவகையில் வட்டாரங்கள் பிரிக்கப்படும் எனவும் தெரிகிறது.

அண்மையில் தலத்தாபன அதிகாரி நடாத்திய ஓர் மாநாட்டில், கிராமசபையாக இயங்கி வந்த மூதூரின் அந்தஸ்தை திடீரென நகர சபையாக உயர்த்தும் முயற்சியை மூதூர் முதலாவது உறுப்பினர் ஜனுப் முகம்மதலி கண்டித்தார். படிப்படி கிராமத்தின் அந்தஸ்தை உயர்த்துவதே நல்லது எனவும் கேட்டுக்கொண்டதற்கிணங்க மூதூர் பட்டின சபை அந்தஸ்தைப் பெறுகிறது.

### சிங்களக் கிராம சேவகர்கள்

மூதூர் தொகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு சிங்களக் கிராம சேவகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த முறை கேட்டையிட்டு மூதூர் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப் முகம்மதலி அவர்களும், தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகமும் உள்துறை அமைச்சரிடம் முறையிட்டுள்ளனர். சிங்கள மக்கள் பெருவாரியாக வாழும் பகுதிகளில் சிங்களவர்கள் நியமனம் பெறுவதைத் தாங்கள் ஆட்சேபிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

### பெயர் மாற்றம்

பரம்பரை பரம்பரையாகத் தமிழ் பேசும் மக்கள் வசித்து வந்த பிரதேசமான கந்தளாய் என்ற கிராமத்தின் பெயரை கந்தளாவ என்று அரசாங்கம் சிங்களப் பெயராக மாற்றிவிட முயற்சி செய்து வருகிறது. இத்தகைய அநீதியைச் செய்யலாகாது என்று மூதூர் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப் முகம்மதலி கேட்டுக்கொண்டார்.

### தமிழியக்கம் ஒத்திவைப்பு

மூதூர்த் தொகுதியில் ஆரம்பிக்கப்படவிருந்த எல்லாம் தமிழ் இயக்கப் பிரசாரக் கூட்டங்கள் ஆடி மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் வாழ்பவர்கள் அனைவரும் விவசாயிகள். தற்போது எல்லோரும் வயல்களில் கடமை புரிவதால் பிரசாரக் கூட்டங்கள் நடத்துவது பயனளிக்காது என்று தெரிகிறது.

## 112 ரூ. எடை, 42 அங்குல நெஞ்சு

### மூன்று வயதுச் சிறுவனுக்கு!

ஒரு ரஷ்யச்சிறுவன் தனது மூன்றாவது வயதில், 112 ரூ. எடையுள்ளவனாகவும், 42 அங்குல நெஞ்சுச் சுற்றளவு உடையவனாகவும் இருக்கிறான். இவனை விசேஷ வைத்திய மேற்பார்வையில் வைத்திருக்கின்றனர். இவன் நன்றாகச் சாப்பிடுவதுடன், சங்கீதத்தில் அதிக பிரியம் காட்டுகிறானும்.

இச்சிறுவன், தெற்கு கஸாக்ஷ்டானிலுள்ள விவசாயக் கூட்டுறவுப் பண்ணையைச் சேர்ந்த இரு அங்கத்தவரின் நான்காவது குழந்தையாவான். அவனுடைய உயரம் இப்பொழுது 3 அடி ஏழு அங்குலமாகும். பிறக்கும் போது, நிறை ரூ. 15.





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

# அழகியின் வீணையை அழகன் பறித்தான்

அழகே உருவான, இளமை முறுக்குடனும் நிமிர்ந்த நடையுடனும் கூடிய அந்த வாலிபன் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து அந்த வீட்டினுள் நுழைகிறான். அற்புதமான வீணையின் நாதம் கேட்போரைக் கவரும் வகையில் ஒலிக்கிறது. வீணையின் நாதத்தைத் தொடர்ந்து அவனின் கால்கள் நகர்கின்றன.

தங்கச்சிலையென அழகி ஆசனமொன்றில் அமர்ந்திருக்கிறாள். செங்காந்தள் விரல்கள் வீணையை மீட்ட இன்ப ஒலி அவனுடைய காதுகளில் தேனமுதம் போலப் பாய்கிறது. மதுவுண்ட வண்டுபோல் மென்மேலும் அவன் அவளை நெருங்குகிறான். வீணையின் ஓசை நின்றுவிடுகிறது. அவளுடைய கைகள் வீணையை மீட்ட மறுத்துவிடுகின்றன போலும். அவன் வீணையைப் பறித்து மீட்ட ஆரம்பிக்கிறான். வெள்ளம்போல் இசை அந்த வீடெங்கும் பரவுகிறது.

எந்த நிமிடத்தில் எது நேருமோ என்று அந்த மின்னற் கொடியாள் பதைபதைக்கிறாள். தனது தந்தையின் எதிரியாகக் கருதப்படும் ஒருவரின் மகன்—தன் நெஞ்சில் புகுந்து இடம் பிடித்துக்கொண்டவன்—தன் தந்தையின் இல்லத்திலேயே புகுந்து விட்டால் என்னதான் செய்ய முடியும்?

வீணையின் ஒலி அவளுடைய பயத்தைப் போக்கி விடுகிறது. முற்றாகப் பயம் நீங்கிவிட்டதும், இசைக்கேற்ப அவளுடைய கால்கள்

## ஸ்டூடியோவில்

ஆட்டம் போட ஆரம்பிக்கின்றன.

இந்த நெருக்கடியான கட்டத்தில் 'கட்...கட்' என்று டைரக்டரின் கட்டளை பிறக்கிறது.

அவனாக சிவாஜி கணேசனும், அவளாக தேவிகாவும் கமலா பிக்சர்சாரின் 'அன்னையின் இல்லம்' என்ற படத்துக்காக இந்தமாதிரி நடித்தனர். இதன் கதையை ஆரூர்தாஸ் எழுதியுள்ளார். பி. மாதவன் டைரக்ட் செய்யும் இப்படம் ஏறத்தாழ 10 ஆயிரம் அடிகள் வளர்ந்துவிட்டது. வாஹினி ஸ்டூடியோவில் இப்படம் எடுக்கப்படுகிறது. எம். வி. ராஜம்மா, வி. கே. ராமசாமி, ரங்கராவ் ஆகியோர் இப் படத்தில் தோன்றுகின்றனர்.

## கடமையும் காதலும்

சேலம் ரத்னா ஸ்டூடியோவில் எம். ஏ. வி. பிக்சர்சார் என். ஏ. வேலாயுதம் எழுதிய 'கடமையும் காதலும்' என்னும் கதையைப் படமாக்க முயற்சிகள் எடுத்துவருகின்றனர். இப்படத்தில் சிவாஜியும் தேவிகாவும் சோடி சேர்ந்து நடிப்பார்கள் என்று தெரிகிறது. எம். ஏ. வி. யின் வெற்றிப் படமான 'முதலாளி' புகழ் வி. சீனிவாசன் இப்படத்தை டைரகட் செய்வார்.

பட விமர்சனம்

# சுமைதாங்கி

இளம் வாலிபனொருவனுக்கு இளமையே ஒரு பெரிய சுமை. அத்துடன் அன்புச் சுமை, காதற் சுமை, குடும்பச் சுமை, உழைப்புச் சுமை, துன்பச் சுமை என்று பல சுமைகளும் சேர்ந்துவிட்டால் அவ்வளவுதான். எண்சாண் உடம்பு எட்டாக உடைந்து நொறுங்க வேண்டியதுதான். ஆனால் நமது தாநாயகன் எல்லாச் சுமைகளையும் தானே தாங்குகிறான். சமாளிக்கவும்முடிகிறது. ஆனால் காதல் சுமையை மட்டும் தாங்கச் சக்தியற்றவனாகிறான். தான் தாங்கிய சுமைகளைக் கைமாற்றுகிறான்.

ஆமாம் அதுதான் அவன் இறுதி முடிவு. தன்னை அமுக்கிய சுமையை யாரிடம் ஒப்படைக்கிறான்? அதுதான் கதையின் ஜீவநாடி. ரசிகர்களின் கண்களில் கண்ணீரைக் கசியவைக்கும் -தமிழ்த்திரை உலகம் பயப்படும்- துணிகரமான முடிவு.



இரு அண்ணன்மாருக்கு ஒரு தங்கை. மூத்தவனுக்கு மனைவியுண்டு. இளையவன் கல்லூரி மாணவன். வயோதிபத் தந்தைதான் வீட்டுக் காவலன். மூத்தவனின் 500 ரூபாய் மாதச் சம்பளத்தில் கவலைகளெதுவுமின்றி கண்ணியமாக நடக்கும் குடும்பம்.

உடன் படிக்கும் மாணவர்களின் குறும்புத்தனத்தால் கல்லூரி மாணவன் பாபு (ஜெமினி கணேசன்) ராதாவைக் (தேவிகாவை) காதலிக்க ஆரம்பிக்கிறான். விளையாட்டு வினையாகமுடிகிறது. மாணவர்களின் குறும்புகளுக்கு இலக்கானவர்கள் இருவரும் உயிருக்குயிராக ஒருவரை ஒருவர் நேசிக்கின்றனர்.

குடும்பச் சுமை தாங்கும் பொறுப்பு அண்ணனிடமிருந்து (முத்துராமன்) பாபுவுக்கு மாறுகிறது. காதலும் ஈடேற முடியாதபடி சுமை மென்மேலும் அமுக்குகிறது. இறுதியாகத் தன் சுமையை வேறு வகையில் அகற்றப் புகலிடம் தேடி ஓடுகிறான் பாபு. காதலி ராதாவும், அண்ணனும் அவனைத் தேடி ஓடுகின்றனர். இவர்களால் பாபுவைக் காணமுடிகிறதா? என்பதை நாங்கள் கூறுவது நியாயமில்லை.

ஸ்ரீதரின் கதை, வசன டைரக்ஷனில் உருவாகிய படமென்றால் எப்படியிருக்கும் என்பதை ரசிகர்கள் ஊகித்துவிடலாம். அத்துடன் வின்சென்டின் ஒளிப்பதிவும்சேர்ந்து படம் கலைப்பொக்கிஷமாக மிளிருகிறது.

தமிழ்ப் பட உலகில் இரவு வேளைகளை ஸ்டுடியோவிற்குள்ளேயே படம் பிடித்துவிடுவார்கள். சென்னை மரீனாவில் உள்ள காந்தி சிலையையும், கடற்கரையையும் இரவு வேளையிலேயே சுத்தமாகப் படம் பிடித்துள்ளார் வின்சென்ட். உன்னதமான முறையில் அமைந்திருக்கிறது. நல்ல முயற்சி.

சோகரசம் ததும்பும் போது நமது படங்களில் பாடல்கள் பாடப்படுவது இயற்கைக்கு முரணானது. ஆனால் சுமைதாங்கியில் நல்லதொரு உத்தியைக் கையாண்டுள்ளனர். பாத்திரத்தின் வாய் அசைப்பை நீக்கி, முகபாவ மாற்றங்களைக் காண்பித்து, பாடல்களைப் பின்னணியாகவே அமைத்துள்ளனர்.

தந்தையாகவரும் சாரங்கபாணி, மகள் லட்சுமியாக வரும் விஜயலட்சுமி முதலானோரும் திறமையுடன் நடித்துள்ளனர். நாகேஷ், பாலாஜி முதலியோரும் தோன்றுகின்றனர். உள்ளத்தைத் தொடும் சம்பவங்களை வைத்துப் பின்னப்பட்ட கதை அமைப்பைக் கொண்டு கலை ரசனையுடன் பிணைந்து உருவான உயர்ந்த சித்திரம் "சுமைதாங்கி"

—பானு

# நகைச்சுவை மூலம் நற்கருத்து

## 'வில்லுப்பாட்டு' பாராட்டில் மாஸ்டர் சிவலிங்கம்

'நாட்டுக்கு வேண்டிய நல்ல கருத்துக்களை நகைச்சுவையுடன் சேர்த்து ஊட்டினால், போதுமான வரவேற்புக் கிடைக்கும்.



அத்துடன் நல்ல கருத்துக்கள் நாட்டில் இலகுவாகப் பதிந்துவிடும். இந்தக் கொள்கையையே கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தமிழகத்தில் செய்துவந்தார்.

"வில்லுப்பாட்டு மூலம் நல்ல கருத்துக்களை நகைச்சுவை கலந்து நாம் வழங்கி வருகின்ற காரணத்தால்தான் நாட்டிலே வில்லுப்பாட்டுக் குழுவினருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்து வருகிறது. இலங்கை எங்கணுமே இதுவரை 60 தடவைகளில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளோம். புதுக் கருத்துக்களைக் கொண்ட வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளையும் மென்மேலும் தயாரித்துக் கொண்டுள்ளோம் என்பதையும் அறியத் தருகிறோம்."

வில்லுப்பாட்டுக் குழுவின் 60 வது நிகழ்ச்சி நடைபெற்று முடிந்ததை ஒட்டி சிறுவர் கலைக் கழகம் நடாத்திய ஒரு பாராட்டு விருந்தின் போது நன்றி தெரிவித்துப் பேசுகையில் மாஸ்டர் சிவலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 'கலை அம்சங்களை ரசிப்பதில் எம் தமிழ் பேசும் மக்கள் எப்போதும் முன்னணியில் திகழுபவர்கள். கடந்த காலத்தில் நகைச்சுவை நாடகங்களை எமது நகைச்சுவை நாடக மன்றம் நடாத்தியது. 'சூடு சாம்பலாச்சு போடியாரே' என்ற நாடகம் 28 தடவைகளுக்கு மேல் அரங்கேற்றப்பட்டது. இதிலிருந்தே தமிழ் பேசும் மக்களிடத்தில் கலைஉணர்ச்சி அதிகமுண்டு என்பதை உணரலாம்' என்றார்.

### பாராட்டு

நகைச்சுவை நாடக மன்றத்தில் உறுப்பினராக இருந்து, எந்தப் பெண்ணும் துணிந்து செய்ய முடியாத ஓர் தியாக வாழ்க்கையை மேற்கொண்டு, தியாகி எருவில் மூர்த்தியைத்திருமணம் செய்யப்போகும் செல்வி சிவயோகம் பொன்னம்பலத்துக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## நாடக விழா ஒத்திவைப்பு

மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் இம் மாதம், 7—9-ம் திகதிகளில், நடைபெறவிருந்த, நடிகவேள் லடீஸ் வீரமணி குழுவினரின் நாடக விழா, திரு. வி. ஏ. கந்தையா அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக, ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும், இம்மாதம் 14, 16, திகதிகளில், நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'வாடகை வீடு' பாராட்டு விழா


"ஈழத்திரு நாட்டின் கலை வளர்ச்சிக்கு உழைத்துவரும் விமலா உதயணன் புரடக்ஷன்ஸ் ஸ்தாபனத்தாரை நாம் பாராட்ட வேண்டும். நாடகத்துறை வளர இத்தகைய கலாமன்றங்கள் மென்மேலும் தோன்ற வேண்டும். நாடகப் பணியில் இந்த மன்றம் செய்துவரும் சேவையைப் பாராட்டுவதோடு இது போன்ற மன்றங்களை நாம் ஒவ்வொருவரும் ஆதரிக்க வேண்டும்."

—இவ்வாறு கொழும்பு ஜீ. ஓ. எச். ஹோட்டலில் விமலா உதயணன் நாடகத் தயாரிப்பாளர்கள் நடாத்திய "வாடகை வீடு" என்ற நாடகத்தின் கலைஞர்களுக்கு அளித்த விருந்துபசாரத்திற்குத் தலைமை தாங்கிய திறைசேரி அதிகாரி திரு. சி. பாலசிங்கம் தமது தலைமையுரையின் போது கூறினார். விழாவின் ஆரம்பத்தில் தலைவர் குத்துவிளக்கேற்றி வைத்தார்.

இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராஜா பேசுகையில், "இரண்டு வெற்றி நாடகங்களைத் தயாரித்த விமலா உதயணன் தயாரிப்பு நிறுவனத்தினரைப் பாராட்ட வேண்டும். நாடகத்தின் பின் இப்படியான பாராட்டு விழாக்கள் மிக அவசியம்; ஏனெனில், இங்கே வயிற்றுக்கும் உணவு கிடைக்கிறது—செவிக்கும் உணவு கிடைக்கிறது"—என்று நகைச்சுவையுடன் கூறினார்.

அடுத்துப் பேசிய திரு. இ. சிவகுருநாதன் "நாடகங்கள் பொழுது போக்காக மட்டும் அமையாமல், வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அமைய வேண்டும். அதற்கொப்ப இம் மன்றம் சேவை செய்வது பாராட்டத்தக்கது" என்று கூறினார்.

திரு. கே. பாலச்சந்திரன், திரு. பி. சுந்தரலிங்கம், திருமதி த. முத்துக்குமாரசுவாமி, திரு. சி. சதாசிவம், திரு. எம். எப். டேவிட் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். திருமதி விமலாதேவி சொக்கநாதன் நன்றியுரை கூறினார்.



வீணையின் நரம்பினை விரல்கள் மீட்டிட விண்ணுயரெழுந்த மேன்மையாம் கானம் காதினில் பட்டதும், கருத்தெலாம் சிதறிட, காதல் வெள்ளம் கரைபுரண்டோடிட கன்னடப் பைங்கிளி காதலன் ஆந்திரக் காளையை நாடி ஓடினாள்; உள்ளத்தைப் பறிகொடுத்தனளே!

சினிமாஸ் திரைகளுக்கு வரும் 'சீதாராம கல்யாண'த்தில் என். டி. ராமராவ், சரோஜாதேவி.

தமிழ் பேசும் மக்களின்

# ஒத்துழைப்பைப் பெற்றால்தான் நாட்டில் வளம் பெருகும்

—அ. அமிர்தலிங்கம்

## வவுனியாவில் தமிழியக்கம் ஆரம்பம்

**மந்திரிகளின் வேலைகளை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளுவதால் மட்டும் நாட்டின் நெருக்கடிகளைத் தீர்த்து விட முடியாது. சிறுபான்மை மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றால் நாட்டில் வளம் பெருக வழியுண்டு. மன்னார் மாநாட்டுத் தீர்மானப்படி உடனடியாக நேரடி நடவடிக்கைகளில் இறங்காது சந்தர்ப்பத்தை உத்தேசித்துக் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டுள்ளோம். இன்றிருக்கும் நிலையில் அரசாங்கம ஆட்டம் கண்டுள்ளது.**

வவுனியா மைதானத்தில் நடைபெற்ற தமிழியக்க ஆரம்பக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: '1959ம் வருடத்தில் இருந்த அரசியல் நெருக்கடி இப்பொழுது உருவாகியுள்ளது. தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த நாட்டில் அமைதியோ வளமோ ஏற்பட முடியாது. அரசாங்கம் ஊசி முனையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலர் கட்சியை விட்டு வெளியேறப் போவதாகப் பயமுறுத்தி வருகின்றனர். மன்னார் மாநாட்டுத் தீர்மானப்படி இப்பொழுது நேரடி நடவடிக்கையில் எமது கட்சி இறங்குமானால், அரசாங்கம் துவேஷப் பிரசாரத்தை நடாத்தி தனது நிலையை ஸ்திரப்படுத்திவிடும். ஆகவே சூழ்நிலையை உத்தேசித்து சில காலம் பொறுத்திருந்து பார்ப்பதே மேல்.

'தமிழ் பேசும் மக்களின் விடுதலையை எந்தக் குறுக்கு வழியாலும் அடைந்துவிட முடியாது. அலரி மாளிகை விருந்து வைபவங்களில் கலந்து கொள்ளும் செனட்டர் நடேசனாலோ, அல்லது திரு. துரையப்பாவாலோ தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடப் போவதில்லை. தமிழ் பேசும் மக்களின் தியாகமும் இரத்தமும் வியர்வையும் கண்ணீருமே விடுதலையை அளிக்கவல்லன.

### கொம்யூனிஸ்டுகள்

'காலஞ் சென்ற கொம்யூனிஸ்ட் தலைவர் திரு. பி. கந்தையா சிங்களம் மட்டும் சட்டம் மீது பாராளுமன்றத்தில் பேசிய பொழுது, இச் சட்டத்தைச சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கும் வரை, கட்சி, சாதி, மத வேறுபாடின்றி தமிழ் பேசும் இனம் இம் மசோதாவை எதிர்த்தே தீரும்' என்று கூறியிருந்தார். ஆனால், இன்றோ, சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொண்டது மாத்திரமல்ல, தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை 'வகுப்புவாதம்' என்று பெயரிடுகிறது. இதன் மூலம், சிங்களக் கட்சி எதையும், அது இடது, மத்திய, வலது சாரியாக இருந்தாலென்ன தமிழ் பேசும் மக்கள் நம்ப முடியாதென்பது உறுதியாகின்றது.'

### திரு. தர்மலிங்கம்

அடுத்து, உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில், 'தமிழ்க் காங்கிரஸ் தனது மகாநாட்டை ஒத்திப்போட்டிருக்கிறது. இதற்குக் காரணம், அண்மையில் தேர்தல் வராது போல் தோன்றுவதனாலேயே' என்றார். 'எமது கட்சி (தமிழ்க் காங்கிரஸைப் போல) ஓர் தேர்தல் கட்சியல்ல. எங்களுடைய இயக்கம் ஓர் சுதந்திர இயக்கமாகும். அதற்குத் தேர்தல்கள் முக்கியமல்ல; அவை இரண்டாந்தரப் பிரச்சினையாகும்.'

அவர் தொடர்ந்து பேசுகையில், தமிழ் பேசும் மக்களை, மொழி ஆபத்தைத் தவிர்ந்த இன்னுமோர் பேராபத்து எதிர் நோக்கியுள்ளது என்று கூறினார். அது தான் தமிழ் பேசும் பகுதிகளில் சிங்கள, பௌத்த மக்களைக் குடியேற்றல்.

'அக்கரைப்பற்று முஸ்லிம்களை திகாவிப்பியா, செருவில என்னும் இடங்களில் இவ்வாபத்து பயமுறுத்துகிறது. திருக்கோணமலையில் பெரியகுளமும், யாழ்ப்பாணத்தில் நாகவிகாரையும் கூட சிங்கள, பௌத்த வசிப்பிடங்களாக வந்துவிடலாம். ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும், முஸ்லிம், கிறிஸ்தவன், இந்து — யாராகவிருந்தாலும், இவ்வாபத்தை உணர வேண்டும்.'

# முற்பேர்க்கு எழுத்தாளர்களின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கையைச் சார்ந்த மக்கள் இன்னலுற்ற காலத்தில் அவர்களுக்காகப் போர்க்குரல் எழுப்பி, தீப்பொறி பறக்க தீர்மானம் தீட்டினர். ஆனால் ஈழத்தில் சிறுபான்மை இனமாக விளங்கும் செந் தமிழ் பேசும் இனம் மொழியுரிமை, குடியுரிமை, வாக்குரிமை வாழ்விட உரிமை யாவையும் இழந்து தமிழ் பேசும் இனமாக—தனது தனிப் பண்பை பாதுகாத்து வாழ தத்தளிக்கின்ற இவ் வேளையிலும் சிங்கள அரசாங்கத்தின் இன வெறியை கண்டிக்கத் தயங்குகின்றனர். பல தடவையில் இவ் அடிப்படை பிரச்சினைகளைப் பற்றி மௌனம் சாதித்தனர். தவிர்க்க முடியாத சில வேளைகளிற்தான் ஏதாவது கூறித் தம்மை தப்பித்துக் கொள்ள முயல்கின்றனர்.

### எது யதார்த்தம்

இம் முற்போக்கு எழுத்தாளரின் நாவிலும் எழுத்திலும் அடிக்கடி நடம்புரியும் சொற்கள் யதார்த்தம், மக்கள் இலக்கியம், தேசியம், மண் வாசனை என்பவையே. யதார்த்தம் என்பதின் பொருள் உள்ளதை உள்ளவாறு கூறுதல். இப்படி யதார்த்தம் பேசுபவர்கள் ஈழத்தில் தமிழ் பேசும் இனம் படும் அல்லல் தொல்லைகளைப் பற்றியோ தாம் ஒரு தனி இனமாக வாழ அவர்கள் ஈடுபட்டிருக்கும் போராட்டங்கள்—இயக்கங்கள் பற்றியோ யாதும் கூறுது ஏதோ எல்லாம் எழுதுகிறார்கள். மக்கள் இலக்கியம் படைக்கிறோம் என்பவர்கள் அன்றாட வாழ்விற்காகத் திண்டாடி அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் இழந்து அடியுற்று, உதையுற்று, சுடுபட்டு, கலங்கி நிற்கும் மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட எழுதுகிறார்கள் இல்லை. இந் நிலை இன்னும் நீடிக்கின் ஈழத் தமிழ் மண்வாசனைக்குப் பதில் சிங்கள மண்வாசனையல்லவோ இங்கு இடம் பெறும்? எந்த மண்வாசனையைப் பற்றி இந்த முற்போக்கு எழுத்தாளர்கள் தம் சிறுகதைகளில் படைக்க விரும்புகிறார்கள்? அப்புக்குட்டிக்குப் பதில் அப்புகாமியைப் பற்றியும், பொன்னம்மாவுக்குப் பதில் பொடி மெனிக்காவைப் பற்றியுமா இவர்கள் எழுதப் போகிறார்கள்? காட்டிக் கொடுக்கும் கயமைத் தனத்திற்கும் எல்லை உண்டல்லவா?

(அடுத்த இதழில் முடியும்)

# நிழல்கள்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஓம்...அடுத்த வருடம், யுனிவேசிற்றி என்றென்ஸ் எடுப்பன்!'

'உங்கடை இந்து மகளிர் கல்லூரியிலைதான் ஆரும் பாஸ் பண்ணுவதில்லையாமே?...'

'ஐய...!' அவள் தன்னை அறியாமல் அழகு காட்டுகிறாள்; பின் வெட்கப்பட்டுக் கொள்கிறாள்: 'போன முறை ஒன்பது பேர் எடுபட்டவை, தெரியுமா? உங்கடை பள்ளிக்கூடத்திலைதான் ரெண்டு பேர்!...!

'தொடர்ந்து படிப்பியளா?'

'படிப்பன்! ஐயா படிப்பிப்பாராம்!...'

வெய்யில் கொளுத்துகிறது. இருந்தாற்போல்—

'ஐயோ! ஐயோ! ஆரும் ஓடியாங்கோவன்... இஞ்சை கொல்லுறார்!...ஐயோ...'

—புவனத்தின் வீட்டிலிருந்து பெருங் கூக்குரல் எழுகிறது. மூவரும் திடுக்கிட்டு எழுந்து நிற்கிறார்கள்.

ராஜகோபால் துடித்துப் போய் எழுகிறான்.

மறு கணம்—

படலையைத் திறந்து கொண்டு, கந்தையரின் வீட்டிற்குள் பாய்ந்து செல்கிறான்; நடராசாவும் தம்பியைத் தொடர்ந்து ஓடுகிறான். நடராசாவைத் தொடர்ந்து ஆச்சி, அண்ணி, சரசு எல்லாரும்...கந்தையர் ருத்திரமூர்த்தியாக நிற்கிறார். புவனம் நிலை குலைந்து போய்ச் சுவரோடு சாய்ந்து கிடக்கிறாள்.

புவனத்தின் நெற்றியிலிருந்து பீறிடுவது இரத்தமா? கந்தையரின் கையிலிருப்பது பொல்லா?

ராஜகோபால் ஒரு கணம் ஸ்தம்பித்து நிற்கிறான்; அவனையறியாமல், அடுத்த விநாடி, அவனுடைய இள நரம்புகள் முறுக இரத்தம் கொதித்து முகம் சிவக்க, கந்தையரை நோக்கி ஆவேசமாகப் பாய்கிறான்.

(தொடரும்)

# நாட்டின் அடிமைத்தளையை....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

முடியும் என்று வீராப்புப் பேசியவர் லோட் பிரெஞ்ச். அயர் ஆடவர்களைப் பலவந்தமாகப் படைக்கு அழைக்குமுன் அவர்களுடைய தலைவர்களான சின் பீன் வாதிகளை முதலில் கைதுசெய்ய வேண்டும் என ஆட்சியினர் எண்ணினர். எனினும் அமெரிக்காவின் நல்லெண்ணம் அவர்களுக்கு வேண்டியிருந்தது. அதனால் சின் பீன் வாதிகளுக்கும் ஜேர்மன் அரசாங்கத்திற்கும் இடையில் ஓர் இரகசிய ஒப்பந்தம் உண்டு என்ற கட்டுக் கதையைப் புனையத் தீர்மானித்தனர். அதற்காக 12—4—1918ல் கைதான டௌளிங்கை உதாரணமாகக் காட்டினர். ஆனால் டௌளிங்கின் தூதுபற்றி சின் பீன் தலைவர்கள் அறிந்திருக்கவில்லை என்பது ஆட்சியாளருக்கு நன்கு தெரியும். என்றாலும் அமெரிக்காவின் கண்களில் மண் தூவ வேண்டாமா?

அயர் தொண்டர் படையின் நிறைவேற்றுங் குழு கூடி நாட்டில் உருவாகி வரும் நிலையை ஆராய்ந்தது. கட்டாய இராணுவ சேவையை அயர்நாட்டின் மீது திணித்தால் நாட்டிலே இரத்தக் களரியை ஏற்படுத்தியே தீர வேண்டும் என்று முடிவு செய்தது. அந்த முடிவை நிறைவேற்றுவதில் கொளின்ஸுக்கும் இன்னும் சிலருக்கும் பெரும் பங்கு உண்டு என்பதால் பிணை கொடுக்க வேண்டிய கொளின்ஸும் மற்றவர்களும் உடனடியாகப் பிணை கொடுத்து விடுதலை பெற வேண்டும் என்றும் முடிவு செய்தனர்.

தொண்டர் படையின் அமைப்பு அதிபரான கொளின்ஸ், புறொங்கொக் முகாமில் தன்னுடன் சிறைவாசமிருந்த ஜோ ஓரெயிலியைத் தனது உதவியாளராகத் தேர்ந்தெடுத்தார். ஏமன் டகன் தொண்டர் படையின் உளவு அதிபராக இருந்தாலும் மைக்கேல் கொளின்ஸும் ஓர் ஒற்றர் படையை உருவாக்கத் தொடங்கினார். சின் பீனில் அனுதாபம் கொண்ட நெட் புறொய் என்ற இளைஞர் டப்ளின் பொலீஸ் நுண்ணாய்வுப் பகுதியில் கடமையாற்றி வந்தார். அவருடன் கொளின்ஸ் மூன்றாவது நபர் ஒருவர் மூலமாகத் தொடர்பு கொண்டார். ஹரி போலண்ட், ஜோ காவனா என்னும் இன்னுமொரு துப்பறியும் இளைஞருடன் தொடர்பு கொண்டு செய்திகளை அறிந்து மைக்கேல் கொளின்ஸுக்குத் தெரிவித்து வந்தார்.

நெட் புறோய் 15—5—1918 புதன்கிழமை கொளின்ஸுக்கு ஒரு முக்கியமான தகவலைக் கொடுத்தார். அதன்படி சின் பீன் தலைவர்களும் தொண்டர் படைத் தலைவர்களும் கைது செய்யப்பட இருப்பதாகவும் எதிர்வரும் வெள்ளிக்கிழமைதான் கைது செய்வதற்கான நாளாக இருக்குமெனவும் தெரிந்தது. இச் செய்தியைத் தொடர்ந்து, கைது செய்வதற்கான நேரம் வெள்ளிக்கிழமை இரவுதான் என ஜோ காவனா, ஹரி போலண்ட் மூலம் மைக்கேல் கொளின்ஸுக்கு அறிவித்தார்.

வெள்ளிக்கிழமை மாலை தொண்டர் படையின் நிறைவேற்றுங்குழு, பாணல் சதுக்கத்திலுள்ள 44ம் இலக்கக் கட்டடத்தில் கூடியது. அக்கூட்டத்தில், அன்றிரவு தலைவர்கள் அனைவரும் கைதுசெய்யப்படப் போவதைக் கொளின்ஸ் அறிவித்தார். தகவல் எவ்வாறு தனக்குக் கிடைத்தது என்று மட்டும் அவர் கூறவில்லை. தலைவர் டி வேலரா கைது செய்யப்படாமல் தலைமறைவாகப் போக வேண்டும் என்று குழுவினர் அனைவரும் விரும்பினர். அதன்படி கூட்டம் முடிவடைந்ததும் டி வேலரா, கிரேய்ஸ்ரன்ஸிலுள்ள அவரது வீட்டுக்குச் செல்லாமல் டப்ளினிலேயே தங்கியிருக்க வேண்டும் என அவர்கள் அவரைக் கேட்டனர். அரை மனதோடு அவர் அவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார். எனினும், கூட்டத்தின் இறுதியில், டி வேலரா தான் வீட்டுக்குப் போகப் போவதாக அறிவித்து விட்டுப் புறப்பட்டார்!

கூட்டம் முடிந்ததும் மைக்கேல் கொளின்ஸ், ஹரி போலண்ட், ஏமன் டகன் ஆகிய மூவரும் வோகன் ஓட்டலுக்குச் சென்றனர். கொளின்ஸ் தனது பழைய ஈருருளியை உருட்டிச் சென்றார். நள்ளிரவு வரை ஓட்டலில் ஆலோசனை நடாத்திவிட்டு, தத்தம் வீடுகளுக்குப் புறப்படலாயினர்.

கொளின்ஸ் ஓட்டலிலிருந்து 100 யார் சென்றதும் இராணுவ லொறியொன்று தெருவில் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டார். உடனேயே அருகிலிருந்த வீதியில் திரும்பி அண்மையிலிருந்த சின் பீன் வாதிகளுக்கு நண்பன் ஒருவன் மூலம் செய்தியை அனுப்பி வைத்துவிட்டுச் சற்று முன்னர் தன்னுடன் ஓட்டலில் தங்கியிருந்த ஏமன் டகனைச் சந்திப்பதற்காக ஈருருளியை வேகமாக ஓட்டினார். டகனைச் சந்தித்துக் கவனமாகச் செல்லும்படி கூறி, தன்னிடமிருந்த பத்திரங்களை அவரிடம் கொடுத்து விட்டுத் தன் வீடு செல்லலானார். அவர் வீட்டுக்குச் செல்வதற்கு முன்னரே தேடும் குழாம் அங்கு வந்து போயிருப்பதை அறிந்தார்.

(வளரும்)

### எளிய வாழ்க்கை

சென்ற வாரம் டாக்டர் ராதாகிருஷ்ணன் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தாரல்லவா? அவ்வமயம், ஒரு கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி பேசுகையில் டாக்டர் ராதாகிருஷ்ணனின் எளிய வாழ்க்கையிலிருந்து அமெரிக்க மக்கள் பல பாடங்கள் படிக்கமுடியுமென்றார்.

# ஆயுள் வேதப் பரீட்சை முடிவுகள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| இ. குணநாதன் | ,, |
| எஸ். மூத்துலிங்கம் | ,, |

### முதலாம் வருடம்

| | |
|---|---|
| கே. முத்தையா | 2-ம் பிரிவு. |
| எஸ். றெஜி | ,, |
| எஸ். ஸ்ரீகாந்தன் | 3-ம் பிரிவு. |
| கே. கந்தசாமி | ,, |
| எஸ். செல்லம்மா | ,, |
| எம். பகவதிப்பிள்ளை | ,, |
| ஆர். முத்துலிங்கம் | ,, |
| எஸ். ஜெயகுமார் | ,, |
| ரி. சிவபுண்ணியம் | ,, |
| எம். கோபாலன் | ,, |
| கே. பாலசிங்கம் | ,, |
| பி. சண்முகரத்தினம் | ,, |

# பேச்சுப் போட்டி விதிகளும் விபரங்களும்

தமிழ் பேசும் இளைஞருக்கு அகில இலங்கை ரீதியில் ஓர் பேச்சுப் போட்டி நடாத்தப்படும் என்ற செய்தியை கடந்த வாரம் வெளியிட்டதும், நமக்கு தினம் தினம் வந்து குவியும் கடிதங்களைப் பார்க்கையில் இப்புதிய முயற்சிக்கு இருக்கும் ஆதரவைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இன்றைய இளைஞர்களுக்கு, குறிப்பாக கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பேச்சுக் கலையில் இருக்கும் ஈடுபாட்டை நல்ல முறையில் வளர்த்துவிட நாம் நடாத்தும் போட்டி வழிவகுக்கும் என நம்புகிறோம். எனவே உங்கள் விண்ணப்பங்களைக் காலம் தாழ்த்தாது அனுப்பி வைத்து பரிசில்களைத் தட்டிக் கொள்ளும் முயற்சியில் முனையவும்.

போட்டிக்குரிய விதிகள், பேச எடுத்துக்கொள்ளும் தலைப்புகள், பரிசில் விபரங்கள், விண்ணப்பப்பத்திரம் மற்றும் விபரங்கள் இதோ!

பேச்சுப் போட்டி ஆசிரியர்

### விதிகள்

(1) 11—9—1963ல் 19 வயதுக்கு மேற்படாத எந்த இளைஞரும் (ஆண்களும் பெண்களும்) இப்போட்டியில் பங்கு பற்றலாம்.

(2) வயது குறித்து மத்தியஸ்தர்கள் சந்தேகப்பட்டால் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் காட்டத் தயாராக இருத்தல் வேண்டும்.

(3) குறிக்கப்பட்ட 5 தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவு செய்து பேசல் வேண்டும்.

(4) ஒருவர் ஆகக் கூடியது பத்து நிமிடங்களுக்கு மட்டுமே பேச அனுமதிக்கப்படுவர்.

(5) 'சுதந்திரன்' பத்திரிகையில் பிரசுரமாகும் விண்ணப்பப்பத்திரங்களையே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

(6) விண்ணப்பப்பத்திரம் அனுப்பும் போது உறையின் இடதுபுற மேல் மூலையில் 'சுதந்திரன் பேச்சுப் போட்டி' என்று தெளிவாக எழுத வேண்டும்.

### முடிவுத் தேதி

(7) 1963ம் ஆண்டு ஜூலை மாதம் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அதற்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(8) விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

பேச்சுப் போட்டி
ஆசிரியர்
சுதந்திரன்
தபால் பெட்டி 1183
கொழும்பு-12.

### தலைப்புகள்

பேச எடுத்துக் கொள்ளும் தலைப்புக்கள்:-

1. இன்றைய ஈழத் தமிழ் பேசுவோர் நிலை
2. பாரதிக்குப் பின்......
3. காந்தி அண்ணல்
4. நமது பொருளாதாரம் உயர......
5. தமிழ் மொழி—வாழ்வும் வளமும்

### பரிசில் விபரங்கள்

ஒவ்வொரு பிரிவிலும் நடைபெறும் இடை இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் முதல் மூவருக்கும் பரிசில்கள் உண்டு.

இடை இறுதிப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதங்கங்களும் மூன்றுவது இடத்தைப் பெறுபவர்களுக்கு புத்தகப் பரிசில்களும் வழங்கப்படும்.

இறுதித் தேர்வில் கலந்து முதல் மூன்று இடத்தையும் பெறுபவர்களுக்கு தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும்.

### எட்டுப் பிரிவுகள்

இடை இறுதித் தேர்வு நடைபெறும் இடங்கள்:-

1. அட்டன்
2. பதுளை
3. மட்டக்களப்பு
4. திருக்கோணமலை.
5. மன்னர்
6. வவுனியா
7. யாழ்ப்பாணம்
8. கொழும்பு

### இறுதிப் போட்டி பற்றிய விபரம்

எட்டு இடங்களிலும் இடை இறுதிப் போட்டி முடிந்ததும், அந்த இடங்களில் பரிசில் பெற்ற முதல் இருவரும் இறுதிப் போட்டியில் பங்குகொள்ள உரிமை உடையவர்கள்.

இறுதிப் போட்டி கொழும்பு நகரில் நடைபெறும். இறுதிப் போட்டியைத் தொடர்ந்து நடைபெறும் விழாவில் பரிசில் பெற்ற மூவருடைய பேச்சும் இடம் பெறும்.

இறுதிப் போட்டியில் பரிசில் பெற்றவர்களுக்கும், இடை இறுதிப் போட்டியில் பரிசில் பெற்றவர்களுக்கும் கொழும்பு நகரிலேயே பரிசில்கள் வழங்கப்படும்.

### மேலும் சில விபரங்கள்

எட்டு இடங்களிலும் நடைபெறும் இடை இறுதிப் போட்டியில் பரிசு பெறும் 24 பேருடைய புகைப்படங்களும் சுதந்திரனில் பிரசுரமாகும். இடை இறுதிப் போட்டி நடைபெறும் எட்டு இடங்களிலும் 'சுதந்திரன்' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஒருவர் சமுகம் தருவார். இடை இறுதிப் போட்டி நடைபெறும் எட்டு இடங்களுக்கு அவ்வப் பகுதியைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்தஒருவர்போட்டி ஒழுங்குகளை கவனிப்பதற்கு நியமிக்கப் படுவார். இது பற்றிய விபரங்கள் அடுத்து வரும் இதழ்களில் வெளியாகும்.

இடை இறுதிப் போட்டி நடைபெறும் காலம், இடம் பற்றிய விபரங்களுக்கும், இறுதிப் போட்டி பற்றிய விபரங்களுக்கும் சுதந்திரனை தொடர்ந்து கவனித்து வரவும்.

.........................இங்கே வெட்டுங்கள்.........................

## "சுதந்திரன்"
## பேச்சுப் போட்டி
## விண்ணப்பப்பத்திரம்

பெயர்.................................................

முகவரி........................................

..............................

மாணவராயின் பாடசாலை முகவரி:-

........................................................

....................................

போட்டியில் கலந்துகொள்ளும் இடம்.......................................

பேச எடுத்துக்கொண்ட பொருள்..................................................

பிறந்த திகதி......ஆண்டு.........மாதம்.........திகதி.........

.........................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

.....................
கையொப்பம்




# குறள் படித்துப் பயன் பெறுவோம்

—: மு. க. ராஜா :—

வேதங்கள் பல இருக்கின்றன. நூல்கள் பல இருக்கின்றன. கொள்கைகளும் மலிந்து கிடக்கின்றன. இவை எந்நாட்டிற்கும், எல்லோருக்கும், எக்காலத்தும், எப்போதும் பொருந்துவதில்லை. ஏனெனில் எல்லாரும் ஒன்றிலேயே தமக்கு வேண்டிய உண்மையை — நீதியை — காண்பதில்லை. ஆனால் உலகிலேயே சிறந்த நூல் ஒன்றிருக்கிறது. அது அறமே கொள்கை எனக் கொண்டது; உலக—மக்கள்—ஒற்றுமையே சுபிட்சம் எனக் கண்டது; 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்று 'ஆண்டவன்' கொள்கையைப் பரப்புவது. ஆமாம்! அந்த அறிவுக்களஞ்சியமான நூல் 'திருக்குறளே' யாகும்.

தமிழ் நாட்டில், தமிழரிடையே வாழ்ந்த தன்னிகரற்ற மாபெரும் தமிழ்ப் பெரியார் அருளியதுதான் திருக்குறள் என்றாலும், அது இன, குல, நாட்டு, மொழிப் பாகுபாடின்றி "எல்லாரும் ஓரினம்" என்றபடி உலக மக்கள் எல்லோருக்குமே அறிவொளியையும், ஞான வெளிச்சத்தையும் பரப்ப வல்லது. அதையிட்டு தமிழர் நாம் பெருமைப்பட வேண்டும். 'வாழ்க திருக்குறள்' "வளர்க திருக்குறள் கொள்கை!" என வாழ்த்தவும் வேண்டும்.

திருவள்ளுவரின் குறள், பல விதத்திலும், ஏனைய நூல்களிலிருந்து மாறுபடுகிறது. ஒவ்வொரு மறையைப் போதிக்கும் நூலும் மற்ற மறைகளைப் பற்றிக் குறை கூறுகின்றன. பாகுபாட்டை வளர்க்கின்றன. என்றாலும் கொண்டிருப்பது 'கடவுள்' என்ற ஒரே நோக்கத்தைத்தான். திருக்குறளும் கடவுளைப் பற்றிப் போதுக்கிறது. ஆனால் அதில் எவரும், எவரோடும் துவேசம் கொள்ள முடியாது. வாய்ப்பே இல்லை. இந்த ஒரு காரணமே போதும் குறளை மறையாகக் கொண்டு எல்லோரும் வேற்றுமையின்றி இருக்கலாம் என்பதற்கு. ஏனெனில் இன்று உலகத்திலுள்ள எல்லோரையும் கூட ஒரே குடும்பத்தினராக்க வல்லது மறை-வேதம்—ஒன்று தான். எனவே குறளை, மறை என நாம் துணிந்து கொள்ளலாம்.

இவ்வுலகிலுள்ள எல்லா நூல்களையும் நம்மால் கற்க முடியாது. வசதியும் வாழ்க்கையும் பெரும்பாலோருக்கு இடந்தராது ஆனால் முக்கியமான நூல்கள் சிலவற்றை நாம் கற்றிருக்க வேண்டும். அப்படி அவசியம் கற்றிருக்க வேண்டிய நூல்களில் முதலிடம் பெறவல்லது திருக்குறளே. முக்கியமான ஓரிரு நூல்களையேனும் கற்றிரா விட்டால்,

"நுண்மாண் நுழைபுலம்
இல்லான் எழில் நலம்
மண்மாண் புனைபாவை
யற்று"

என்று குறளே கூறுகிறது.

திருக்குறள் படித்துத் தேர்ச்சியடைவதானது நல்ல கல்வியறிவு பெறுவதாகும்.

கல்வியின் பயனை,

"எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும்
உயிர்க்கு"

என்று 'குறள்' விளக்கும் சிறப்பறிந்து, "கற்கை நன்றே, கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே!" யெனக் கொண்டு "ஓதுவது ஒழிக்கக்" கூடாது. முக்கியமாக தினம் ஒரு குறளையாவது படித்துப் பயன் பெறல் வேண்டும்.

நாம் திருக்குறளறியாத் தமிழர் என்று கூறுவது வெட்கப்பட வேண்டிய தொன்றாகும். எனவே எல்லோரும் தம்மோடு ஒரு 'திருக்குறள்' இன்றி இருக்கவே கூடாது.

## கல்வியே கருந்தனம்

அன்புள்ள மருமக்களே!

தமிழரசுக் கட்சியின் அருந் தொண்டரும், அறவழித் தலைவருமான ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. கந்தையா அகால மரண மெய்தியது உங்கள் அனைவருக்கும் அதிர்ச்சியைத் தந்திருக்கலாம். இந்த வாசகத்தை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் பொழுது கூட, அந்த அதிர்ச்சியினின்றும் மீண்டிருப்பீர்களோ என்பது அம்மிச்சமே.

திரு. கந்தையாவின் சேவை இன்னும் அதிகமாகத் தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டியுள்ள நேரத்தில், அவரைக் காலன் எங்களிடமிருந்துபறித்துக்கொண்டு சென்று விட்டான்.

அவரின் ஆத்மா சாந்தியடைக என்று பிரார்த்திப்பதுடன், அவருடைய மரணத்தால் கவலையுற்றிருக்கும் அவரது அருமை மனைவி, மக்களுக்கும் உங்கள் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

## நூலின் பெயர் என்ன?

—'தாமரையாள்'—

6 எழுத்துக்களாலான ஒரு சொல். அந்தச் சொல் ஒரு நூலைக் குறிக்கிறது. 1ம் 2ம் எழுத்துக்கள் அழகைக் குறிக்கின்றன. 1ம் 2ம் 4ம் எழுத்துக்கள் முறுக்குவதைக் குறிக்கின்றன. 1ம் 3ம் 4ம் எழுத்துக்கள் திசையைக் குறிக்கின்றன. 4ம் 5ம் 6ம் எழுத்துக்கள் 2 அடிகள் கொண்ட கவிதையைக் குறிக்கின்றன.

# கழகச் செய்திகள்

## மொழிவழி பிரிந்தால்தான் வாழலாம்

### மட்டக்களப்பில் அ. எ. வி. சங்கக் கூட்டம்

வகுப்புவாதம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியமல் எங்களைப் பார்த்து 'வகுப்புவாதிகள்' என்று அரசாங்க இலிகிதர் சங்கத்தினர் கூறுகின்றனர். உண்மையான வகுப்புவாதிகள் யார்? மொழிச் சட்டத்தால் தமிழ அரசாங்க ஊழியர்களின் உரிமைகள் புதைகுழிக்குள் இட்டுச் செல்லப்பட்டபோது எதிர்ப்போ—மறுப்போ தெரிவியாதிருந்துவிட்டு, 'மொழிவழி பிரிந்தால் வாழுவோம், இன்றேல் வீழ்வோம்' என்ற பேருண்மையை—தன்மான உணர்வை நடுவமாக வைத்தே எங்கள் உரிமைக் குரலை எழுப்பி வருகிறோம்.

மட்டக்களப்பு அரசடிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்கக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த திரு. வை. சொக்கலிங்கம் இவ்வாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், 'இன வேற்றுமை கடந்த தொழிலாளர் ஒற்றுமை என்ற கோஷத்துக்கு குந்தகம் விளைவிக்கும் அளவுக்கு கருமமாற்றியவர்கள் அரசாங்க இலிகிதச் சங்கத்தினரே. உண்மையான வகுப்பு வாதிகள் அவர்களே தவிர நாங்களல்ல.

சிங்களம் மட்டும் மொழிச் சட்டத்தினுல் தங்கள் உயிருக்குயிரான மொழி உரிமைகளைப் பறிகொடுத்துவிட்டு தமிழ் அரசாங்க ஊழியர்கள் தத்தளிக்கையில் அவர்களுடைய உரிமைகளையிட்டு எதுவிதமான தீர்க்கமான முடிவும் கூருதிருந்து விட்டு இன்று எம்மைத் தங்களுடன் மீண்டும் ஒத்துழைக்கும்படி கோருகிறார்கள். அவர்கள் மீண்டும் எங்களைத் தங்களுடன் இணையுமாறு அழைப்பதற்குக் காரணம் எங்களுடைய ஒற்றுமையும், அவர்களுடைய பெலவீனமுமேயாகும்.

'எங்கள் சங்கத்தின் இறுதி மூச்சு ஓயும்வரைகூட உரிமைக் கிளர்ச்சியை நடாத்திக்கொண்டே இருப்போம். உரிமைக்கு மட்டுமன்றி தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களினது தன்மானத்துக்கும் சவால் விடுவதாக இருக்கும் அந்த அரசகரும மொழிச் சட்டத்துக்கு நாங்கள் ஒருபோதும் அடங்கி அடிமையாக மாட்டோம். தொடர்ந்து தொடுப்போம் போரை. இறுதி வெற்றி திண்ணம்.'

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்டன:-

(அ) மட்டக்களப்பு நகர எல்லைக்குள் இருக்கும் அரசாங்க வீடுகளை, மணமாகிய தமிழ் அரசாங்க ஊழியர்களின் விண்ணப்பங்களையும் கவனியாது, அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் நிராதரவாய் விட்டு விட்டு மணமாகாத சிங்கள அரசாங்க — ஊழியர்கட்கு மாத்திரம் மட்டக்களப்பு மாகாண அதிபர் கொடுப்பதை இக்கிளைச் சங்கம் வன்மையாக ஆட்சேபிப்பதோடு, இவ்விதமான பாரபட்சமான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தித் தகுதிவாய்ந்த ஊழியர்களுக்கே கொடுக்கும்படி வற்புறுத்துகின்றோம்.

(ஆ) இப்பொழுது அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதால், இது சம்பந்தமான திறைசேரிச் சுற்றறிக்கையை உடனே இரத்துச் செய்யும்படியும் இச்சங்கம் வற்புறுத்துகின்றது.

நடப்பு வருடத்துக்குப் பின் வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. வை. சொக்கலிங்கம், உப தலைவர்: திரு. அ. பரமேஸ்வரன், செயலாளர்: திரு. அ. புவனேசன், உதவிச் செயலாளர்: திரு. இர. நாகலிங்கம், பொருளாளர், திரு. அ. பொன்னுத்துரை.

மட்டக்களப்பிலே கிளைச் சங்கத்தை அயராத உழைப்பினுல் நிறுவி, அதன் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்த சங்கச் செயலாளரான திரு. அ. புவனேசன் அவர்கள், கொழும்பு தாய்ச் சங்க நிருவாக சபைக்குப் பிரதிநிதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இவரது முயற்சியின் பயனுக இன்று மட்டக்களப்பு அ. எ. வி. சங்கக்கிளை வளர்ச்சியடைந்துள்ளதோடு பல பல புது அங்கத்தவர்களும் சேர்ந்துள்ளார்கள்.

இறுதியில் செயலாளர் திரு. அ. புவனேசன் அவர்களின் நன்றியுடன் கூட்டம் முடிவெய்தியது.

### பழைய மாணவர் கழகம்

தாராக்குண்டு முஸ்லிம் மஹா வித்தியாலயப் பழைய மாணவர் கழக பதினொராவது வருடாந்தக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கடந்த பதினொரு வருட காலமாக இக் கழகம் மேற்படி வித்தியாலயத்திற்கு பலவித சேவை செய்து வந்திருக்கின்றது. இக் கழகத்தினர் விளையாட்டுப் போட்டிகள், கலைவிழாக்கள், ஆகியவற்றை வருடா வருடம் பொறுப்பேற்று நடாத்துகின்றனர். இவ் வித்தியாலயத்திற்கு. கட்டிட வசதிகள், இலவசப் புத்தகங்கள், மாணவருக்கு இலவச உடைகள் ஆகிய வசதிகள் செய்து கொடுக்கின்றன. மேலும் மாணவருக்கும் பொது மக்களுக்கும் பயன்படும் வகையில் இவ்வித்தியாலய அருகாமையில் ஒரு நூல் நிலையத்தை நிர்மாணிக்கும் பணியில் நிருவாகக் குழுவினர் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

பின்வருவோர் புதிய நிருவாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: எம். சி. ஏ. லத்தீப், உப தலைவர்: கே. எச். மரைக்கார், காரியதரிசி: ஏ. தாவூத், உப காரியதரிசி: எம். யூனூஸ், தனாதிகாரி: எச். எம். கௌது.

ஒன்பது பேரைக்கொண்ட நிருவாகக் கமிட்டியும் அமைக்கப்பட்டது.

## தமிழரசுக் கட்சி வாலிப முன்னணிக் கூட்டம்

### மண்டைதீவில் நடைபெற்றது

தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியினரின் மாபெரும் பொதுக் கூட்டமும், மண்டைதீவு கிளை திறப்பு விழாவும் சனிக்கிழமை 11-5-63 பி. ப. 5 மணியளவில் மண்டைதீவு திடலில் கிளைத் தலைவர் திரு. சி. பாலசிங்கம் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

வாலிப முன்னணித் தலைவர் திரு சி. கதிரவேல் பிள்ளை அவர்கள் பேசுகையில் "சுதந்திரமான சூழ்நிலையில்தான் மக்கள் சுகம் காண முடியுமே தவிர அடிமையான சூழ் நிலையில் சுதந்திரம் அனுபவிக்க முடியாது. எனவே இளைஞர்களாகிய அனைவரும் அரசாங்க உத்தியோகங்களை மறந்து கைத்தொழில் கமத் தொழிலில் ஈடுபடல் வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் பொருளாதார நிலை வளர சிறந்த வழி உள்நாட்டில் உற்பத்தியை பெருக்குதல் மட்டுமே" என்றார். வாலிப முன்னணி செயலாளர் திரு. சோ. சிவரெத்தினம் பேசும்பொழுது, சுதந்திரம் என்றுல் கடையில் வேண்டும் பொருள் அல்ல, உழைப்பாலும், விடா முயற்சியாலும் கண்ணீரும் செந்நீரும் சிந்தியும் உடைமைகளையும் உயிரையும் கொடுத்தும் தான் பெற முடியுமென்றுர்.

அடுத்து, வட்டுக்கோட்டை பா. உ. திரு. அ. அமிர்தலிங்கம் பேசினுர். அங்கு குழுமியிருந்த இளைஞர் கூட்டம் எதிர்வரும் போராட்டத்தின் உன்னத வெற்றிக்கான அறிகுறியென்றும், கட்சி தமிழ் பேசும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் கடைசிவரை நிறைவேற்ற அரும்பாடு படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு. பிரான்ஸிஸ் பெரேரா, திரு. ஐயாத்துரை, திரு. திருநாவுக்கரசு ஆகியோரும் பேசினர்.

### வறக்காப்பொல சைவ மகாசபை நிர்வாகிகள் தெரிவு

வறக்காப்பொல சைவ மகாசபையின் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. வி. அருணகிரி, உப தலைவர்: திரு. வி. சாமிநாதன், கௌரவ தலைவர்கள்: டாக்டர் ஆர். கனகசிங்கம், திரு. அ. மாணிக்கம், திரு. கே. கதிர்காமர், காரியதரிசி: திரு. பொ. ஐயம்பிள்ளை, உப காரியதரிசி: திரு. கே.கே.வி. ஆனந்தசர்மா, தனாதிகாரி: திரு. வி. கருப்பையாபிள்ளை, உப தனாதிகாரி: திரு.வி. தருமலிங்கம், கணக்குப் பரிசோதகர்: திரு. வி. சுப்பிரமணியம்பிள்ளை, பிரதம போஷகர்: திரு. அ. இராசையா.

ஈற்றில் தலைவர் திரு. வி. அருணகிரியின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## 'தம்பட்டம் வேண்டாம் திறமையே வேண்டும்'

### எழுத்தாளருக்கு அறிவுரை

'அடிக்கடி அறிக்கைகள் வெளியிடுவதிலும் வீடு வீடாகச் சென்று தாங்கள் தாம் எழுத்தாளர் என்று தம்பட்டமடிப்பதிலும் இன்று ஈழத்திலுள்ள எழுத்தாளர் பலர் ஈடுபட்டிருக்கின்றனரே தவிர மக்களை நல்வழிப் படுத்தும் இலக்கியங்களைப் படைக்கின்றுர்களில்லை. இந்தியத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை எள்ளி நகையாடுவது கூடாது. ஆறுமுகநாவலர், தாமோதரம் பிள்ளை முதலியோரின் பெருமையைப் பேசுவதுடன் பல எழுத்தாளர்கள் திருப்தியடைந்துவிடும் இவ்வேளையில், ஓர் இலங்கைப் பெண்மணி இந்தியாவின் தலைசிறந்த வாரப்பத்திரிகையான 'ஆனந்த விகடனி'ல் எழுதிய கதை வாரத்தின் மிகச் சிறந்த கதையாக மதிக்கப்பட்டு முத்திரைக் கதையாக வெளியானதைக் கண்டு நாம் பெருமையும் பூரிப்பும் அடைகிறோம். 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் அமர வாக்குக்கொப்ப எமது நாட்டைச் சேர்ந்த 'குந்தவை' என்ற பெண் எழுத்தாளரின் திறமையை ஆனந்தவிகடன் நன்று உணர்ந்து கௌரவித்திருக்கின்றது. ஈழத்திலுள்ள மற்றைய எழுத்தாளர்களும் தங்கள் திறமையை இப்படியாக வெளிநாட்டிலும் நிரூபிக்க வேண்டும்.' இவ்வாறு அண்மையில் நடைபெற்ற கந்தரோடை சனசமூக நிலையத்தின் விசேட கூட்டமொன்றில் தலைமை வகித்துப் பேசிய திரு. எஸ். ஆர். பாலசிங்கம் கூறினுர்.

நிலையத்தின் அலுவல்களைத் தொடர்ந்து தமிழிலேயே செய்துகொள்வதென்று கொண்டு வந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. டாக்டர் சுப்பிரமணியம் வெற்றிக் கிண்ணத்திற்கான கைப்பந்தாட்டப் போட்டியை வெகு சிறப்பாக நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### ஐக்கிய மட்கல அபிவிருத்திச் சங்கம்

ஐக்கிய மட்கல அபிவிருத்திச் சங்கத்தின் 10வது வருடாந்தப் பொதுக் கூட்டம், மேற்படி சங்க மன்றத்தில் சங்கத் தலைவர் திரு. சி. தம்பிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புது வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. வே. கனகசபாபதி, உப தலைவர்: திரு. சி. இராமலிங்கம், காரியதரிசி: திரு. சி. தம்பிப்பிள்ளை, உப காரியதரிசி: திரு. ச. நடராசா, தனாதிகாரி: திரு. சி. ஐயாத்துரை, நிர்வாக சபை அங்கத்தவர்கள்: திரு. தா. ஆறுமுகம், திரு. ந. காசிப்பிள்ளை.

### நல்லூர் தெற்கு மாதர் முன்னேற்றச் சங்கம்

நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் மாதர் முன்னேற்றச் சங்க 4-ம் வருடாந்தக் கூட்டத்தின் பொழுது இச்சங்கம் ஏற்கனவே ஆரம்பித்த கைத்தொழில்களைப் போல் தும்புக் கைதொழில், பின்னல் வேலைகள் போன்றவற்றை ஆரம்பித்து வைக்க வேண்டுமெனவும், இப்பொழுது சனி, ஞாயிறுகளில் ஓர் இலவச தையல் கைப்பணி வகுப்பை நடாத்துவதற்கு அரசாங்கம் முன் வந்திருப்பதாகவும், அதைப் பயன்படுத்தும்படியும் இதன் போஷகர், அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கச் செயலாளர், திரு. த. இராசரெத்தினம் வேண்டிக் கொண்டார்.

22-5-63-ல் நல்லூர் தெற்கு ஸி. ஸி. மிசன் பாடசாலையில் கூடப்பட்ட கூட்டத்தில் தலைவி ஸ்ரீமதி ஏம்புசரஸ்வதி தலைமை தாங்கினுர். சென்ற ஆண்டின் அறிக்கை, வரவு செலவுக் கணக்கு முதலியன வாசிக்கபட்ட பின்னர், புது வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவி: ஸ்ரீமதி ஏம்புசரஸ்வதி, உப தலைவிகள் திருமதி திருப்பதி நடராசா, திருமதி யோகலட்சுமி சோமசுந்தரம், காரியதரிசி: செல்வி சின்னையா கனகவதி, உப காரியதரிசி: செல்வி க. இன்பராணி, தனாதிகாரி செல்வி இராசரெத்தினம் அன்னராச குமாரி, உப தனாதிகாரி: செல்வி பொ. லீலாவதி, கணக்குப் பரிசோதகர்: செல்வி க. இன்பராணி.

நிர்வாக சபை: ம. குணமலர், சூ. சிசிலியா, சூ. பற்றீசியா, இ. இராஜேஸ்வரி, ம. இராசாத்தி, பரமேஸ்வரி சின்னத்துரை.

### இளம்பிள்ளைவாத நோய் தடுப்பு

நல்லூர் தெற்கு சனசமூக நிலைய அங்கத்தவர்கள், இளைஞர் முன்னேற்றக் கழகம், இளம் விவசாயக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த தொண்டர்கள் முப்பதிற்கு மேற்பட்டோர், இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு மருந்தை நானூறுக்கும் மேற்பட்ட பிள்ளைகளுக்கு விநியோகித்தனர். தொண்டர்களின் முயற்சியால் சுமார் 25 டாக்டர்களின் சேவை பெறப்பட்டது. தொண்டர்களின் ஒத்துழைப்புக்கும், முயற்சிக்கும் சுகாதாரப் பரிசோதகர் திரு. கு. நடராசா நன்றி தெரிவித்தார். சன சமூக நிலையத் தலைவர் திரு த. இராசரெத்தினம் சுகாதாரப் பரிசோதகருக்கு நன்றி தெரிவித்ததுடன், தொண்டர் இயக்கத் தலைவர் திரு. வி. ஸி. குஞ்சிதபாதத்தின் சேவையையும் பாராட்டினுர்.

## நமக்குள்ளே...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளின் போலிக் கொள்கைகளையும் தத்துவங்களையும் பிய்த்தெறிந்தார் பேராசிரியர்.

மாநாட்டை ஒழுங்கு செய்தவர்களின் முகத்தில் ஈயாடவில்லை. "பேய்த்தனமாக இதுகளை அழைத்து விட்டோமே!" என்று தங்களுக்குள் குறைப்பட்டுக்கொண்டார்கள். முன் சொன்னவர்கள் பேசி முடிந்ததும், மாநாட்டில் கைதட்டுவதற்காக அழைத்து வரப்பட்டிருந்த கையாட்கள் விஷயந் தெரியாது ஒரே ஆரவாரத்துடன் கைதட்டி 'தலைக்கிடாய்'களின் ஆத்திரத்தையும் சம்பாதித்துக் கொண்டார்கள். இப்படிக் கிணறு வெட்டப் போய் பூதத்தைக் கண்டு பயந்த இவர்கள், இப்போது ஒரு சிறு கூட்டத்தையேனும் நடத்துவதற்குத் துணிவின்றி மூலைக்கு மூலை நின்று 'குசு குசு'க் கூட்டம் நடத்துகின்றுர்கள்.

மாநாட்டில் நடந்த ஒரு வேடிக்கையை பற்றி பின்னர் எழுதுவேன்.


சென்னையில் நான்கு படமாளிகைகளில் 100-வது நாள் விழா கொண்டாடிய சிறந்த திரைச் சித்திரம்!

# 7-வது வெற்றி வாரம்!

## கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 6 திரைகளில்

பி. எஸ். வி. பிக்சர்ஸ்



# ஆலயமணி

★ சிவாஜி கணேசன்
★ பி. சரோஜாதேவி
★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ ஆர். விஜயகுமாரி
★ எம். ஆர் ராதா
★ பி. எஸ். வீரப்பா
மற்றும் பலர்

இசை:
விஸ்வநாதன்—ராமமூர்த்தி

டைரக்ஷன்:
கே. சங்கர்

உள்ளத்தைத் தொடும் உருக்கமான குடும்பப் படம்

உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்

சிவாஜியின் சிறிய நடிப்பைக் காட்டும் சித்திரம்

பார்க்கப் பார்க்க நவரசம் ததும்பும் நல்ல கதை!


**இன்றே பாருங்கள்!**

---

## சிலோன் எண்டர்டெயின்மென்ட்ஸ்

திரைகளுக்கு

விருந்தளிக்க வருகிறது!



தாங்கொணுச் சுமையைத் தலையிலே சுமந்து ஏங்கித் தவித்த இளைஞனின் சோக வரலாறு. உள்ளத்தைக் கிள்ளி உணர்வுக்கு வெறியூட்டும் உணர்ச்சி நிறைந்த சித்திரம்!

விசாலாட்சி பிலிம்சாரின்

# சுமைதாங்கி

## (ஆயிரம் வாசல் இதயம்)

திரைக் கதை—வசனம்—டைரக்ஷன்

**—ஸ்ரீ த ர்—**

ஜெமினிகணேசன் (சுமைதாங்கியில் நடித்ததற்காக 1962ம் ஆண்டு சிறந்த நடிகர் எனப் பாராட்டுப் பெற்றவர்) தேவிகா

முத்துராமன், சாரங்கபாணி, நாகேஷ், விஜயலக்ஷ்மி

முதலியோர் நடித்தது

பாடல்கள் : கண்ணதாசன் இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி

---

## 3-வது வெற்றி வாரம்!

எல்பின்ஸ்டன் [மருதானை] ரொக்ஸி [வெள்ளவத்தை] வின்சர் [யாழ்ப்பாணம்]
நெல்சன் [திருகோணமலை] இம்பீரியல் [மட்டக்களப்பு] வேல்ஸ் [கண்டி]
அசோகமாலா [நீர்கொழும்பு] கிங்ஸ் [பதுளை] ரீகல் [கம்பளை]

ஆகிய திரைகளில்

# மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்



ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி, எம். ஆர். ராதா, கண்ணாம்பா, நாகையா

நடித்தது

இசை: ஆதிநாராயணராவ்

★ மந்திர ஜாலம்
★ இனிய பாடல்கள்
★ நடனங்கள் நிறைந்த சித்திரம்!

## 4-வது வெற்றி மாதம்!

கொட்டி திரையில்

ஜெமினி கணேசன்—சாவித்திரி—அசோகன்
சந்திரபாபு—எம். ஆர். ராதா—விஜயகுமாரி
எஸ். வி. சுப்பையா—ராஜம்மா—கமலஹாசன்

நடித்த

# பாத காணிக்கை

---

## மகத்தான 4வது வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

அஞ்சலிதேவி, மனோகர், நரசிம்மபாரதி, மாதுரிதேவி,
காலஞ்சென்ற கலைவாணர்
என். எஸ். கிருஷ்ணன்,

நடித்த

# தோழன்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஜூன் மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.